
# ஒரு மாலை பூத்து வரும்!



மேலாண்மை. பொன்னுச்சாமி

கங்கை புத்தக நிலையம்

# ஒரு மாலை பூத்து வரும்

மேலாண்மை. பொன்னுச்சாமி

கங்கை புத்தக நிலையம்
13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : டிசம்பர் 2000

உரிமை ஆசிரியருக்கு

விலை : ரூ. 35-00

| | |
|---|---|
| Title | ORU MALAI POOTHU VARUM |
| Author | Melanmai. Ponnusamy |
| Subject | Short Stories |
| Language | Tamil |
| Edition | First Edition, December, 2000 |
| Pages | 180 |
| Publication | **Gangai Puthaka Nilayam**<br>13, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar,<br>Chennai - 600 017. |
| Price | Rs. **35-00** |

---

ஒளி அச்சு : நேரு அச்சகம், இராயப்பேட்டை, சென்னை - 600 014.

**Printed at : Mani Offset**
**112/2, Bells Road, Triplicane, Chennai - 5.**
Phones : 8555 249, 8588 186

## சமர்ப்பணம்

தோழமைத் தோளாகவும்
பேரன்புப் பிரவாகமாகவும் திகழ்ந்து
என் இலக்கியப் பயணத்திற்கு
தெம்பும் நிழலும் தந்த
என் இனிய நண்பர்
'சீ பி' என்ற
**சி. பாலசுந்தரம் அவர்களுக்கு....**

# முன்னுரை

1994 மே யில் ‘சிறுகதைப் படைப்பின் உள் விவகாரம்’ என்ற எனது இலக்கியக் கட்டுரை நூல் வெளியாயிற்று. வந்த வருஷமே விற்றுத் தீர்ந்தது. ஏகப்பட்ட பாராட்டுகள். எழுதிக்கொண்டிருந்த இளம் எழுத்தாளர்களும், எழுதும் தினவோடு வலம் வந்துகொண்டிருந்த இளைஞர்களும் ‘அந்த நூல் தங்கள் சொந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு, பகிர்ந்துகொண்டு, வழிநடத்துகிற நூலாகத் திகழ்கிறது’ என்று பரவசத்தோடு பாராட்டினார்கள், பிரமித்தார்கள்.

வந்த வருஷமே விற்றுத் தீர்ந்துவிட்டபோதிலும் மறுபதிப்பே காணாமல் கிடக்கிறது என்பதொரு கசப்பான சோகம் ஒரு பக்கம் இருந்தபோதிலும், அந்த நூலுக்கு இன்றளவிலும் பாராட்டுக் கடிதங்களும், ‘நூல் எங்கே கிடைக்கும்’ என்று கேட்டு எழுதுகிற கடிதங்களும் வந்தவண்ணமிருக்கின்றன. கேரளாவிலிருந்து ஓய்வு பெற்ற ஒரு கல்லூரிப் பேராசிரியர் அந்தப் புத்தகம் எங்கே கிடைக்கும் என்று கேட்டுக் கேட்டு நச்சரிக்கிறார். விற்பனையிலும், கைவசமில்லாத புத்தகம் பற்றி நான் என்னத்தைப் பதில் எழுத ? மௌனம் கடைப்பிடிக்கிறேன். வேறு வழி ?

இத்தனை பாராட்டுகளுக்கும் பிரமிப்புகளுக்கும் விசாரிப்புகளுக்கும், எல்லா ஆண்டுகளுக்கும் புதுமையான தேடல்களுக்கும் உள்ளாகியிருக்கிற அந்த நூலில் அப்படி என்ன மேதமையானதை எழுதிவிட்டேன்? சிறுகதை என்றால் என்ன என்று இலக்கணம் நிர்ணயித்துவிட்டேனா? இதுதான் சிறுகதை, இப்படித்தான் சிறுகதை என்று நிரூபித்துக் காட்டிவிட்டேனா? சிறுகதை இப்படி எழுதலாம், இவ்வாறு எழுதலாம், இன்ன இன்ன மாதிரியில் எழுதிக் கற்றுக்கொள்ளலாம் என்று விலாவாரியாக வெளிச்சம் காட்டியிருந்தேனா? சிறுகதை எழுதுவது எப்படி என்ற நுட்பத்தை–கலைப்பிரம்ம ரகசியத்தை– சிருஷ்டி மனோபாவ உள் வித்தைகளை–தொழில் நுணுக்க விஷயங்களை விளக்கியிருந்தேனா?

சிறுகதையின் வரலாறு சொல்லியிருந்தேனா? வளர்ச்சியின் வரலாறு சொல்லியிருந்தேனா? அழகியலின் தத்துவக் கூறுகள் பற்றிக் கூறியிருந்தேனா?

'ஆகா, ஓகோ' என்று பாராட்டுகிற அளவுக்கு, வாசிக்கப்படுகிற அளவுக்கு, வாசிக்க இன்னும் ஆசைப்படுகிற அளவுக்கு, அப்படி என்னதான் மேதமையாக எழுதியிருந்தேன்?

உண்மை என்னவென்றால்.... இத்தனை கேள்விகளுக்கும் நேர் விரோதமாக எழுதியிருந்தேன். கூச்ச மில்லாத நேர்மையோடு ஒப்புக்கொள்வதென்றால்— எனது பேதமையைப் பட்டியலிட்டிருந்தேன், அந்த நூலில்.

சிறுகதை எழுதத் தெரியாமல் தத்தளித்த கதை— எழுத முயன்று தோற்ற கதை— இலக்கணம் புரியாமல் தடுமாறிய கதை— கதையின் இலக்கணம் புரியாமல், வடிவ உண்மை புரியாமல்— மனசுக்குப் பட்ட நிசத்தை வெள்ளந்தியாக எழுதிக் குவித்த கதை என்று எனது பேதமைகளையே பட்டியலிட்டிருந்தேன்.

இத்தனை சிறுகதைகள் எழுதிக்கொண்டிருக்கிற எனக்கு இன்றைக்கும் 'சிறுகதை என்றால் என்ன' என்ற கேள்விக்கு நேர்மையாக–உண்மையாக–நுட்பமாக பதில் சொல்லத் தெரியவேயில்லை என்ற சத்தியத்தை வெட்கமில்லாமல் ஒப்புக்கொண்டிருந்தேன், அந்த நூலில். அந்தத் தர்ம பலத்தில் படைப்பனுபவங்களை அதன் சறுக்கல்களை–தைர்யமாகப் பகிர்ந்திருந்தேன்.

சரி... இதெல்லாம் 1994ல் வெளிவந்த 'சிறுகதைப் படைப்பின் உள்விவகாரம்' என்ற நூலில். இப்போது 2000. ஆறாண்டுகள் கடந்துவிட்டன.

+2 முடித்துவிட்டு, கல்லூரி போனால் ஆறாண்டுகளில் ஐ.ஏ.எஸ். ஆகிவிடலாம். அந்த ஆறாண்டு கால நீட்சியில் நான் என்னவாகியிருக்கிறேன்? தேறியிருக்கிறேனா?

இன்றைக்கும் 'சிறுகதை என்றால் என்ன' என்ற கேள்விக்கு என்னால், நான் ஒப்புக்கொள்கிற அளவுக்கு சரியான நுட்பத்தில் சொல்லத் தெரியாது என்பதே சத்தியம்.

இலக்கணம் தெரியாமலேயே இலக்கியம் படைத்துக் கொண்டிருப்பது பலமா, பலவீனமா என்பதெல்லாம் தெரியாது, எனக்கு. ஆயினும் வாழும் வாழ்க்கையை–படியும் உண்மையை–நுட்ப மாறுதல்களை–பண்பாட்டு உணர்வு வித்தியாசத்தை நான் புரிந்திருக்கிற விதத்தில் பகிர்ந்துகொண்டேயிருக்கிறேன், படைப்புகளாக.

இலக்கணம் தெரியாமல் விமர்சகராவதுதான் பிழை. இலக்கணம் தெரியாமல் இலக்கியம் படைப்பது பிழையல்ல. இலக்கணம் என்பது மொழியின் கணிதம். வார்த்தைகளின் விஞ்ஞானம்.

கணிதம் தோற்கிற இடத்தில்தான் இதயம் நெகிழ்கிறது; ஈரம் படர்கிறது; அன்பு மலர்கிறது; வாழ்க்கை எழுகிறது; உள்ளம் மெருகேறுகிறது; இலக்கியம் பூக்கிறது.

ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது என்றென்றும் மாறாத–உலர்ந்த கணிதம். ஒன்றும் ஒன்றும் சேர்ந்தால்... ஒன்று என்பது காதலின் வெற்றி. தாம்பத்ய முகிழ்வு. ஒன்றும் ஒன்றும் மூன்று என்றால் தாம்பத்யத்தின் வெற்றி. ஒரு மழலையின் முகிழ்வு. ஒருருவான ஈருயிர்களின் ஓர் உயிர். ஓருயிர்களான ஈருருவின் ஒருரு.

மொழியின் கணிதமே, இலக்கியமாகிவிடாது. வடி வமையாத வாழ்வனுபவ ஆழ்மன உணர்வுகளில் மொழி கரைகிறபோதுதான் இலக்கியத்தின் வர்ணமே எழுகிறது.

இன்றைக்கும் எழுத்துக்குள் பிடிபடாத நாட்டுப்புற இலக்கியங்கள் உன்னத இலக்கியங்களாக ஒளி வீசுகின்றன. அதைப் படைத்த வியர்வை மக்களுக்கு இலக்கணம் தெரியாது. எழுத்து தெரியாது. ஆனால் வாழ்க்கை தெரியும். வாழ்வின் அடிகள் தெரியும். அடியின் ரணம் தெரியும். அந்த ரணத்தின் துடிப்பு தெரியும். வலியில் துடிக்கும் இதயத்தின் ஆழ்நிலைப் பெருமூச்சுதான், உன்னத இலக்கியமாகிறது.

நானும் ஒருவகையான நாட்டுப்புற இலக்கியக்காரன் தான். படிப்பேயில்லை. வெறும் ஐந்தாம் வகுப்பு. ‘எழுவாய் பயனிலை’ என்றால் என்னவென்று இப்போதும் தெரியாது, சத்தியமாக. ‘மனப்பூ’ தொகுப்பின் தயாரிப்பில் கடைசி ஃப்ரூப் வந்தது. ‘இ’ ‘ப்’ ‘க்’ ‘ல்’ போன்ற எழுத்துக்களைப் போடக்கூடாத இடத்தில் நான் போட்டிருந்ததையும், போட வேண்டிய இடங்களில் போடாமல் விட்டிருந்ததையும் பதிப்பகத்தார் திருத்தியிருந்தபோதுதான்... எது சரியான பிரயோகிப்பு என்ற வெளிச்சமே எனக்குள் வந்தது.

இலக்கணத்தில்தான் நான் பலவீனம். வாழ்க்கை யிலல்ல. யாரும் பார்த்தறியாத–பார்க்கக் கிடைக்காத–கரிசல் காட்டு வாழ்க்கையின் ஆழ் ரணங்கள் தெரியும். அந்த

ரணங்களின் வலியதிர்வு தெரியும். ரணம் உதிரும் வாழ்வின் சீழும் தெரியும். சீழின் நாற்றமும் தெரியும்.

தெரியும் என்றால், வாசித்தறிந்த தெரியுமல்ல; பட்டறிந்த தெரியும். பட்டதை–பாடுகளின் ரணத்தை–வலியை என் எழுத்துகள் கதறிச் சொல்கிறது.

ஆகவேதான் சிறுகதை இலக்கணம் கற்றுத் தேறாம லேயே சிறுகதைகள் படைக்க முடிகிறது.

நான் படைக்கிற சிறுகதைகளும் ஒரே அளவில் இருப்பதில்லை. பக்கவரம்புகளோடு எழுதச் சொல்கிற இதழ்களின் உறவுகளை எனது சிறுகதைகள் பேணுவ தில்லை; மாறாகத் தவறவிட்டுவிடுகின்றன.

என் சிறுகதைகள் 'சற்றே பெரிய சிறுகதை' 'இருவாரச் சிறுகதை' என்ற அடைமொழிகளுடன்தான் பிரசுரமாகின்றன.

இந்த நூலில் 'போல் ஆகிவிட்டான்' சிறிய வடிவிலான கதை. 'அம்பலம்' என்ற இணைய இதழில் வந்தது. மற்ற கதையெல்லாம் சற்றுப் பெரியவை.

சிறியதும், பெரியதும், மிகப் பெரியதுமான கதைகளாகவே இந்த நூலில் அமைந்துள்ளன.

'ஆட்டுக்கம்பும் பூ மொட்டும்' எனக்கு மிகமிகப் பிடித்தமான கதை. குழந்தை உழைப்பு என்பது தீப்பெட்டியாபீஸில் மட்டுமில்லை. 'வளரும் குழந்தை இடறும் உளவியல் பிரச்னைகள்' என்பது வாழ்வின் ஆழத்தில் நுட்பமான இடுக்குகளில் புதைந்து கிடக்கிற சோக உண்மைகள்.

ஆனந்தவிகடனில் வெளியான 'ஆட்டுக்கம்பும் பூ மொட்டும்' என்ற இதே சிறுகதை, நாலைந்து மாதம் கழித்து

'இந்தியா டுடே' இதழிலும் 'பீர்க்கை' என்ற தலைப்பில் பிரசுரமானது. ஒரே கதை இரு இதழ்களில் பிரசுரமான இந்த விபத்துக்கு நான் எந்த அளவிலும் காரணமாக இல்லை.

அதேபோல 'ருசி' மொத்தச் சிறுகதை உலகமே இதுவரை தொட்டிராத ஒரு புதிய உண்மையைச் சொல்கிறது. பெண் சிசு கொலை பற்றிய சமூகக் கொடுமைகள் பற்றிய கதைகள் வருகிற ஒரு காலத்தில்– 'ஆண் பிள்ளைகள் பெற்று வளர்த்தவன் கஞ்சிக்கில்லாமல் அலைகிறான். பெண் பிள்ளைகள் பெற்று வளர்த்தவன் மரியாதை பெறுகிறான்' என்பது சாமான்யப் புதுமையல்ல; அசாதாரண உண்மை.

'அகலிகையாகி' கதை பிரசுரமான புதிதில் பரவலாக எதிர்மறை விமர்சனத்துக்குள்ளான கதை. ஆண்மகன் உதைபடுவதையும்... ஒழுக்கக்குறைவான பெண் உதைப்பதையும் பலரால் ஜீரணிக்க முடியவில்லை.

என்ன செய்வது! இந்திரர்களும் அகலிகைகளும் எல்லாக் காலத்துக்குமானவர்கள். கல்லாகச் சபிக்கப்பட்ட அகலிகை, புராணத்தில். என் அகலிகையோ– வேறொரு உளவியல் தாக்குதலில் இந்திரனை வெறும் சருகாக்கி விடுகிறாள்.

எனக்கென்னவோ... இப்போதும் இக்கதை மிக நுட்பமான–புதிய–பெண்ணியக் கதைதான் என்றுதான் படுகிறது.

ஆனந்தவிகடனில் ஏழுவாரத் தொடராக வெளிவந்த 'ஒரு மாலை பூத்து வரும்' என்ற கதையும் இத்தொகுப்பில் சேருகிறது. மிகப் பெரிய வரவேற்புகளையும், பாராட்டு களையும் எனக்குப் பெற்றுத் தந்த கதை.

ஒரு பூ பூத்து வரும் என்பது சாதாரண வார்த்தை. 'ஒரு மாலை பூத்து வரும்' என்பது கவித்துவமான வார்த்தை.

பல மனங்கள் கூடிக் கலந்து பேசி... ஒப்புதல் ஆகி... பலபேரின் ஒத்துழைப்புகளோடு கைகூடி வருகிற திருமண ஏற்பாட்டை... இலக்கணமோ மொழியோ அறியாத கிராமத்து மக்கள் 'மாலை பூத்துருச்சு' என்று வார்த்தைப் படுத்துவார்கள். அர்த்தமுள்ள வார்த்தைப்படுத்தல். ஆகவே கவித்துவமானது.

அந்த வார்த்தைப்படுத்தலிலிருந்து எழுந்ததுதான் 'ஒரு மாலை பூத்து வரும்' என்ற தலைப்பு.

எனது படைப்பு மொழியின் நதிமூலமே, இதுதான். கிராமத்தில் பிறந்து அங்கேயே வாழ்கிற நான், கிராமத்து மக்களின் வாழ்வின் புறச் சிக்கல்களையும், மனசின் அகச்சிக்கல்களையும் அவர்கள் மொழியிலேயே எழுதுகிறேன். கிராமத்து மொழிக்கேயுரிய பாமரத்தனம், வெள்ளந்தி, ஆழ்நுட்பம், கவித்துவம் எல்லாமே எனது கதை மொழியிலும் காண முடியும்.

வெவ்வேறு தருணங்களில், வெவ்வேறு மன நிலைகளில் எழுதப்பட்டு வெவ்வேறு இதழ்களில் பிரசுரமான இக் கதைகளின் ஊடாக உள்ள ஓர் ஒற்றுமை என்னவென்றால்... இவையின் இயங்குதளமும், மொழியும் கிராமம்.

இவை தொகுக்கப்பட்டு ஒரு நூலாக உங்களிடம் வருகிறது.

இக்கதைகளை தத்தம் இதழ்களில் பிரசுரித்து என்னைக் கௌரவித்த செம்மலர், ஆனந்தவிகடன், அம்பலம் இண்டர்நெட், கல்கி, ஓம்சக்தி, அமுதசுரபி ஆகிய இதழ் ஆசிரியர்களுக்கும், நூலாகத் தொகுத்து வெளியிட முன்வந்த புகழ்மிக்க கங்கை புத்தக நிலையம் அதிபர் திருமிகு. ராமு அவர்களுக்கும், மிகச்சிறந்த முகப்போவியம் வழங்கிய ஓவியர் அவர்களுக்கும், தொகுப்புக்கான கதைகளைத் தேடிச்

சேகரித்து, பாதுகாத்து, ஒழுங்கு செய்து தந்த என் மூத்த மகள் பொ. வைகறைச்செல்வி (பி.ஏ.தமிழ்)க்கும் என் ஆணிவேரான என் தம்பி கரிகாலனுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்.

இதோ புத்தகம் உங்கள் கையில். வாசித்து முடித்தவுடன் மனசிலிருந்து எழும் பெருமூச்சை கடிதமாக்கி எனக்கு அனுப்பிவையுங்கள், தயவுசெய்து.

உங்கள் பெருமூச்சின் குளிர்வும் என்னைத் தெம்பூட்டும். வெம்மையும் என்னைப் பதப்படுத்தும். இரண்டுமே எனக்கும், இலக்கியத்துக்கும் நல்லது. நன்றிகள்.

என்றும் உங்கள்

**மேலாண்மை. பொன்னுச்சாமி**

மேலாண்மறைநாடு–626127
இராஜபாளையம் வழி,
விருதுநகர் மாவட்டம்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. ஆட்டுக்கம்பும் பூ மொட்டும் | 13 |
| 2. அகலிகையாக | 30 |
| 3. தகிப்பூ | 43 |
| 4. போல் ஆகிவிட்டான் | 65 |
| 5. ருசி | 73 |
| 6. பிணமும் பிண மனசுகளும் | 89 |
| 7. இருட்டு | 104 |
| 8. சாகாவரச் சாபம் | 118 |
| 9. ஒரு மாலை பூத்து வரும் | 131 |

# ஆட்டுக்கம்பும் பூ மொட்டும்...

ஆட்டுக்கம்பை எடுத்துக்கொண்டு வாசல்படி தாண்டிய செந்தட்டி மனசுக்குள், கம்பு கனத்தது. மனசு கிடந்து அல்லாடியது. பாம்பைப் பிடித்திருக்கிற மாதிரியோர் மனமயக்கம்.

“சனியன் புடிச்ச இந்தக் கம்பை தலையைச் சுத்தி வீசியெறிஞ்சாத்தான் மனநிம்மதி.”

சள்ளையும் கோபமுமாக கங்குச்சிதறலான முணு முணுப்பு.

ஆடு மேய்க்கப் போகமாட்டேன்னு அம்மாகிட்டே அடம் பிடிக்கணும். அழுது புலம்பி ஆட்டம் போடணும். எதுக்குன்னு கேட்டா... என்ன சொல்ல? அதை எப்படிச் சொல்ல?

—சிடுசிடுப்பும் எரிச்சலும் மண்டுகிற மனசுக்குள் வந்துபோகிற நினைப்பு, வாயைத் திறக்கமாட்டாத உணர்வு, லஜ்ஜையில் ஊமையாகிற மனசு, ஊமையாகி அடங்காமல், பயத்தில் துடிக்கிற எண்ணம். திமிறிக்கொண்டு வெடிக்கிற வார்த்தைகள்.

ஆங்காரத்தில் டயர் செருப்பு தடக் தடக்கென்று அடித்தது. ஆடுகள் அடைந்திருக்கிற தொழுவத்தை நோக்கி நகர்ந்தாள்.

"அடியே..."

அம்மா சனியன்தான். அவளது ஆங்காரச் சத்தம்.

"என்ன..." —எதிர்க்கோபமாக இவளது வீறிடல்.

"சோத்துச் சட்டியை எடுத்துக்கிட்டியா?"

"ம்... ம்... எடுத்துக்கிட்டேன்."

"ஆடுகளைப் பார்த்து மேய்டி. காடு கரைகள்லே மேயவிட்டுராதேடி... வெள்ளாமை வெளைச்சல்லே விட்டுட்டீன்னா... ஊர் ஜனத்து முன்னாலே தலை குனிஞ்சு நிக்கணும்..."

"ம்... ம்... ஆகட்டும்..."

"அந்தக் கருமூக்கை ஒரு கண்ணு பாத்துக்கடி... செனையாடு. கல்லுட்டு கில்லுட்டு எறிஞ்சிராதேடி... பணம் பெத்த ஆடு..."

"சரி..."

செந்தட்டி உயிரில்லாமல் எதிரொலித்தாள். சுரத்தில்லாத ஆமோதிப்பு. மனசுக்குள் தகிப்பு. சீறிப்பாய்கிற நாறவசவுகள். அம்மாவை திட்டித் தீர்க்கிற ஆத்திரம்.

'ஆட்டை மேயி... ஆட்டை மேயின்னு காட்டு வழியிலே வெரட்டுறதுலேயே குறியாயிருக்கா. கருமூக்கு மேலே வெச்சிருக்கிற அக்கறையிலே பத்துல ஒரு பங்குகூட பெத்த புள்ளை மேலே கெடையாது. இவள்லாம் ஒரு தாயா? பேயி... நாயி... மூதேவி...'

கசந்த மனசின் வெக்கையான முணுமுணுப்பு. வெந்து கொதிக்கிற நினைவின் தகிப்பு. காலை வெயில் கண்ணில் ஊசியாகப் பாய்ந்தது. சுள்ளென்று அறைகிற ஏறுவெயில்.

செம்பட்டை ரோமக்கற்றை கண்ணில் குறுக்கில் விழுந்தது. ஒதுக்கி அதைத் தலைமுடிக்குள் செருகிக் கொண்டாள். சாயம் போன பாலியஸ்டர் பாவாடையின் காலடி நுனியில் தொங்குகிற கிழிசல் நூல்கள். கரண்டைக் காலின் புழுதி வெள்ளை.

பாவாடைக்கு மேல் போட்டிருக்கிற ஐயா சட்டை, அரைக்கை சிலாக்ஸ், தொளதொளப்பான சட்டை, பெல்ட் மாதிரி இடுப்பில் கட்டியிருந்த அழுக்குத் துண்டு, துண்டுக்குள் கோத்திருந்த சோத்துத் தூக்குச்சட்டி நடைக்கேற்ப 'களுக் கிளுக்'கென்று ஆடியது.

வீட்டுக்குப் பின்னால் தொழுவம். நாலு பக்கமும் வேலி முள் அடைப்பு, முள்வேலிச் சுவர், மேலே கூரைச்சாய்ப்பு, கிட்ட வந்தவுடன் நாசிக்கு சுகமான சாணக் கழிசல் நெடி, மூத்திரக் கவிச்சு வாசம்.

காலடிச் சத்தத்திலேயே இவளை உணர்ந்து நட்புடன் கனைக்கிற செம்மறிகள். படலைத் திறந்தாள் செந்தட்டி. தடதடத்து எழுகிற ஆடுகளின் கதறல்கள், செவலையும் வெள்ளையுமான ஆடுகள். சாணக் கழிசலில் புரண்டு காய்ந்த சொறசொறப்பு.

அவளது காலடியில் வந்து உரசுகிற ஆடுகள். அந்தச் சிறுமி யின் பாதங்களை நுகர்கிற ஆடுகளின் பாசம். அதன் சுவாச வெதுவெதுப்பு.

இந்த வெதுவெதுப்பு அவள் மனசுக்குள் இறங்குகிறது. இந்த நெடி அவளுக்குப் பிடிக்கும். ஆடுகளின் சொற சொறப்பும், மூத்திர நாற்றமும், ஆடுகள் செருமுகிற சளியின் வாசமும் செந்தட்டிக்கு ரொம்பப் பிடிக்கும். பரணில் கிடக்கும் காய்ந்த கொழைகள், வாடலும் புழுக்கமுமான அதன் மணம், படல் விலகியவுடன் வெளியேறுகிற செம்மறிகள், அப்போதுதான் நீட்டி நெளித்து நெட்டி முறிகிற ஒன்றிரண்டு

சோம்பேறிகள். ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டும் உரசிக்கொண்டும் நெருக்கியடித்துக்கொண்டு நகர்கிற அதன் பிறவிக்குணம். வெளியேறிய வேகத்தில் பக்கத்து வீட்டுச் சுவர்களில் உடம்பைத் தேய்த்துக்கொள்கிற பரபரப்பு, சொறிந்துகொள்கிற அதன் சுபாவம், சுகம், செந்தட்டி வாயிலிருந்து நெருப்பாகச் சீறிய கெட்ட வார்த்தை, எரிச்சலான வசவு நாராசம்.

“வெள்ளைக் காலுக்கு மப்பைப் பாரு. போய் ஒட்டைக் காதுகிட்டே வம்புக்கிழுக்கு. முட்டுபோடுது...”

இயந்திரகதியில் குனிந்து ஒரு கல்லை எடுத்து அனிச்சையாக எறிந்தாள். விர்ரென்று இரைச்சலோடு சிறிய கல் வெள்ளைக்காலின் நெற்றிப் பொட்டில் பட்டுத் தெறித்தது.

“ம்மேய்க்” என்ற கதறலோடு ஓடிய வெள்ளைக்கால் ஆடு, அடிவாங்கிய அதிர்வில் விளையாட்டில் இருந்து விலகிய சிறுமியைப் போல கனைத்துக்கொண்டு ஓடுகிற ஒட்டைக்காது. அதன் கண்தெறிப்புகளில் பீதி.

அந்த வட்டாரம் முழுக்க ஆடுகளின் கத்தல். வெயில் பூராவும் கதறல்கள்.

“ம்மேய்க்க்... ம்ம்ம்மேய்ய்க்...” என்று எல்லா ஆடுகளின் கூட்டுக் கதறல். ஒழுங்கற்ற காட்டுக் கத்தல். நீட்டி முழக்குகிற கனைப்புச் சத்தங்களோடு வேறு வேறு திசைகளில் ஆவல் பறப்போடு ஓடிச்சிதறுகிற செம்மறிகள்.

கம்பு வீச்சும் கல்லெறியுமாக ஓடி ஓடி மடக்குகிற செந்தட்டி. கம்பால் அடித்து, பேர் சொல்லி அதட்டி அதட்டிக் களைத்துப்போகிற அந்தச் சிறுமி, அங்கும் இங்குமாக ஓடி ஓடி வியர்த்த எரிச்சலில் வீரிடுகிறாள்.

“ஏய்ய்க், வவுறு வெள்ளை... எங்க போற? ஏய், கறுப்பு வாலு... ஒனக்குத் தனியா கத்தணுமா? ஆடுகளோட சேர்ந்து

போறீயா... இல்லியா? விட்டேனா தெரியும், ஒரு கல்லு... மண்டை மூளை செதறிப்போவும். ஏய்ய்க் நாக்குப்புள்ளி..."

ஓடி ஓடிக் களைத்துப்போனாள். ஏறுவெயிலில் முத்து முத்தாக மின்னுகிற வியர்வை மணிகள். செவிரோமங்களை நனைத்துப் படியவைக்கிற வியர்வை. ஓடி ஓடி... ஆடுகளை மடக்கி... வண்டிப் பாதைக்குள் ஒழுங்குபடுத்துவதற்குள் 'அத்தாடி, அம்மாடி' என்றாகிப் போயிற்று செந்தட்டிக்கு.

தொழுவத்தின் படலை இழுத்துச் சாத்துகிறாள். சாணிச் சகதி முழுக்க ஆட்டுக் குளம்புத்தடங்கள். வெள்ளையும் சிவலையுமாக ரோமச் சிதறல்கள்.

அதற்குள் செம்மறிகள் கொஞ்ச தூரத்துக்குப் போய்விட்டன. தெருப்புழுதியின் புகைமண்டலம். காலை வெயிலில் நனைந்த ஒளிப் புழுதித்திரை.

படலை இழுத்துச் சாத்தி, கொக்கியை இழுத்து மாட்டிய வேகத்தில் ஆடுகளைத் துரத்திக்கொண்டு ஓடுகிற அந்தச் சிறுமி. கால்களின் பரபரப்பு. பதட்டம்.

டடப் டடப்பென்று கதறுகிற டயர் செருப்புகள்.

வெளிப்பானையில் வாய் வைக்கிற கிழிஞ்ச காது. அவரைப் படலில் முன்னங்காலைப் போட்டு கொழை மேய்கிற கள்ளச் செவலை. தெருவோர வைக்கோல் படப்பில் கூளத்தை வளைத்து அமுக்குகிற வாலாட்டி. ஆட்டுக்கொரு சேட்டைகள், அழிச்சாட்டியங்கள்.

பதட்டமும் மனச் சிடுசிடுப்புமாக விரட்டி விரட்டிப் பத்துகிறாள். மடக்கி ஆடுகளை வழிக்குக் கொண்டு வருகிறாள்.

"ஏய் சனியன்களா...ஒழுங்கா போங்களேன். பேதியா எடுக்கு? எழவுலே போய்ச் சேர... பாதை பாத்துப் போங்க..."

கத்துகிற செந்தட்டியின் வாயிலிருந்து சிதறுகிற நாற வசவுகள். கூச்சமற்ற கெட்ட வார்த்தைகள். காடே கதியென்று

ஒற்றையாகப் பொழுதைக் கழிக்கும் தொழிலின் இயல்பான நாறவார்த்தை.

செந்தட்டிக்கு இப்போதே கால் வலிக்கிறது. இடுப்பெல்லாம் கடுக்கிறது. ஓடிச்சாடி பரபரத்த வேகத்தில் தொடைச் சதையெல்லாம் வலி. முறுக்கிப் பிழிகிற வலி. இடுப்பில் பின்பக்கம் தொங்கிக் குதிக்கிற தூக்குச்சட்டி வேறு இச்சிலாத்தி. கத்திக் கத்தி தொண்டையெல்லாம் உலர்ந்து காந்துகிறது. நடக்கிற ஆடுகள் எழுப்புகிற புழுதிப்புகை நாசிக்குள் நுழைந்து கமறுகிறது.

இதையெல்லாம் உணரப் பொழுதில்லை, செந்தட்டிக்கு. ஆடுகளின் பின்னால் லொக் லொக்கென்று ஓடுகிறாள். வியர்வை துடைக்கக்கூட நேரமில்லை. நாடி நுனியில் வியர்வை மணியின் ஆட்டம். அதைக்கூடப் பொருட் படுத்தவில்லை.

நாலு வருஷப் பழக்கம். அன்றாட அனுபவம். பழகிப் பழகி மரத்துப்போன ரணம். எட்டு வயசில் தூக்கிய ஆட்டுக்கம்பு, ராசாத்தியக்கா பாதுகாப்பில் ஆடு மேய்க்க ஆரம்பித்த நாட்கள். ஆட்டு வாலில் தொங்கி, வெயிலில் கருகிய பகல்கள், புல்லை மேய்கிற ஆடுகளையே வெறும் வாயால் வெறித்த முடிவற்ற பொழுதுகள்.

சாய்வாக ஊன்றிய கம்பில் கட்கத்தையும் உடல் பாரத்தையும் போட்டு, விறைத்து ஊன்றிய வலது காலில் மடங்கிய நிலையில் இடதுகாலை வைத்து... வெட்ட வெயிலில் மணிக்கணக்காக உறைந்து நின்று பழகிப்போன நாட்கள், கானல் அலைகள் மிதக்கிற வெள்ளை வெயிலை இமை தட்டாமல் பார்த்துப் பார்த்து தீய்ந்துபோன கண்கள், கன்னக்கதுப்புகளின் காந்தலையும், செவிமடல் எரிவையும் எச்சிலைத் தொட்டுத் தடவி தடவி சமாளித்த குழந்தைத்தனம்.

ஆடு மேய்க்கப் போயிருந்த அய்யாவை நாலுபேர் தூக்கிக்கொண்டு வந்தார்கள். ரத்தம் ரத்தமாகக் கக்கினாராம்.

கண்ணைக் கட்டிக்கொண்டு வந்ததாம். விழுந்தவர் அசையவேயில்லையாம்.

செத்துக்கிடந்த ஐயாவின் மேல் விழுந்து கதறிய அம்மா, "ஐயய்யோ... எங்களைத் தவிக்க வுட்டுட்டு இப்படிப் போயிட்டீங்களே... என்ன செய்வேன் நான்? எப்படிக் கரைசேரப் போறேன்? ஐயய்யோ... ஐயா... ஏஞ்சாமி... ஏந்தெய்வமே..."

தலைவிரி கோலமாக நெஞ்சில் அடித்துக்கொண்டு கதறிய அம்மா, நனைந்த காகிதமாக நைந்து கிடந்த அம்மா... மாறி மாறி அம்மா வைத்த ஒப்பாரியில் கதிகலங்கிப் போயிருந்தாள், நாலாப்பு செந்தட்டி.

செத்துப்போன ஐயாவுக்குக்கூட அல்ல, அழுது அரற்றுகிற அம்மாவின் கண்ணீருக்கே பரிதாபப்பட்ட செந்தட்டி, கலங்கி நெகிழ்ந்தாள். விம்மலும் விசும்பலுமாக, "ம்மா... ம்மா..." என்று அம்மா தோளைத் தொட்டுக்கொண்டே அழுதாள்.

பதினாறாம் நாள் காரியம் முடிந்தபிறகு...

வாழ வேண்டிய மிச்ச வாழ்வைப்போல எதிரில் நின்றன ஆடுகள். பதினெட்டு ஜோடிகள், முப்பத்தாறு செம்மறிகள். வீட்டின் ஜீவனம். என்ன செய்ய?

ஐயாவோடு சேர்ந்து சாகமுடியாதே. வாழ்ந்தாகணுமே... வாழ்வோடு மல்லுக்கட்டி உருண்டு புரளணுமே...

ஐயாவின் ஆட்டுக்கம்பு செந்தட்டி தோளுக்கு வந்தது. சுவரில் தொங்கியது நாலாப்பு பைக்கட்டு.

"ஐயையோ... பொட்டைப் புள்ளையை ஆடு மேய்க்க அனுப்பற மாதிரியாகிப் போச்சே... நான் ஒரு பாதகத்தி... யோகங்கெட்ட சிறுக்கி..." என்று அழுது கரைந்தாள் அம்மா. ஆட்டுக்கம்பை எடுத்த அன்றைக்கு, நனைந்த துணியாக துவண்ட குரலில் கண்ணீரும் கம்பலையுமாகப் புலம்பினாள்.

“இந்த வங்கொடுமையையும் கண்கொண்டு நான் பாக்கணுமா? கண்ணு முழியாத சின்னக்குஞ்சு காட்டு வழியிலே ஆட்டைப் பத்திக்கிட்டு அலையணுமா? அடக் கூத்துவனே... இதுவும் ஒனக்குச் சம்மதமா? இப்பிடியுமா எங்களைச் சீரழிய வெச்சசு பேரிழவு கூட்டணும்?”

மடேர் மடேரென்று மார்பில் அறைந்து கதறியழுத அம்மாவைக் காணச் சகிக்கவில்லை செந்தட்டிக்கு. நெஞ்சை உடைத்துக்கொண்டு பீறிட்ட விம்மல்கள். அழுவதற்கு வெட்கமாக இருந்தது. முகத்தை மறைத்துக்கொண்டு ஆட்டுக்கம்போட்டு தெருவில் இறங்கினாள் செந்தட்டி.

ஏழைப்பட்ட சனத்தின் அவலமாக, அம்மாவின் அழுகைச் சத்தம் துரத்தி வந்தது முதுகுக்குப் பின்னால்.

ஆற்றோரம் வந்துவிட்டன ஆடுகள். தண்ணீரில்லாத ஆறு, மணல்கூட இல்லாத ஆறு, வேலி மரங்களும் பாறை முடிச்சுகளுமே உள்ள ஆறு.

வெட்டவெளி. ஆள் போக்குவரத்தே இல்லை. பக்கத்தில் வெள்ளாமை விளைச்சல் இல்லை. ஆடுகளை சுதந்திரமாக மேயவிட்டு நிற்கலாம், உட்காரலாம், என்ன வேண்டு மென்றாலும் செய்யலாம்.

பேச்சுத் துணைக்கு மாரிமுத்துவும் வந்துவிட்டான். அவன் ஆடுகளும் நாலு வருஷ சிநேகத்துடன் ஒண்ணடியும் மண்ணடியுமாகக் கலந்து மேயும்.

எப்பவுமே அவனைப் பார்த்துவிட்டால் மனசு கும்மாளம் போடும். சிறுமிக்குரிய குதூகலத்தில் மனசெல்லாம் பூத்துச் சிரிப்பாள்.

“நல்லவேளை... நீ வந்துட்டே...” என்று வெள்ளந்தியாகக் கூவுவாள். கூடமாட விளையாடுகிற கள்ளமற்ற சிறுவனைப் பார்த்துவிட்ட மகிழ்ச்சி, சிறகடிக்கிற மனக்குருவி.

இப்ப... இப்ப... இவன் வந்துட்டானே என்று மனசு கிடந்து பதறுகிறது. பயப் படபடப்பு. இனம் புரியாத பயம். மர்மமான பதட்டம். முகமில்லாத பீதி.

பதினெட்டு வயசிருக்கும். அழுக்குக் கைலி. தொடை தெரிய உருட்டிக் கட்டிக்கொள்வான். கலர் பனியனில் அவனது தலைவரின் ஸ்டைலான கையசைப்பு.

தலைவர் ஸ்டைல், சண்டை போடுகிற வேகம், அவர் நடிக்கிற சிரிப்புக் காட்சி என்று வெயில் தெரியாமல் கதை சொல்வான் முன்பு. இப்போது... சிம்ரன் குளிப்பது... துணியில்லாத கதாநாயகியை லவர் பார்த்தது... மழையில் நனைகிற கதாநாயகியோடு உருளுவது... காதல் காட்சியில் நெருங்கிக் கட்டிப் புரள்வது என்று இதையே சொல்கிறான்.

வெயில் தெரிகிறது. மனசுக்குள் வெறுப்பாக இருக்கிறது. 'ச்சீய்'யென்றாகிறது.

"ஆட்டைப் பாத்துக்க... இந்தா வாரேன்..."

செந்தட்டி சோத்துச் சட்டியை ஒரு மஞ்ணத்தி மரத்தில் கட்டித் தொங்கவிட்டாள். துண்டை உருவி தலையைச் சுற்றி வட்டக் கட்டாகக் கட்டினாள். மாரிமுத்துவைப் பார்த்துக் கொண்டே, தூரமாகப் போய்... வேலியோரம் மறைந்தாள். ஆற அமர வெளியே வந்தாள்.

ஐயா சட்டை தோள தொளப்பாக இருப்பது அசிங்கமாகத் தோன்றுகிறது. குறைகோலமாக மூளியாகிவிட்டதைப் போல ஓர் உணர்வு, மனசுக்குள் அவஸ்தை.

நீலத்தாவணி போட்டு... இறுக்கிப் பிடிக்கிற வெள்ளை ஜாக்கட் போட்டு புத்தகமும் பேடுமாகப் பள்ளிக்கூடம் போகிற இவள் வயசுப் பிள்ளைகள். எண்ணெய் மின்னலும் சடைப் பின்னலுமாக அதுகளின் லட்சணம்.

தான் இருக்கிற அலங்கோலம். சாயம் போன ஐயா சட்டை. தொளதொளப்பாக இருக்கிறது. அதுவே ஒரு வசதி தான். இல்லை என்றால், என்னவோ போலிருக்கும். எப்படி மறைக்க என்று மனசு கிடந்து மறுகித் தவிக்கும்.

அப்பவும் மாரிமுத்துப் பயல் —

முன்பெல்லாம் கல்மிஷமில்லாமல் விளையாடுவன். ஓடிப்பிடிப்பான். தொட்டு விளையாடுவான். விளையாட்டுச் சண்டையில் கட்டிப் புரளுவார்கள். எந்த மர்மமுமில்லை. மறை திரையுமில்லை.

இப்ப... இப்ப... அவன் பார்க்கிற பார்வையில் கள்ளம். இவளது கண்ணைப் பார்க்கிற குறுகுறுப்பு, உதடுகளைப் பார்க்கிற வெறி, கழுத்துக்குக் கீழே நங்கூரம் போடுகிற பார்வை. அதன் உக்கிரம், ஓநாயின் கண்ணைப் போல அலை பாய்வு. பச்சைப்புல் பார்த்த கள்ள ஆடு மாதிரியான தவிப்பு.

இவளுக்குள் என்னவோ போலிருக்கும். கூசிக்குன்றிக் குனியத் தோன்றுகிற மனச்சிரமம். இயல்பாயிருக்க முடியவில்லை. சிறுமியில்லை. மறு பக்கம் திரும்பிக் கொள்ள வும் முடியவில்லை. குமரியென்று உணர்த்துவதிலும் சிரமம்.

அந்தப் பாவியின் பார்வையையும் சுமக்க முடியவில்லை. என்ன செய்ய? மனத்தத்தளிப்பு. உள்மனக்கூச்சம்.

குனிந்து கல்லையெடுத்து, ஆடுகளை விரட்டுகிற சாக்கில் ஓடணும், ஆடுகளை அதட்டிக் கொண்டே. பொய் விரட்டல். பொய் அதட்டல்கள்.

மதியம் சாப்பிடும்போதெல்லாம் ஒரே இச்சிலாத்தி. அவனது தொல்லை.

"செந்தட்டி, நீ ரம்பா மாதிரியிருக்கே" என்பான். இவள் முறைப்பாள். "இந்தப் பேச்செல்லாம் எங்கிட்டே வெச்சுக்கிடாதே" என்று சீறுவாள்.

"ஏன்... வெச்சுக்கிட்டா என்னவாம்?"—திமிரான அவனது கேள்வி.

"அதுக்கு வேறு ஆளைப் பாரு"

"அப்ப... உனக்கு ஆளைப் பார்த்துக்கிட்டியா?"

அழுகை அழுகையாக வரும். கோபம் பயனற்றுப்போன உச்சத்தில் அழுகை வெடிக்கும். கண்கலங்கும். மறுகித் தவிக்கிற மனசு.

இவன் சங்காத்தமே வேண்டாம் என்று விலக முடியாதே. காட்டில் ஒற்றையாளாக நிற்க முடியாதே. நச்சரித்துப் பிடுங்கும் தனிமை முள்ளைத் தாங்கமுடியாதே.

முப்பத்தாறு ஆடுகளை ஒற்றைச் சிறுமி மேய்க்க முடியாதே. மடக்க... பத்த... இனம்பார்க்க... கல்கிடங்கு தண்ணீரில் இறக்கி ஏற்ற... கிடைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க... எல்லாவற்றுக்கும் ஆள் வேண்டுமே. ஒரு துணை வேண்டுமே... இல்லாமல் சமாளிக்க முடியாதே...

ஆனால், துணையே முள்ளாகி 'சுருக் சுருக்' என்று குத்துகிறது.

சாயங்காலமாயிற்று. செந்தட்டி மேற்கில் தள்ளி நின்றாள். வேண்டுமென்றே உருவாக்கிக் கொண்ட இடைவெளி. பாதுகாப்பு இடைவெளி.

அங்கிருந்தே பாட்டு படிக்கிற மாரிமுத்து, கூச்ச நாச்ச மில்லாத கெட்ட வார்த்தைப் பாட்டு. ஓங்கிச் சத்தமாகப் பாடுகிறான். இவளுக்குள் கலக்கம். அடிவயிற்றுப் புரட்டல். மன ஆழத்தில் பதைப்பு.

குங்குமச் சூரியனையே பார்க்கிறாள். தங்கத்தூசியான வெயில் வேலிமரங்களில் படுகிறது. கருழுக்கு முதுகில்

உட்கார்ந்திருக்கிற கரிச்சானைப் பொருட்படுத்தாமல் புல்லைக் கடித்துமேய்கிற கருமூக்கும், பிற ஆடுகளும். ஆட்டுச் சளியின் புழுக்களை மேய்கிற மைனாக்கள்.

அம்மாகிட்டே சொல்லிடலாமா? மாரிமுத்து சேட்டை களை சொல்லிடலாமா? என்ன செய்தான்னு சொல்ல? கள்ளப் பார்வையைச் சொல்லவா? விளையாட்டாகப் பேசுகிற விஷமத்தைச் சொல்ல முடியுமா? சொன்னா... நம்புவாளா?

நம்பிட்டாலும், பத்ரகாளியாகி விடுவாளே... தெருச் சண்டையில் ஊரையே நாறடித்துவிடுவாளே... கிழிபடுவது இவளது மானம்தானே...?

ஊமைச்சி கண்ட கனாவாக செந்தட்டிக்குள் பீதி. கொட்டியழ முடியாத குமைச்சல். ஆடி மாசக் காற்றில் அல்லாடுகிற வேலி விளாரைப்போல, மனசு நிலை கொள்ளாமல் தத்தளிக்கிற உணர்வு.

"ஏய்... செந்தட்டி..."

"என்ன...?"

"ஆட்டைப் பத்து, கல்கெடங்குத் தண்ணியிலே போட்டெடுத்துட்டு, வீட்டுக்குப் பத்துவம்..."

பொழுது அடைந்துவிட்டது. மேகத்து வெளிச்சம் மிச்சமாக இருந்தது. 'வரட்டா, வரட்டா' என்று பயங்காட்டுகிற இருட்டு.

ஆடுகளை மடக்கினாள். அவனும்தான். அங்கும் இங்கும் வேலிப்புதர் மறைவுகளில் நின்ற ஆடுகளையெல்லாம் அதட்டி... சத்தம் போட்டு... கல்லெறிந்து... மடக்கி... ஒன்றுபடுத்தி...

பக்கத்தில் கருங்கல் கிடங்கு வெடிவைத்து கல்லை உடைத்த பழைய குவாரிக்கிடங்கு. தேங்கிப் பாசி படிந்து கிடக்கிற கருந்தண்ணீர்.

*அதில் ஆடுகளை இறக்கி... தண்ணீர் குடிக்கவைத்து... தண்ணீரில் கழுத்தடியில் உஷ்ணமூச்சு. விருட்டென்று திரும்பிய மிரட்சி.*

*பின்பக்கமாக வந்து அப்படியே அணைத்துக்கொண்ட மாரிமுத்து. நெஞ்சின் குறுக்கிலும் வயிற்றுக்கு அடியிலும் கைகளால் பின்னிக்கொண்ட வேகம்... பின்னியவுடன் இறுகிய இறுக்கம், திரும்பிய அவள் கன்னத்தைத் கவ்வுகிற பீடிநாற்றம்.*

*வெலவெலத்துப்போனாள் செந்தட்டி. தீயை மிதித்து விட்ட மாதிரியான துடிப்பு. பூரான் ஊர்கிற மாதிரியோர் அசூயை. அவளுள் வந்த சண்டாளம். பீறிட்ட பத்ரகாளியின் ருத்ரம்.*

*"ச்சேய்ய்ய்க்."*

*திமிறி மூர்க்கமாகக் கத்தினாள். ஒரு மின்னலைப் போல சரேலென்று உருவிக்கொண்டு... கரும்பாறையில் ஏறி... வெட்டவெளிக்கு வந்தாள்.*

*மனம் கசந்த வெறுப்பு. அச்சமும் குமட்டலுமாகப் பார்த்த பார்வையின் மருளல். 'சிசீய்... நாயே' என்று சீறிய பார்வை.*

*"வாடா... வா... எங்கம்மாகிட்டே சொல்லுதேன், நீ செஞ்ச காரியத்தை. ஒன்னோட தொலியைக் கிழிச்சு, உப்பைத் தடவுவா... பாரு."*

*அவன் முகத்திலும் பயத்தின் இருட்டு. வரப்போகும் பிரளயம் பற்றிய நடுக்கம். அவசர அவசரமாக அவனது ஆடுகளை மட்டும் இனம்பிரித்து, பத்திக்கொண்டு போய்விட்டான்.*

*ஈரத்துண்டை உடம்பில் போர்த்திக்கொண்டாள் செந்தட்டி. மிச்சமிருந்த மேகத்து வெளிச்சமும் கறுத்துவந்தது. றெக்கை நிழலாக வந்து கவிகிற இருட்டு.*

விசும்பி விசும்பி அழுத செந்தட்டி. சொல்லியழ ஆளில்லா தனிமையின் தவிப்பு, திணறல். ஆடுகளைப் பத்தினாள். ஊரை நோக்கி நகர்ந்தாள்.

மாரிமுத்தை நினைக்க நினைக்க பயத்தில் நனைகிற மனசு. அம்மாவிடம் போய் ஆட்டுக்கம்பை வீசியெறியணும். ஆடு மேய்க்கமாட்டேன் என்று அடம் பிடிக்கணும். அழுது புரளணும். வைராக்கியமாக மறுத்திரணும்.

தன் நடையாக ஆடுகளின் நடை கத்தல் இல்லாத நடை. வெறும் செருமல் மட்டும் அவ்வப்போது.

மெல்லிய காற்றின் வருடலில் உலர்கிற ஈரத்துணி. ஏனோ... ராசாத்தியை நினைக்கிறது, மனசு.

செந்தட்டி ஆட்டுக்கம்பை எடுத்ததே ராசாத்தி தைரியத்தில்தான். அப்பவே அவள் முற்றலான குமரி. சடங்காகி ஏழெட்டு வருஷமாகியிருந்தது. ஆடுதான் மேய்த்தாள். சின்னப் பிள்ளையில் பிடித்த ஆட்டுக்கம்பு. எதற்கும் பயப்படவே மாட்டாள். இருட்டுக்கும் பேய்க்கும் பயப்படமாட்டாள். ஆம்பளைக்கும்தான்.

'ஐயா இல்லாத புள்ளை' என்ற அனுதாபத்தில் செந்தட்டிமேல் அவளுக்கு ரொம்பப் பிரியம். ஈரத்தில் வேர்விட்ட பாசம். இவளுக்கும் ராசாத்தி என்றால் உயிர். தாயைப் போல காவல் தருகிற ராசாத்தி. காவல் தேவதை என்கிற பாசம்.

ராசாத்தி ரொம்ப வாடிப் போயிருந்தாள். வெட்டி வெயிலில் போட்ட கீரைத்தண்டாக குறாவிப் போயிருந்தாள்.

"ஏங்க்கா... ஒரு மாதிரியாயிருக்கே?"

"ப்ளச்சூ... ஒண்ணுமில்லே."

முழுங்கி மறைக்கிற காயவேதனை. பொத்திவைக்கிற ரணம்.

"செந்தட்டி..."

"என்னக்கா?"

"எங்காச்சும் பீர்க்கைநெத்து தட்டுப்பட்டுச்சா?"

"பீர்க்கைங்காயா?"

"இல்லே, பழுத்து... முத்தி... காய்ஞ்சிபோன நெத்து."

"எதுக்குக்கா?"

"சொன்னா ஒனக்குப் புரியாது. வேணும். அவசரம்."

"சீனியப்பநாடாரு மொளகாப் புஞ்சையிலே வேலிமேலே தொங்குச்சு."

"எந்தப் புஞ்சை?"

"மேல ஓடைக்கு மேக்கே..."

"இருக்கா? பீர்க்கை நெத்துதானா?"

"நெத்துதான். தங்கநெறத்துலே தொங்குச்சு. குலுக்கிக் கூடப் பார்த்தேன். வெதை கலகலன்னு சிரிச்சது."

"புடுங்கிட்டு வாரீயா? நான் ஆட்டைப் பாத்துக்கிடுதேன்."

"ஆகட்டும்..."

சிட்டாகப் பறந்தாள் செந்தட்டி. அக்காவுக்கு உதவி செய்கிற பாக்கியம் கிடைத்த மகிழ்ச்சி. குதூகலப் பெருக்கு. றெக்கையடிக்கிற மனத்துள்ளல்.

போன மாயத்தில் வந்துவிட்டாள், கலகலக்கிற பீர்க்கை நெற்றோடு.

மறுநாளுக்கு மறுநாள் —

ராசாத்தியக்கா செத்துப்போய் விட்டாள். பீர்க்கை விதைகளை அரைத்துக் குடித்துவிட்டாளாம். கருக்கலைப்புக்

கான மருந்தாம். போக ஆரம்பித்த ரத்தப்போக்கு நிற்கவேயில்லையாம். உயிரைப் பறித்துக்கொண்டுதான் நின்றது. நாலாவது கருக்லைப்பாம்...

'அக்காவைக் கொல்றதுக்காகவா... பீர்க்கைநெத்துக்காக அந்த ஓட்டம் ஓடினேன்?'

செந்தட்டிக்குள் இப்ப நினைத்தாலும், பகீரென்கிறது. ராசாத்தியக்காவின் அன்பு முகம். பாசமுகங்கள். நார்க்கட்டிலில் தூக்கிப்போட்ட பிரேதத்தை எவ்விதச் சடங்கு சாத்திரமும் இல்லாமல்... அப்படியே மயானக்கரைக்குக் கொண்டுபோன அவலம். நிமிஷத்தில் புகையாகிவிட்ட மாயம்.

அதோ... ஊரின் தெருவிளக்குகள். இருட்டு கவிந்துவிட்டது. நினைவுகள் ஒருபக்கம் இழை பின்னினாலும், ஆடுகளின்மீதும் ஒரு கண்.

மாரிமுத்துவின் ஸ்பரிசம். அவன் கைகள் இறுக்கிய உணர்வுத் திணறல். அவனது வியர்வை நாற்றம். சுவாச வெக்கை, பீடிவாசம். எச்சில் வடிகிற அவனது காமக் கண்கள். அவனை விட்டுப் பிரிந்து... ஒற்றையாக ஆடுகளைச் சமாளிக் முடியாத நிலைமை. ஆட்டுக்கம்பை தலையைச் சுற்றி எறிய முடியாத நிஜம். அம்மா சம்மதிக்கமாட்டாள். அதட்டுவாள். தீராக் கடைசிக்கு கண்ணீரால் கரைத்துவிடுவாள்.

'அப்ப... அப்ப... எனக்கும் பீர்க்கை விதைக் கரைசல்தானா? அந்த விதிதான் எனக்கும் காத்திருக்கிறதா? நானும் ராசாத்தியக்கா மாதிரிதானா?'

— செந்தட்டிக்குள் பயச்சிலிர்ப்பு, அடிவயிற்றைப் புரட்டுகிற கலக்கம், பீதியூட்டுகிற கற்பனைகள்.

செந்தட்டிக்குள் ஒரு வைராக்கியமான நினைப்பு.

'அம்மா அழுதாலும் சரி... புரண்டு கதறினாலும் சரி... கரையவே கூடாது. ஆட்டுக்குப் போகவே கூடாது. என்ன

ஆனாலும் சரி... ஆட்டுக்கம்பை கையிலே தொடவே கூடாது மாரிமுத்து மூஞ்சியிலே முழிக்கவே கூடாது...!'

இந்த முடிவுக்கு வந்த பின்னும்கூட, மனசில் ஒரு கலக்கம். அம்மாவின் கண்ணீரையும் கதறலையும் எப்படி எதிர் கொள்வது என்கிற நடுக்கம்.

ஆடுகளைப் பத்தி தொழுவத்துக்குள் அடைத்தாள். படலை இழுத்துச் சாத்துகிறபோது –

அடிவயிற்றில் ஊசிக்குத்தலான ஒரு வலி. சரேலெனப் பாய்ந்த குந்தல். உயிரே கழன்றுபோகிற மாதிரியோர் உணர்வு.

"ஹா... ஹ... ம்ம... மா... ஹ்."

நீளத்திணறலான ஓர் அலறல், அப்படியே உட்கார்ந்து விட்டாள். இடுப்பு எலும்பே உருவிக்கொண்ட மாதிரியோர் உளைச்சல்.

சத்தம் கேட்டு ஓடிவந்த அம்மா. "என்னடி... என்ன செந்தட்டி" என்று பதட்டப் பரபரப்பாக வந்தவள்... மகள் முகத்தை சற்றே கூர்ந்து பார்த்தவுடன், "மகராசியா யிருக்கணும்டீ. பூத்தநேரம் பொன்னா இருக்கணும்" என்று மகள் முகத்தை கைகளால் வழித்து, வருடி... பூரித்த மனதோடு ஆசீர்வதித்தாள்.

'என்ன ஆயிருக்கு' என்பதை ஊகித்துக்கொண்ட செந்தட்டி,

'நல்லவேளை... இதைச் சொல்லியே ஆட்டுக்கம்பைக் கீழே போட்டுரலாம்...'

அவளுள் வெட்கமும் வேதனையுமான லஜ்ஜை உணர்வுகளைத் தாண்டிய ஆழத்துக்குள் ஓர் ஆசுவாசமும் பரவசமும் மலர்ந்தது. அவலமான ஆசுவாசம்... சோகமான பரவசம்.

–ஆனந்தவிகடன் 17–10–1999

# அகலிகையாக...

அய்யாயி பயந்த மாதிரியே ஆகிவிட்டது. கடைக்காரர் முகம் முறித்துப் பேசிவிட்டார்.

"கடன்ங்குற பேச்சை வுட்டுட்டு... வேற பேச்சுப் பேசு"

தாட்சண்யமற்ற இறுக்கம். முகத்தில் அறைந்த மாதிரியிருந்தது அவளுக்கு.

கையில் துட்டுமில்லாமல். துட்டுக்கு வழியும் தட்டுப் படாமல்... 'சோறாக்க நேரமாச்சே...' என்ற பதைப்பில், கடனாச்சும் கேட்டுப் பார்ப்போம் என்று பெருமூச்சோடு புறப்படும்போதே, இந்தப் பயம் காலைக்கட்டியது.

'கடைக்காரரு சிடுசிடுப்பாரோ... கடன் இல்லேன்னு கட்டண் ரைட்டாச் சொல்லிருவாரோ...'

மூணாப்பு படிக்கிற முத்து, விளையாடப் போயிருக் கிறவன், வந்து நிற்பான். சோத்தை வை என்று ஒத்தைக்காலில் நிற்பான். தங்குபுங்கென்று குதிப்பான்.

என்ன செய்ய...?

பொழுது இறங்குகிறது. வெயிலின் முகம் மஞ்சளாகிறது. இவளுக்குள் வந்து கவிகிற இருட்டு. 'சோத்துக்கு என்ன செய்ய' என்று வழிமறிக்கிற நினைப்பு.

இவளை ஒரு பொருளாகவே நினைக்காமல் அலட்சியமாக வேறு பெண்களுக்கு சரக்கு தருகிற கடைக்காரர். சரக்கு வாங்குகிற வேறு பெண்களின் கடைக்கண் பார்வைகள். ரகசிய ஏளனம். மாய ஊசிகள்.

இவளுக்குள் நறுக்நறுக்கென்று குத்துகிறது. முள்ளின் மேல் நிற்பவளைப்போல மனத்தகிப்பும்... மூச்சுத் திணறலும்.

மேற்கிலிருந்து புழுதிபறக்க ஓடிவருகிற முத்து. பாதம் முழுக்க வியர்வையும், புழுதியும், வெள்ளைச் சட்டையில் மண் திட்டுகள்! "யம்மா... யம்மா..." என்று ஆவல் நதியாக ஓடிவந்து காலைக்கட்டுகிற ரத்தப் பிறப்பு.

கடைமுன்னால் நட்டுக்க நிறுத்தப்பட்டிருந்த கரும்புக் கட்டுதோகையின் சொரசொரப்பு.

அவற்றில் நல்ல கரும்பு எது என்று தேர்வு செய்து கொண்டிருக்கிற ஒரு பெண்.

"கரும்பு நல்லாருக்குமா...?"

"கரும்பு கசக்கவா செய்யும்?"

"உப்புக்கரிச்சா... என்ன செய்ய?"

"கரும்பா? அதெப்படி?"

"உப்புத்தண்ணிக்காட்டுலே வெளைஞ்சிருந்தா...?"

"அதெல்லாமில்லே... கம்மாப் பாசனத்துலே வெளைஞ்சது. தேனா தித்திக்கும்"

"வெலைதான் தேளாயிருக்கு..."

கொஞ்சலும் கேலியுமான பேச்சுகள். இவளுக்குள் பற்றிக் கொண்டுவந்தது. அப்போது—

காலைக்கட்டிய முத்து

"யம்மா... யம்மா... எனக்குக் கரும்பும்மா... வாங்கித்தாம்மா... உரிச்சு உரிச்சுத் தின்னா... எச்சி யெல்லாம் இனிச்சுக் கிடக்கும்மா... யம்மா... கரும்பும்மா..."

கெஞ்சலும் கொஞ்சலுமாக காலில் முட்டுகிற முத்து. மகனைப் பார்த்தாள். குனிந்து.

சூழலின் தகிப்பு. தாட்சண்யமற்ற அவமானம். ஏளனமாய் பாய்கிற மாய ஊசிகள்.

"தாய் தவுட்டுக்கு வழியில்லாம தவிச்சாளாம். இஞ்சிப்பச்சடி கேட்டு இடும்பு பண்ணுனானாம் புள்ளே. ஏண்டா கரும்பாடா கேக்கு ஒனக்கு?"

சூழலின் தகிப்பு முழுவதும் வலதுகையில் இறங்க... அவன் முதுகில் 'பளார் பளார்' என்று விழுந்த அடிகள். வாழ்வின் அறைகள்.

நெருப்பாக வந்து அப்பிய அறைகளில் வெலவெலத்த மகன். வீறிட்டுத் துடித்துக் கதறிய ரத்தம்.

"யம்மா— யம்மா— ஐயய்யோ... யாத்தா... யம்மா..."

அவனது கதறல். விலகி நின்று துடிக்கிற மகன். அழுகையும் பிடிவாதமுமாக வழி மறிக்கிற வாழ்க்கையாக அவன்.

பச்சைப்புள்ளையைப் போட்டு அடித்த அடியில் சுற்றி இருந்தவர்களெல்லாம் திகைத்து... குற்ற உணர்வில் நெளிந்தனர்.

அப்போது கடைக்கு வந்திருந்த மெத்தை வீட்டுக்காரர் பிள்ளை.

"ஏய் அய்யாயி. எதுக்கு ஒம்புள்ளையை இப்படிப் போட்டுக் கொல்லுதே?"

"ஊம்...? எந்தலையெழுத்து"

அவளது கோபச்சீறல்.

"இந்தா ஒரு கரும்பை வாங்கிக் குடு. பாவம். பச்சைப் புள்ளை, அதுக்கென்ன தெரியும் ஒஞ் சங்கடமெல்லாம்?"

"துட்டு?"

"நாந்தாரேன்... கடைக்காரய்யா. இவனுக்கு ஏங்கணக்குலே முழுக்கரும்பு ஒண்ணு குடுத்துரும். அய்யாயிக்கு தனியா இருபத்தைஞ்சுரூபாய்க்கு சரக்கு குடுத்துரும். நா தந்துருதேன்..."

அவளுக்குள் வந்த உயிர். மூச்சுத்திணறலின் இறுக்கம் தளர்ந்த ஆசுவாசம். சோத்துக்கு வழிதட்டுப் பட்டுவிட்ட வெளிச்சம்.

அப்பவும்...

கண்ணிலே கேள்வியுடன் அவனைப் பார்த்த அய்யாயி.

"தானமில்லேம்மா, தருமமில்லேம்மா. நாளை மறுநாளைக்கு கீகாட்டுப் புஞ்சையிலே களைவெட்டு கிடக்கு. வந்துரு. கூலியிலே கழிச்சுக்கிடுதேன்."

ஓங்கு தாங்கான இளவட்டம். பசையுள்ள சம்சாரி வீட்டுப்பிள்ளை. மனசைப்போல உயர்ந்த உடம்பு. வலதுகை செய்தது இடதுகைக்குத் தெரியாத கண்ணியத்துடன் போய்க்கொண்டிருந்த மெத்தை வீட்டுப் பிள்ளை. கதர்சட்டை, மடித்துக்கட்டிய கதர் வேட்டி, மனசைப்போல வெள்ளை. பெரியவீட்டுப் பிள்ளைக்குரிய தன்மை. திரும்பிப் பார்க்காமல் போகிற பெரியமனிதத் தோரணை. நன்றிப்பார்வையை வாங்கிக்கொள்ளாமல் போகிற உயர் பண்பு.

தெருவில் போய்க்கொண்டிருக்கும் அவன் உருவத்தையே நெகிழ்ந்த மனசோடு பார்த்த அய்யாயி கண்களில் ஈரத்திரைகள்.

வீடெல்லாம் கரும்புச் சக்கைகளாக்கிப்போட்டிருந்த முத்து. உரித்துப்போட்ட—மென்று துப்பிய சக்கை இணுக்குகள். அடைந்துவிட்ட பொழுதின் சுவடுகளை மறைத்துக்கொண்டு கவிகிற இருட்டு.

அடுப்பில் எரிகிற தீ. பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற அய்யாயியின் வலதுகால் முழுவதும் தீயின் இரத்த ஒளி, காந்துகிற வெக்கை. சோறு கொதிக்கிறது.

அவள் பார்வையின் தீவிரம் எரியும் நெருப்பின் அலைவிலேயே பதிந்துகிடக்க... மனசு எங்கோ அலைந்து கொண்டிருந்தது.

வாழ்க்கைப்படுவதற்கு முன்பே ரெண்டு தடவை நடந்த கருக்கலைப்புகள். கல்யாணத்திற்குப் பிறகும் அவள் அவளாகவே... அரசல் புரசலாக அறிந்த புருஷன் அடித்தான். வைதான், சண்டையும் சத்தமுமாய் நாலைந்து வருஷங்கள் சத்தமில்லாமல் நகர்ந்துவிட...

இவளை விட்டுவிட்டு எவளையோ ஒருத்தியை கூட்டிக்கொண்டு ஓடிப்போன அந்தப்பாவி...

கருவேப்பிலைக்கொத்து மாதிரி ஒரு பிள்ளை. மணியான முத்து. அவள் வாழ்வின் மையமானான். ஆணிவேரானான்.

அற்றலைந்து வந்துவிழுந்த ஒரு நாற்பது வயசுக்காரனை ஆண் துணையாக்கியிருந்தாள். அவனும் தளர்ந்து... நோயின் பிடியில் நைந்து... லாயக்கற்ற ஓர் உயிர் பிண்டமாக...

கூலி உழைப்பில் வயிறு வளர்க்கிற அய்யாயி, மகனை வளர்க்கிறாள். முப்பது வயதுக் கட்டுடம்பு. மிச்சமிருக்கும் வாழ்க்கை, வேட்கை, நெகிழும் இளகிய மனசு.

எதுக்கும் வழியில்லாத கிராமத்து ஆம்பிளைகள் வந்து பல்லையிளித்து ஈனப் பிச்சைகேட்டால்... தானம் போட்டுவிடுவாள். அப்புறம்தான்— தானம் தந்தோமா, பிச்சை

எடுத்தோமா என்ற குழப்பம் வரும். சரியா தப்பா என்ற நமைச்சல் வரும்.

படைத்த சாமியை— வாய்த்த வாழ்க்கையை நினைத்த சலிப்பில்—கசப்பில்—காறித் துப்பிவிட்டு தலையைச் சொறிவாள். "ஏங்கையிலே என்ன இருக்கு? அப்படியும் இப்படியுமா சீரழிஞ்சு... புள்ளைக்காக உசுர் வைச்சிருக்கணும்" என்று முணுமுணுத்துக்கொள்வாள்.

'குருட்டுப்பய தெய்வம். எம் மனசுலேயும், எந்தலை யிலேயும் மட்டும் கோண எழுத்து கிறுக்கி வைச்சுட்டு கூத்துக்கட்டுது. நாதியத்த பொட்டச்சிறுக்கி. நா என்ன செய்ய...?'

சாமியை வைகிறாளா, அவளையே வைதுகொள்கிறாளா என்ற திகைப்பு வரும். வந்த பெருமூச்சு அதைக் கடத்திக்கொண்டு போய்விடும்.

"யம்மா..."

நெருப்புலகத்துக்கு வந்தாள்.

"என்னடா?"

"சோறு வைக்கீயா?"

"பேதியிலே போறவனே, கரும்பைத் தின்னுக்கிட்டிருக்கே இல்லே? சோத்தைக் கொண்டுபோயி எதுல கொட்டுவே?"

"வாயிலேதான்."

கோபத்தை மறந்து மகனின் வெள்ளைப்பேச்சில் சிரித்துவிடுவாள்.

"பொறுடா... போட்டுத் தாரேன்..."

"அம்மான்னா... அம்மாதான்..."

"ஆமாப்பா... ஒன்னோட அம்மாவை நீதான் மெச்சிக் கணும்"

வந்து முதுகில் விழுந்த முத்து. கழுத்தைக் கட்டிக் கொண்ட முத்து. உட்கார்ந்த நிலையில் அவள் குனிந்து நிமிர, முதுகின் பாசமூட்டையாக அவனும் சேர்ந்து ஆட...

அவளுக்குள் ஒரு பரவசப்பெருக்கு. சகல அழுக்குகளையும் அடித்துக்கொண்டோடுகிற உணர்வுப் பிரவாகம்.

வயிற்றுக்குள் கிடந்த உயிர்ப்பாரம், முதுகில் கிடந்து மனசை ஆட்டுகிறது.

வீடெல்லாம் நிறைந்துகிடந்த கரும்புச் சக்கைகளை விளக்குமாற்றால் கூட்டுகிறபோது மனசுக்குள் வந்த அந்தப் புண்ணியவான். மெத்தை வீட்டுப்பிள்ளை. இரக்கப்பட்டு வீசியெறிந்துவிட்டுப் போன இன்றையப்பொழுது.

திரும்பிப் பார்க்காமல் போன அந்தப் பெருந்தன்மை.

"ஹ°...ம்! என்ன இருந்தாலும்... பெரிய வீட்டுப் புள்ளைன்னா... அது ஒரு தரம்தான். ஒரு உசரம்தான்..."

நல்லுணர்வின் நெகிழ்வோடு முணுமுணுத்துவிட்டு வட்டிலை எடுத்தாள், சோறு வைக்க. வீட்டின் முன் தாழ்வாரத்திலிருந்து வருகிற ஆட்டின் கதறல்.

"ம்...ம்...மேய்...க்...க்... ம்ம் மேய்... க்...க்..."

"பொறு சனியனே... ஒனக்கும் கொள்ளை போகுதா? இந்தா வாரேன்..."

காய்ந்து கிடந்த கொழைகளை அள்ளி உதறிக்கொண்டே வெளியே போனாள். கொழையைக் கண்ட ஆதாளியில் தறிய முறிய குதிக்கிற வெள்ளாடு, குட்டிகள்.

தொங்கிய கயிற்றில் கொழையைக் கட்டித் தொங்க விட்டாள். குட்டிகளும், ஆடும் 'கறுச், கறுச்' சென்று ஆவல் பறப்போடு கடித்தன.

சொந்த ஆடு இல்லை. கீழவீட்டு ராமக்கா ஆடு. வளர்க்கிற பொறுப்பு மட்டும் இவளுக்கு. குட்டிகளை, ஆட்டை விற்கிறபோது... இவளது வளர்ப்புக் கூலிக்கு ஒரு பங்கு வரும்.

மறுநாள் சாயங்காலம், ராமக்கா புஞ்சைக்கு விதை ஊன்றப் போயிருந்த அய்யாயி... கூலி வாங்கப் போய்விட்டு அப்போதுதான் வந்திருந்தாள்.

கூரைக்குடிசைக்கு முன்னால் ஒரு முற்றம். அதற்கும் தள்ளி பாதை. அங்கேயே சைக்கிளில் ஒரு காலை வைத்து நின்ற மெத்தை வீட்டுப் பிள்ளை.

"அய்யாயி..."

"என்னய்யா..."

குடிசைக்குள்ளிருந்து குனிந்த நிலையில் வெளியே வந்து நிமிர்ந்த அய்யாயி, குலைந்து ஒதுங்கிக்கிடந்த மாராப்புச் சேலையை ஆற அமர ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள்.

அவன் இந்தப் பக்கமே பார்க்கவில்லை. எங்கேயோ பார்த்துக்கொண்டு பேசினான்.

"நாளைக்குக் களை வெட்ட வர்றே, இல்லை?"

"ஆட்டுமய்யா... வேற யாரும் வர்றாகளா?"

"நீயில்லாம மூணுபேரு... காலை வேலை. வெள்ள னத்துலே வந்துரு. கீ காட்டுப்புஞ்சை."

"சரிய்யா..."

திரும்பிப் பார்க்காமல் சைக்கிளை உந்தித் தள்ளிப்போய் விட்ட அவன்.

'வாங்குன கடனுக்கு நாளைக்குக் களை வெட்டிட்டா... நாளைப் பொழுதை எப்படி நகர்த்துறது?'

மிச்சமாக இருந்து மனசை நச்சரித்த கேள்வியை ஒரு பெருமூச்சில் ஊதித் தள்ளிவிட்டு உள்ளே போனாள்.

முழுக் கரும்பு ஓசியா வாங்கிக் குடுத்த புண்ணியவானின் மனசுக்குள் அலைபாய்ந்த நினைவுகள்.

கூடச்சேர்ந்து களைவெட்டிய பெண்கள் வீட்டுக்குப் போன பின்பு ... பம்ப் ஷெட் மோட்டாரில் தலையைக் கொடுத்து குளித்து, துணிமணியை அலசிய அய்யாயி. ஆற அமர ஒற்றையடிப்பாதையில் நடந்து வந்தாள். சுற்றிலும் வேலிக்காடு. மயில்கள் இரை பொறுக்குகின்றன.

பின்னால்... ஏதோ அரவம். திரும்பிப் பார்ப்பதற்குள் சைக்கிள் மணியின் கணீர்.

தனியாக ஒதுங்கி, இவளைக் கடந்து தள்ளிப்போன அவன் ஒரு காலை தரையில் ஊன்றினான்.

"அய்யாயி..."

"என்னய்யா..."

ஈரச்சேலையோடு பின்னால் நின்ற இவளை அவன் திரும்பிப் பார்க்கவில்லை.

"கடனைக் கழிச்சுட்டா... இன்னிக்கு சோத்துக்கு வழியிருக்கா?"

"இல்லேய்யா..."

"அப்ப... அம்மாகிட்டே போய் கூலியை வாங்கிக்க." "அப்ப... நீங்க தந்தா..."

இருக்கட்டும். நீ தோதுப்பட்ட நேரத்துலே வேலை பார்த்து கழிச்சிக்கோ..."

"அய்யா..."

"என்ன?"

இப்போதும் பார்வை திரும்பவில்லை. குரல் மட்டுமே வருகிறது.

"புஞ்சையிலே அகத்திக் கொழை ரொம்பக்கிடக்கு."

"ஆமா..."

"ஆடு, குட்டிகளுக்கு இரை இல்லே. நாலு இணுக்கு ஒடிச்சுக்கட்டா?"

"ஒடிச்சுக்க. பொழுதடையப்போய்... யாருக்கும் தெரியாம ஒடிச்சுக்க. தெரிஞ்சாக்கா... ஒனக்கு எனக்குன்னு எல்லா நாய்களும் வந்து நிக்கும்."

அப்படியே தலைகுனிந்து சைக்கிள் பெடலை ஒரு அழுத்து அழுத்தி நகர்ந்தான். பார்வை திரும்பாத மன உயரம்.

சைக்கிள் நகர்ந்துபோன பிறகு... இவள் நடந்தாள்.

இவளுக்குள் குட்டிகளின் குதூகலக் குதியாட்டம். ஆட்டின் ஆவல் பறப்பு. பச்சைக் கொழையைப் பார்த்த மனப்பரவசம்.

'அடுப்பு வேலைகளை முடிச்சுட்டு வந்தா... சரியாயிருக்கும்.'

மனசு இலேசாயிற்று. உலை காயும், குட்டிகளுக்கும் இரை கிடைக்கும்.

மனசுக்குள் முத்து வர... நடையை எட்டிப்போட்டது தாய் மனசு.

மஞ்சள் வெயிலும் கண்ணை மூடிக்கொள்ள... மேகத்தின் வெளிச்சம் மட்டுமே மிச்சமாயிருந்த நேரம்.

ஆயிற்று. மகனுக்கு ஆவி பறக்க சோற்றைப் போட்டாள்.

"ஏலேய் ராசா..."

"என்னம்மா?"

"சாப்பிட்டுட்டு வீட்டைப் பாத்துக்க, அம்மா போயி... ஆடுகுட்டிகளுக்கு அஞ்சாறு இரை பாத்துட்டு வந்துருதேன்..."

"ஆட்டும்மா..."

ஊரைக் கடந்தாள். புழுதியை கிளப்பிக்கொண்டு செம்மறியாடுகள் மந்தை மந்தையாக வருகின்றன. விறகுவெட்டுக்குப் போனவர்கள் அரிவாளும் கம்புமாக சைக்கிள்களில் விர், விர்ரென்று விரைகின்றனர்.

இவள் ஒற்றையடிப்பாதையில் நடந்தாள். வேலிக் காட்டுக்குள் சிள்வண்டுகளின் இரைச்சல். சில்லான்களின் "சிப்ட், சிப்ட்"டென்கிற சத்தம். கொக்குகள் மூலைச்சாயலாகப் பறக்கின்றன.

கீகாட்டுப் புஞ்சைக்குள் போனாள். கொழை ஒடிக்கப் பட்டிருந்த தடயங்கள். ஒடிபட்ட இடங்களின் திரவக்கசிவு.

பார்த்தால்—

பம்ப் ஷெட் ரூம் பக்கத்தில் கட்டாகக் கட்டப்பட்டிருந்த அகத்திக்கொழை.

'யார் ஒடிச்சிருப்பாக'?

நினைவின் கேள்விக்கு பம்ப்ஷெட் ரூமிற்குள்ளிருந்து பதில் வந்தது. "நான்தான்..."

மெத்தை வீட்டுப்பிள்ளை.

அவளுக்குள் அதிர்வில்லை. ஆச்சரியமுமில்லை.

"ஏய்ய... இங்க உள்ள வா..."

"என்னத்துக்கு?"

"வான்னா... வாயேன்..."

அதட்டுகிற குரலின் அடியில் ஒரு நடுக்கம்.

அவள் திகைத்த கணத்தில் அவளை விருட்டென்று உள்ளே இழுத்துக்கொண்ட அவனது பதற்றம். அதிகாரமான ஆக்கிரமிப்பு. சம்மதத்தையோ, மறுப்பையோ எதிர்பார்க்காமல் உரிமையோடு எடுத்தணைத்துக்கொண்ட அத்துமீறல்.

*நா என்ன மனுசியா... சைக்கிளா?*

*அவளுக்குள் முள்ளாக உறுத்திய ஒரு நினைவு.*

*"உங்க தரம் என்ன... என் தரம் என்ன...? இது அசிங்க மில்லியா?"*

*"மச்சூ... பேசாம இரு..."*

*அவனது ஆக்கிரமிப்பு, அவசரம், பரபரப்பு, தன் முனைப்பான மும்முரம்.*

*இருட்டும் புழுக்கமுமான அந்த ரூமிற்குள் அவளை அவன்...*

*ஆத்திரமும், அவசரமுமாய்... யந்திரகதியில்...*

*இம்புட்டு அல்பத்தனமா... ஈனத்தனமா... பல்லையிளிக்குற பிச்சைக்கார நாய்க்கு என்ன பகுமானம் வேண்டிக்கிடக்கு? ஒழுக்கசீலன் மாதிரி என்ன பாவலா? இரக்கப்பட்டு உதவி செய்கிற பெருந்தன்மைப் பாவனை? பெரிய வீட்டுப் பிள்ளைக்குரிய கர்வதோரணை? ஏறிட்டுப்பார்க்காத வேஷம்?*

*கள்ளநாய்க்கு என்னத்துக்குக் கழுத்து மணி?*

*அடுப்பங்கரைக்குள் பிச்சைக்காரன் நுழைந்துவிட்ட மாதிரி அவளுக்கோர் அசூயை, எரிச்சல். தானடித்தமூப்பாக ஆக்ரமிக்கிற அல்பம்... வேஷம் கட்டுகிற படம். ராஜவேஷம் போடுகிற பிச்சைக்கார நாய்.*

*அவனது அவசரம். ஆவேசம், வாலிப வேகம்.*

*அவளுக்குள் கோடை மழையில் நனைந்த ஈரமண்ணின் நெகிழ்வு. நிறைபானையாகத் ததும்பி வழிகிற திரேகக்குழைவு, திரேகப் பரவசம், புல்விதைகளெல்லாம் முளை விடுகிற உணர்வின் புல்லரிப்பு.*

*அத்தனையும் தாண்டி மனசுக்குள் ஒரு முள். வன்மம், கள்ளமும் கபடமுமாயிருக்கிற இந்த ஈனத்தின் அதிகாரத்து*

*வத்தைக் காறித் துப்பணும், பழிவாங்கணும்... எப்படி...? எப்படி...? எப்புடி...?*

*வேர்வையும், இளைப்புமாக விலகப்போன அவனது மார்பில் பாதம்பதித்து ஓர் உதறு உதறினாள். இளக்காரமான அந்தக் கால் எற்றலில் தள்ளிப்போய் விழுந்த அவன்.*

*"ச்சீய்... போடா நாயே..." வெறுப்பின் உச்சத்தில் காறித்துப்பினாள். "நீயெல்லாம் ஒரு ஆம்பளையா? ஏலமாட்டாத ஒனக்கெல்லாம் என்னத்துக்கு இந்த நெனைப்பு?"*

*ஆற அமர துணிமணியை ஒழுங்குபடுத்தினாள். அவனை ஒரு புழுவைப்போல அசூயையாகப் பார்த்தாள் அவளது ஏளனப் பார்வையில் — அவன் ஒரு புழுவாகவே தன்னை உணர்ந்தான். மிதியிலும் வார்த்தைக் கத்திகளிலும் அவன் உயிரறுந்த மாதிரியாகிப் போனான். 'தானே ஒரு சும்மா' என்ற உணர்தலின் பயங்கரத்தில் குன்றிக்கூசி நடுங்கிப்போய்க் கிடந்த அந்த அவமானப் பிண்டத்தை ஓர் அழுக்குத் துணியைப்பேல் காலால் ஒதுக்கிவிட்டு வெளியே வந்த அய்யாயியை—*

*ஜில்லென்று அந்திக்காற்று தழுவி பரவசப்படுத்தியது. கண்ணை மூடி அந்தச் சுகத்தை அனுபவித்தாள்.*

*இந்திரனை ஜெயித்த அகலிகையாக ஊரை நோக்கி நடந்தாள் அய்யாயி.*

—செம்மலர் பொங்கல் மலர் 1-1-2000

# தகிப்பு

அரை உறக்கத்தில் புரண்டாள் அருமைக்கனி. உறக்கச் சடவு கலையாமல், மனசின் கை தன் போக்கில் துழாவியது. துடவியது. கையில் தட்டுப்பட்ட வெறுமையில், 'வெறுக்'கென விழித்தாள். சுள்ளென்று சுட்ட சூன்யம்.

புருஷனைக் காணவில்லை. நேற்று காலையில் வீட்டை விட்டுப் போனவன். இன்னும் வரவில்லை என்பது ஞாபகத்தில் சுரீரென்று சுட்டது.

"எப்ப வருவீக?"

"அநேகமாக... நாளைக்கு மதியத்துலே வந்துருவேன். போற ஜோலி முடிஞ்சிரும்."

"வந்துருவீகள்லே? மாத்தம் ஒண்ணும் இருக்காதே?"

"கட்டாயம் வந்துருவேன். மதியம்ங்குறதுலே மாத்த மில்லே. பஸ் கெடைக்குறதுலே ஏதாச்சும் முன்னே பின்னே ஆச்சுன்னா... சாயங்காலம் வந்துருவேன்..."

சத்தியம் பண்ணாத குறையாக அடித்துச் சொல்லிவிட்டுப் போனவன். மதியமும் வரவில்லை. அந்தியும் வரவில்லை. ராத்திரி படுக்கிற நேரம் வரைக்கும் மனுசன் வரவில்லை.

அகால நேரத்தில் — சாமக்காட்டில் வந்து கதவைத் தட்டுவானோ...?

'சாப்ட முடியலே. தோதா எதுவும் அமையலே. சோறு கீறு இருக்கா?' என்று கேட்டாலும் கேட்பானோ? கேட்ட மனிதருக்கு 'இல்லை' என்று சொல்லவா? வாயைத் திறந்து 'சோறு' என்று கேட்ட ஆம்பளையைப் பசியோடு படுக்கவிடவா? பாவமில்லையா?

அதனால் எடுத்து வைத்திருக்கிற சோறு. குழம்பு.

உறக்கச் சடவை உரசுகிற சோறு. குழம்பு என்னாகி யிருக்கும்? கெட்டுப் போயிருக்குமா?

வெறுப்பும், எரிச்சலுமாக மனசு சிடுசிடுத்தது. ஓடிப்போன உறக்கம்.

'இந்தப் பாவி மனுசராலே வர்ற தொல்லைக கொஞ்சமா, நஞ்சமா? ச்சேய்!'

பெருமூச்சோடு எழுந்தாள். உடம்பை வாட்டி எடுக்கிற அயற்சி. வாயில் ஊறியிருந்த எச்சிலின் கெட்ட ருசி.

கதவைத் திறந்து, இருட்டின் முகத்தில் துப்பினாள். குலைந்து கிடந்த இருட்டான தலைமுடியை அள்ளி உதறி முடிந்தாள். ஒதுங்கிக் கிடந்த மாராப்புச் சேலையைச் சரி பண்ணிக் கொண்டாள். குண்டு லைட்டைப் போட்டாள்.

மங்கலான சந்தன வெளிச்சத்தில் சுருண்டு கிடக்கிற மகள், மல்லிகா. இந்தச் சித்திரை வந்தால்... ஒன்பது முடிந்து, பத்து வயது பிறக்கும். ஒதுங்கிக் கிடக்கிற பாவாடையை ஒழுங்குபடுத்தி விட்டாள். குண்டக்க மண்டக்க சுருண்டு ஒடுங்கிக் கிடந்த மகளை நேராக இழுத்துவிட்டாள். சூப்பிக் கொண்டிருந்த விரலை இழுத்தாள். விரல் வெளுத்திருந்தது. போர்வையை இழுத்து மூடினாள்.

வெளியே வந்தால்... சூழ்ந்து நெறிக்கிற இருட்டு. சிள்வண்டின் ‘ங்ங்ஙீய்ய்’யென்ற இரைச்சல். இருட்டின் இறுக்கத்தை உடைக்கிற வெள்ளி வெளிச்சம். விரித்த கறுப்புச் சேலையில் விதைத்த சோளப் பொறிகளாக ஆகாயப்பூக்கள்.

நேரம் என்ன இருக்கும்? நடுச்சாமம் இருக்குமா? கூட இருக்குமோ? தெரியவில்லை.

ஊரடங்கிக் கிடக்கிற கனத்த அமைதி. சிக்கென்று இறுகிப் போயிருந்த மௌனம். சாமத்துக்கும் மேலிருக்கும். இரண்டு மணி இருக்கும் போலிருக்கிறது.

உபாதையை இறக்கிவிட்ட நிம்மதியில் உள்ளே போனவளை, பின்பனி துரத்தியது. நடுக்கியது. ‘இஸ்ஸ்ஸ்’ஸென்று சிலிர்த்தாள்.

சோற்றுப் பானையைத் திறந்து பார்த்தாள். நாசிக்குள் வந்து மோதுகிற வேற்றுவாசம். வீச்சம். சோறு நொய்ந்து விட்டது. கெட்டுவிட்டது. இனியென்ன? சுட வைக்காத குழம்பும் நாறிப் போயிருக்கும். எல்லாம் வீண். மண்.

“இந்தக் கூறுகெட்ட ஆம்பளை செய்ற கூத்துலே காசு போட்டு வாங்கி, ஆக்கி அவிச்சதை வாய்லே போட வழியில்லே. வம்படியா கீழே போட வேண்டியிருக்கு. வாரேன்னு சொன்ன நேரத்துலே வந்து சேர வேண்டாமா, ஆம்பளை? பொறுப்பு வேண்டாம்? மனசுலே அக்கறை வேண்டாம்?”

எரிகிற மனசிலிருந்து தெறிக்கிற கங்குச் சொற்கள்.

சோற்றையும், குழம்பையும் வழித்து ஊறல்பானையில் போட்டாள் அருமைக்கனி. சட்டியிலும், பானையிலும் தண்ணீரை ஊற்றி தொட்டியில் போட்டுவிட்டு, மகளை ஒட்டிப் படுத்தாள்.

அருமைக்கனி மனசுக்குள் இருட்டும், தனிமையும் வந்து கவிகிறது. 'ஆம்பளைத் துணையில்லாத ராத்திரி என்ற தனிமை உணர்ச்சி. சற்றே பயநிழல், அடிமனசில்.

'ஒத்தை மனுசியா நின்னு பொம்பளை மனம் பதைச்சுக் கெடப்பாளே... ஆதரவா—தொணையா—நாம இருக்கணு மேங்குற நெனைப்பு வேண்டாம்? மனசுலே பாசம் இருந்தா, ஆம்பளைக்கு ஆசை நேசம் இருக்கும். அக்கறை இருக்கும். காலா காலத்துலே வீடு வந்து சேரும்.'

அருமைக்கனிக்குள் கோபமும் குமைச்சலுமாய் பொங்கிப் பிரவகிக்கிற அனல் நினைவுகள். ஆங்காரமும் ஆத்திரமுமாகத் தகிக்கிற உணர்வு.

சுற்றி நிலவும் சூன்யம் கனக்கிறது. துணையில்லாத வெறுமை முள். தனிமைப் பாலையில் ஒற்றையாக விடப்பட்ட ஒரு மனத்தவிப்பு, மனத்தகிப்பு. செம்போத்துப் பறவையின் ஏக்கக் கூவலாக உள்மனம்.

இந்தப் பக்கம் ஒருக்கழித்துப் படுத்தாள். தலைக்கு அடியில் மடங்கிக் கிடந்த முழங்கை மரத்துப்போன மாதிரியிருந்தது. அந்தப் பக்கம் படுத்துப் பார்த்தாள். ஈரத் தரையில் படுத்திருப்பவளைப்போல நிலைகொள்ளாமல், மாறிமாறிப் புரண்டாள்.

புரள்கிற மனசு. நிலைகொள்ளாமல் அலைபாய்கிற நினைவு. எரியும் மனதுக்கு எதிரொலி தருவதற்கு ஆளில்லை. எறியும் சொல்லுக்கு மறுசத்தம் தருகிற உயிரில்லை. உயிர்ச் சூடு இல்லை. சூட்டின் கதகதப்பு இல்லை. அரவணைக்கிற கையின் வெதுவெதுப்பு இல்லை. உள்ளங்கையின் அத்து மீறல் இல்லை. அத்துமீறலின் குறும்பு இல்லை. வைதால், வாங்கிக் கட்டிக்கொள்கிற அசட்டுச் சிரிப்பு இல்லை. மனசின் உள் மூலை முடுக்குகளைத் தொட்டுத் துழாவுகிற உணர்வுக்

குறுகுறுப்பில்லை. மனசுக்குள் மனசாக நுழைந்து இழைகிற மீசை வருடல் இல்லை. மனத்துணை இல்லை.

இல்லை... இல்லை... இல்லைகள்... ஏகப்பட்ட இல்லைகளால் முற்றுகையிடப்பட்ட அவள். இல்லைகளின் — தனிமைத் தகிப்பின் — சுரீரிடல்களில் அருமைக்கனி.

கனல் பறக்கும் கோபமனசுக்குள் உருத்திரள்கிற வன்மம். திரண்டு, உறைந்து, முறுக்கேறுகிற உணர்வு.

'வரட்டும்... வரட்டும். வர்ற கோபத்தையெல்லாம் தெரட்டி வைச்சு, இந்த ஆளை 'நறுக் நறுக்'குன்னு நாலு கேள்வி கேக்கணும். தலைதொங்கிப் போற மாதிரி, நாலு கேள்வி.'

வன்ம நினைவோடு காலை நீட்டினாள். நீட்டி நிமிர்ந்து படுத்தாள். உள்ளுக்குள் பழைய பழைய நினைவுத் துணுக்குகள்.

இருட்டுக்குள் அண்ணாந்து பார்த்தாள். கூரைமுகட்டில் இருக்கும் சிறு ஓட்டை. அந்தத் துண்டு இடுக்கில் தெரிகிற ஒற்றை நட்சத்திரம்.

'இந்த ஆளு செய்ற கூத்து இப்ப மட்டுமா? எப்பவும் இப்படித்தான். கல்யாணம் மூய்ஞ்ச அந்த நாளிலேயே இதுதான் கொணம். போனா... போன இடம். வந்தா... வந்த இடம். திட்டம் இல்லே. தெளிவுயில்லே. சொன்னபடி நின்னாகணுமேங்குற சித்தமுமில்லே. சித்தம் போக்கு சிவன் போக்குதான். மானாவரித்தனம்தான். மனம் போன போக்கிலே மனுசர் போக்கு.

இதுதான் பிறவிக் கொணம். பிறவிக் கொறை. இடையிலே முறிஞ்ச கொறையான எலும்புக்கு மட்டை வைச்சுக் கட்டி மருத்துவம் பாக்கலாம். பிறவிக் கொறைக்கு

மட்டை வைச்சுக் கட்ட முடியுமா? நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

...**த**லைப்பிரசவம். அம்மா சீர்வரிசையோடு கூப்பிட வந்துவிட்டாள். ஊர் முறை. அம்மாவுடன் புறப்பட்டாகணும்.

அருமைக்கனி மருகினாள்.

'ஐயோ... இந்த ஆளை எப்படி ஒத்தையிலே விட்டுட்டுப் போக? ஆக்கியவிச்சுப் போட ஆளில்லாமல் தவிச்சுப் போவாரே...'

அவனும் அதற்குமேல் கெஞ்சினான்.

"அருமை... நீ போய்ட்டா... நா என்ன செய்ய?"

"வவுத்துப் புள்ளைக்காரி. அம்மா கூப்புட்டா போய்த்தானே ஆகணும்?"

"அப்ப... நா? எங்கதி...?"

"அப்பச் சரி... ஒண்ணு செய்வம்."

"என்னது? சொல்லு, சொல்லு..."

"அம்மாகூட ஊர் மொறைக்குப் போறேன், இப்ப..."

"ம்..."

"ரெண்டு நாள்லே நீங்க வந்து, என்னைக் கூட்டிட்டு வந்துருங்க..."

"ரெண்டு நாள் என்னத்துக்கு? மறுநாளே வந்துருதேன், ஒன்னைக் கூப்புட..."

"வந்துருவீகளா?"

"கட்டாயமா வந்துருவேன்..."

"உடுமாத்துக்குச் சீலை துணிமணி எடுக்காமப் போகட்டா? எடுத்துட்டுப் போகட்டா?"

"என்னத்துக்கு? வேண்டாம். வேண்டவே வேண்டாம். ஒருநாப் பாட்டுக்கு என்னத்துக்கு உடுமாத்து?"

"அப்ப... கூட்ட வந்துருவீகளா?"

"நிச்சயமா வந்துருவேன். நீயில்லாம வீடே வெறும் வீடாப் போயிரும். வட்டில் கழுவி யாரு சோறு வைப்பா? நீ இன்னிக்குப் போ. நா நாளைக்கு வந்து நிப்பேன் 'டாண்'ணு..."

உடுமாத்துச் சேலை எடுக்காமல்... அம்மா பின்னால் போன அருமைக்கனி. மறுநாள் வந்தது. ஆள் வரவில்லை. அதற்கு மறுநாளும் வரவில்லை. மறுநாளுக்கு மறுநாளும் வரவில்லை. நாலைந்து மறுநாட்கள் — ஆளில்லா வெறும் நாட்களாகவே...

உடுமாத்துச் சேலையில்லாமல் பட்ட சிரமம் ஒரு பக்கம், புருஷனைப் பற்றிய தவிப்பும் கவலையும் மறுபக்கம்...

'விட்டுட்டு வந்துட்டமே... சாப்புட்டாரோ... குளிச்சாரோ... நிம்மதியாய் ஒறங்குனாரோ...'

தவியாய் தவிக்கிற மனசு. மருகி மருகி, உருகி கரைகிற உணர்வுகள்.

வயிற்றுப் பாரம் இழுக்கிறது. திண்ணையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்தால் அயற்சி, நிமிர்ந்தால் சோர்வு. அடிவயிற்றின் வலது மூலையில் ஒரு கூச்சம். பிஞ்சுக் கையின் சலனக் கூச்சம். சிறு உயிரின் உறுத்தல். உள்ளுணர்வெல்லாம் பெருவெள்ளமாய் நிறைந்து ததும்புகிற மனப்பரவசம். தன் ரத்த நிழல். வம்சத் தளிர். ஈருயிர்களின் ஒருரு. பரவசத் தத்தளிப்பில் புருஷ முகம்.

இந்த உணர்வுக் கூத்தாட்டத்தை உள்ளுக்குள் கொண்டாட விடாமல், புருஷனைப் பற்றிய நினைவுச் சஞ்சலம்.

*'இன்னும் வரல்லியே... கூப்புட வராம மனுசரு என்ன செய்றாரு? மறுநாள் வாரேன்னு சொல்லிட்டு, ஏழெட்டு நாளா எட்டிப் பாக்கலேன்னா என்ன அர்த்தம்?*

*அவருக்கும் தும்பம், நெனைச்சா... எனக்கும் உயிர் வாதை.*

*இதை நினைக்க நினைக்க கோபமாக நிறம் மாறுகிற தவிப்பு. குமுறலாக முறுக்கேறுகிற சஞ்சலம்.*

*பத்தாம் நாள் மதியம் 'திக்'கென்று வந்து நிற்கிறான்.*

*'சள்ளையும், எரிச்சலுமாய்க் கொந்தளித்த மனசை எப்படிக் கொட்ட' என்று இவள் யோசிக்கிற கணத்தில்—*

*அவன் ஆத்திரமும், ஆவேசமுமாய் வெடித்துவிட்டான்.*

*"என்ன... நீ பாட்டுக்கு உங்க அம்மா வீட்லே வந்து உக்காந்துக்கிட்டே? அடுப்பங்கரையிலே சாம்பலை அள்ளக்கூட ஆளில்லாம... வீடு, கோழி மேய்ஞ்ச குப்பை மேடா கெடக்கு. எனக்குச் சோறு யாரு வைப்பா? விக்குச்சுன்னா யாரு தண்ணி குடுப்பா?"*

*தாட்டு, பூட்டென்று கத்துகிறான். ஆகாயத்துக்கும் பூமிக்குமாக 'தங்கு, புங்'கென்று குதிக்கிறான். கூப்பிட வராமல், ஏங்க வைத்த குற்றத்தை அவன் உணர்ந்த மாதிரியே தெரியவில்லை.*

*அவனையே வெறித்துப் பார்க்கிற அருமைக்கனி.*

*"பாம்புக் கோவில்லேயிருந்து மாட்டு ஏவாரிக வந்துட்டாக. ஏழெட்டு நாளையிலே இருபத்தோரு ஜோடி காளை மாடுகளைக் கைமாத்தி விட்டிருக்கேன். தரகுத் தொழிலைப் பாத்துட்டு வீட்டுக்கு வந்தா... வீடு முள்காடா கெடக்கு. வாரேன்னு சொல்லிட்டு வந்தவள், வேரடிச்சு உக்காந்துட்டா எப்படி?"*

கோபமும் குமுறலுமாய் கொதித்துப் பேசிய அவனது சீற்றம். அம்மா தலையிட்டு, நல்ல வார்த்தை சொன்னாள். 'ஐயா', 'ராசா' என்று சமாதானம் செய்தாள்.

கொதித்துப் போய்க் கிடந்த அருமைக்கனி, உள்ளுக்குள் குமைந்தாள். கொதிப்பையெல்லாம் மென்று விழுங்கினாள். தன் தலையில் வந்து விழுந்திருந்த தலையெழுத்தை எண்ணி நொந்துகொண்டாள்.

"நா வாங்கி வந்த வரம் அப்புடி. அதுக்கு யாரைக் குத்தம் சொல்ல?" என்று சோகமாய் முணுமுணுத்த அருமைக்கனி.

கூறுகெட்ட ஆம்பளை. அப்பவும் இப்படித்தான். பிறந்த பிள்ளைக்குப் பத்து வயதாகப் போகிறது. இத்தனை வருஷம் குடும்பம் நடத்தி, குப்பை கொட்டியாகிவிட்டது. இப்பவும் அப்படியேதான். அதே குணம். உறுதியில்லாத—திட்டமில்லாத —திடசித்தமில்லாத குணம். காற்றின் போக்கில் மிதந்து போகிற சருகு மாதிரியான சுயமற்ற சலனம்.

அருமைக்கனிக்குள் ஓடுகிற நினைவுகள். நினைவில் கடந்தோடுகிற புருஷனின் சுபாவம். பழைய சம்பவங்களின் தழும்புகள். பழகிப் பழகி மரத்துப் போன பழைய காயங்கள். ஆத்ம பங்காளியின் பொறுப்பற்ற குணாம்சம்.

வரிசை தப்பி நீள்கிற நினைவுகள். அங்கும் இங்குமாகத் தாவிப் பாய்கிற நினைவுகள்.

கல்யாணம் நடந்த மறுவாரம். மறுவீடு போகிற சடங்கெல்லாம் முடிந்துவிட்டது. அம்மா வீட்டில் வாசம். மாப்பிள்ளைச் சோறு. கல்யாண விருந்தின் தடபுடல்.

குழாயடிக்கு வந்த புது எவர்சில்வர் குடமாக அருமைக்கனி. இளமையின் மின்னல். புது உலகம் பார்த்த பரவசத் ததும்பல். ஓட்டமும், நடையுமாகத் துள்ளித் திரிந்தாள்.

*அவனும் உருவியெடுத்த வீச்சரிவாளைப்போல வாலிப முறுக்கு. நாதியற்றுத் திரிந்தவனுக்கு ஒரு குடும்பம் கிடைத்த மகிழ்ச்சி. உறவைத் தொட்டுணர்கிற அன்பின் நெகிழ்வு. கோதுமை நிறத் திரேகம். அகல முகத்திற்கு நறுக்கு மீசை ஓர் எடுப்பு. கைப்பனியனோடு திரிந்து பழக்கப்பட்ட அவனுக்கு, கல்யாணக் கட்டாயத்தால் போட்டுக்கொண்ட அரைக்கைச் சட்டை ஓர் ஆடம்பரம். உடம்பில் ஒட்டாத முள் பாரம்.*

*கல்யாண விருந்துப் பரபரப்பில் வீடு ரெக்கை கட்டிப் பறந்தது. பலகார வாசம் தெருவைத் தூக்கியது.*

*விடியற்காலம் சுட்ட பச்சரிசிப் பணியாரம் நாலைப் பிய்த்து உள்ளே தள்ளினான். அருமைக்கனி மாதிரி தித்திப்பு. அடிமனம் வரைக்கும் இறங்கிய இனிப்பு.*

*அருமைக்கனி காலில் சக்கரம் கட்டிய துள்ளல் நதியாக ஓடித் திரிந்தாள். பணியாரம் சுட்டு முடித்த கையோடு, நனையப் போட்ட உளுந்தைப் பிசைந்து தொலியை நீக்கினாள்.*

*ஆட்டுரலில் உளுந்தைப் போட்டு ஆசை ஆசையாக ஆட்டினாள். முந்தா நாள்தான் சொன்னான். 'எனக்கு உளுந்த வடைன்னா உசுரு.'*

*"பொன்னிறத்துல வெந்தெடுத்த உளுந்த வடை மொறு மொறுப்பா – எளஞ்சூடாயிருந்தா எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஏழு எட்டுன்னு ஒரு பிடி பிடிச்சுருவேன்...!"*

*இளம் மனைவியிடம் தன்னைப் பகிர்கிற ஆர்வத்துடிப்பு.*

*"வேற வடைக?"*

*"வேற வடைகளும் பிடிக்கும். உளுந்த வடைன்னா கொள்ளை ஆசை..."*

*"ஏன் அப்படி?"*

"ஊடாலே ஓட்டை இருக்கும். அதனாலே உள்ளேயும் வெளியேயும் ஒரு சீரா வெந்துருக்கும். பக்குவமா இருக்கும். வாசமும் பிடிக்கும்..."

ஆசைப்புருஷனின் ஆசைக்காக ஆசை ஆசையாக மாவாட்டி முடித்து வழித்து வந்த பரபரப்பு. வெள்ளை உறை மாட்டியதுபோல வலது கையெல்லாம் மாவுக் குழைவு. மனசின் மலர்ச்சி. மலரின் வெளிச்சம்.

திண்ணையில் அவன்.

"என்னது? ஒரே ஆதாளியாயிருக்கு? கும்மாளம் போடுதே?"

"வடை சுடணும்..."

"என்ன வடை?"

"உங்க வடை..."

"என் வடையா? என்ன வடை?"

"உளுந்து வடை...."

"அய்க்... அய்க்... சுடு... சுடு... அதை ஒரு புடி புடிச்சிருவம்..."

முகத்திற்கு வந்துவிட்ட மனசு. சிறுபிள்ளையின் குதூகலப் பிரகாசம். அவனது வெள்ளை மகிழ்ச்சி.

எண்ணெயிலிருந்து எடுத்த முதல் வடை. ஆவி வந்தது. உடைந்த மஞ்சளின் உள்நிறம். சூடு தாளாமல் கைமாற்றி கைமாற்றிக் கொண்டுவந்த அருமைக்கனியின் உற்சாகம்.

"இந்தாங்க... உப்பு கிப்பு சரியாயிருக்கான்னு ருசி பாருங்க..."

"நீ சுட்ட வடைதானே? ஒன்னைய மாதிரியே சூப்பரா இருக்கும்..."

"ச்சீய்... சும்மாயிருங்க. ரொம்பவும் தாளிக்காதீக..."

குறும்புச் சிரிப்பும் நாணக்கிளுகிளுப்புமாய் அந்த அறையே ஒளிமயமாயிற்று. இளைய மனசுகளின் இதய உரசல்களில் சீறித் தெறிக்கிற இனிமை மத்தாப்பு.

"இருங்க... வடைக நெறைய இருக்கு. மதியத்துலே கோழியடிச்சு சாப்பாடு... எங்கேயும் போயிராதீக..."

"மாப்புள்ளைச் சோறு சாப்புட வந்த மாப்புள்ளை, விருந்தை விட்டுட்டு எங்க போகப் போறான்?"

"எங்கேயோ பெறப்புட்டுக்கிட்டு இருக்கீகே...?"

"தெக்குத் தெருவுலே ஒரு மாடு வெலை திகையாம இழுத்துக்கிட்டுக் கெடக்கு. போய் முடிச்சுட்டு... வெரசா வந்துருதேன்..."

"ரொம்ப நேரமாகுமா?"

"வடையைச் சுடச் சுட சாப்புட வந்துருவேன். சூடு ஆர்றதுக்கு முந்தி சுடச் சுட வந்து நிப்பேன்..."

"அயத்துராதீக..."

"எதை அயத்தாலும் உளுந்த வடையை அயத்துர முடியுமா?"

குறும்புச் சிரிப்பும், கண்ணடிப்புமாக... 'மறந்து விடமாட்டேன்' என்று சத்தியமுமாக வெளியேறினான்.

போன இடம், நினைத்த மாதிரியில்லை. மாடு திகையவில்லை. பக்கத்தூரில் ஒரு பசு. அது விலை தீர்ந்தால் இதுவும் விலை திகையும் என்ற நிலை. முன் வைத்த காலைப் பின்வைக்க முடியுமா? சைக்கிளின் கேரியரில் ஏறி உட்கார்ந்து விட்டான். காலை, மதியம், மாலை... ஏன்... ராத்திரிகூட ஆள் வந்து சேரவில்லை.

வடை... கோழிக்கறி... சாப்பாடு எல்லாம் ஆறிக் கிடந்தது. யாருமே தீண்டவில்லை. அச்சுக் குலையாமல் அப்படியே கிடந்தது.

மறுநாள்—

அந்தி மயங்கும் நேரத்தில்தான் வந்தான். ரெண்டு மாடுகளையும் விலை பேசி... வாங்கி... விற்று முடித்து... கை மாற்றிவிட்டு, சுளையாக ஐநூறு ரூபாய் சுருட்டிய மகிழ்ச்சியில்... சீதேவிச் சிரிப்பும், சிங்காரக் குதியுமாக வந்தான்.

அழுகையும், கண்ணீருமாய்... விசும்பலும் புலம்பலுமாய் வீடே குதறப்பட்டுவிட்டது என்பது வேறு சங்கதி...

அடி வயிற்றிலிருந்து பீறிட்டு வந்த பெருமூச்சு. அருமைக்கனி கண்ணை மூடினாலும் இருட்டுதான். மூடாவிட்டாலும் இருட்டுதான். சொறிந்து கொண்டே புரளும் மல்லிகா. அவளது சின்னக்கால் அருமைக்கனியின் வயிற்றில் குறுக்காக விழுகிறது. இருட்டுக்குள் இருள் ரூபமாக புருஷமுகம். அவனில்லாத வெறுமை. துணையற்ற சூன்யப் பயங்கரம்.

அப்பவும், இப்பவும் அப்படியேதான். குடித்தனம் பண்ணி பத்து வருஷத்தைத் தின்று தீர்த்தபின்பும், ஆளிடம் எந்த மாற்றமுமில்லை. அதே சுபாவம். அதே இயல்பு. அதே குணம். அதே... அதே... அதே...கள்.

இன்னும் நாலு வருசத்தில் பொம்பளைப் புள்ளை 'உக்காந்துரும்.' பெரிய பிள்ளையாகிவிடும். இனியும் இந்த ஆளு இப்படியேயிருந்தால் எப்படி? பொறுப்பு வர வேண்டாமா? வீடு, பிள்ளை என்று பாதுகாத்து அரவணைக்கிற அக்கறை வர வேண்டாமா? எங்க போனாலும், ராத்திரியானால் வீடு வந்து சேர வேண்டும் என்ற துடிப்பு வர வேண்டாமா? நெஞ்சில் ஒரு பதைப்பு வர வேண்டாமா?

இருக்கட்டும்... இருக்கட்டும்...

இனியும் இப்படியே விடக்கூடாது. இவர் போக்கில் இவரை விடக்கூடாது. வளைச்சுப் பிடிக்கணும். வசக்கணும். குடும்பத்துக்கேத்த மாதிரி சரிப்படுத்தணும். கொத்திக் குதறி நெறிப்படுத்தணும்.

'வரட்டும்... வரட்டும்... நாக்கைப் புடுங்கிக்கிடுறமாதிரி நாலு கேள்வி கேக்கணும். நீயெல்லாம் ஒரு தகப்பனா...? தாலிகட்டுன புருசனா...? நீயெல்லாம் ஒரு மனுசனா? வந்தா வந்த மடம், போனா போன மடம்னு அலையுறதுக்கு நீ என்ன சாமியாரா?'

'நறுக், நறுக்' என்று நாலு கேள்வி. சாட்டைக் கம்பால் சுழற்றிச் சுழற்றியடிக்கிற மாதிரி நாலு கேள்வி. மனசுக்குள் முள்ளாகக் குத்திக் கிழிக்கிறமாதிரி நாலு கேள்வி.

வன்மத்திலிருந்து தெறிக்கிற நினைவுப் பொறிகள். தாறுமாறாக முன்னும் பின்னுமாக ஓடிக்கரைகிற புகை வளைய நினைவுகள்.

எப்போது உறங்கினாள், எப்படி உறங்கினாள் என்பதெல்லாம் அருமைக்கனிக்குத் தெரியவில்லை.

நினைவுகளின் அயற்சியில் கண் சொருகினாள்.

சொருகச் சொருக... தாய்மடிக்குள் முகம் புதைந்து புதைந்து, ஆழ்ந்து செல்கிற இனிய மயக்க உணர்வு.

**வி**டிந்து பார்த்தால்... அப்பவும் ஆளைக் காணோம். அடிமனசில் சப்பென்று அறைகிற ஏமாற்றம்.

வீட்டு முற்றத்தில் நின்று வீதியைப் பார்த்தாள். நீண்டு கிடக்கிற கிழமேல் தெரு. நீளம் நீளமாக மண்ணில் விழுந்துகிடக்கிற வீட்டு நிழல்கள். காலை வெயிலின் குளிர்,

வண்டிப்பாதைப் புழுதியில் படிந்திருந்தது. காய்ந்த சருகுத் தூசிகளும், காகிதக் கசங்கல்களும், கிழிபட்ட வெற்றுப் பான்பராக் பைகளுமாய் தெருப்புழுதி. நீளமாய் நீண்டு கிடந்த தெருவின் மேலக் கோடியில் பிள்ளையார் கோவில். கோவில் வரை பார்வையை எறிந்தாள். எறிந்த பார்வையை எடுக்காமல், நின்று நிறுத்திப் பார்த்தாள்.

அந்த ஆளின் நிழலைக்கூடக் காணோம். மனசில் மோதிய வெறுமை. தெருக்கோடி வரை நீண்டுகிடந்த மனசின் ஏக்கம், கோபமாக நிறம் மாறுகிறது.

'இன்னிக்கும் வரல்லியா?'

வரட்டும். வந்து சேரட்டும். வைச்சுக்கிடுதேன். ரணகாளியா ஆடிற வேண்டியதுதான். சண்டை முத்தி எதுலே முடிஞ்சாலும் சரிதான். தாலியே அ(று)ந்தாலும் சரிதான்... ரெண்டுலே ஒண்ணு பாத்துர வேண்டியதுதான். நாறவசவு வைஞ்சு, பின்னிர வேண்டியதுதான்..

கொதிக்கிற மனசின் தள தளப்போடு முற்றத்தில் தெளித்த சாணிப்பால். விளக்குமாற்றை எடுத்துக் கூட்டிய வேகத்தில், கோப முகம்.

சட்டி, பானை, வட்டில்களைப் பொறுக்கி முற்றத்தில் போட்ட தட புடச்சத்தம். சாம்பலும் கையுமாக உட்கார்ந்தாள். மனசின் ஆத்திரம், கைத்தேய்ப்பில் தெரிய... நிமிசத்தில் வேலை முடிந்தது. ஆடு குட்டிகளுக்குக் கொழையை எடுத்து உதறிக் கட்டிய வேகம். பசுமாட்டுக்குப் புல்லையள்ளிப் போட்ட கோபப் படபடப்பு.

"ம்மா... சாப்புடட்டா?"

மகள் மல்லிகாவின் கேள்வி, தீயாக இருந்தது.

அப்பனைப் போலவே தப்பாமல் வந்து பிறந்திருக்கிற பிள்ளை. நேரங்கெட்ட நேரத்தில் — நிதானமில்லாமல் கேட்கிற சோறு.

'பக பக' வென்று பற்றி நிமிர்கிற ஜ்வாலைகள்.

"ம்மா... சோத்தை வைம்மா..."

ஆங்காரமாய் வெடித்துவிட்ட அருமைக்கனி.

"அடி எடுபட்ட சிறுக்கி... அறிவு இருக்கா, இல்லியா? நானே வெம்பி வெதும்பிக் கெடக்கேன். அடுப்பு மூட்டாமக் கெடக்குறதைப் பாத்துட்டு, சோத்தைக் கேக்கீயே... நாயே..."

"பழைய சோறு இருக்கும்லே?"

"ஒங்கப்பன் வாய்லே கொட்டணும்னு வைச்சிருந்துட்டு... பழைய சோத்தை ஊறப்பானையிலே கொட்டியாச்சுல்லே?"

காரண காரியமற்று வெடிக்கிற அம்மா. சீறிச் சினந்து கங்காகத் தெறிக்கிற அம்மா. தீ முகமாக அம்மா.

கண்ணை மறைத்து முகத்தில் விழுந்த மயிர்க்கற்றையை விலக்கி, காதுக்குப் பின்னால் தள்ளிவிட்ட மல்லிகா... புரியாத குழப்பத்துடன் அம்மாவைப் பார்த்தாள். அம்மாவாக இல்லாத அம்மா.

நீர்கோர்த்து கனத்த மேகமாக அம்மா. மின்னல் வெட்டாகச் சீறித்தெறிக்ககிற பார்வை. இடிமுழக்கமாக கர்ஜிக்கிற கோபக்குரல்.

அய்யா வந்தவுடன் மழை கொட்டுமோ? ஒரு பாட்டத்தில் ஓயுமா? பாட்டம் பாட்டமாகப் பெய்யுமா? மழையின் கூத்தாட்டத்தில் அய்யாவின் கதி என்னாகும்?

அய்யாவை நினைத்தால் 'ஐயோ பாவம்' என்று தோன்றுகிறது. அம்மா முகத்தைப் பார்த்தாள், ஏறிட்டு. ஆங்காரச் சிடுசிடுப்பில் முகவெக்கை. தீத்தகிப்பான பார்வைத் தெறிப்பு. மூன்றுபடி காணப்பயிறு போட்டாலும் பொறித்துத் தள்ளிவிடும்.

ஆறாப்பு புத்தகத்தை எடுத்துக் கொண்டு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்த மல்லிகா. திருக்குறளையும், பதவுரை, கருத்துரையையும் யந்திரகதியாக வாசிக்கிற சிறுமி. மகளை வெறுப்பின் முகச்சுளிப்போடு பார்க்கிற அருமைக்கனி.

அந்த ஆளின் மறு உருவமாக இந்தச் சிறுக்கி. சின்னச்சிறுக்கி.

அடுப்பு வேலை முடித்திருந்தாள் அருமைக்கனி. அவளது மனக்கொதிப்பிலேயே சோறு, குழம்பெல்லாம் வெந்து முடிந்திருந்தது.

'சோறு என்று கேட்டாளே... சின்னநாயிக்குச் சோத்தை வைச்சுக் குடுத்துருவமா?'

தாய்மை நினைவோடு மகளைப் பார்த்தாள்.

ஏறிட்டுப் பார்க்காத மல்லிகா. இந்தப் பக்கமே கழுத்தைத் திருப்பவில்லை. திருக்குறளையே வாசிக்கிறாள்.

மனனம் செய்கிற தீவிரம். ஒவ்வொரு சீரையும் ரெண்டு ரெண்டு தடவை சொல்லிக்கொள்கிற ரிதம். கண்ணை மூடிக் கொண்டும் ஒப்பித்துப் பார்த்துக்கொள்கிற பாட அக்கறை.

மகளையே பார்க்கிற அருமைக்கனி. பார்க்காத பாவனையில் மல்லிகா.

'என்னம்மா...? ஏம்மா கோபமா இருக்கீக' என்று ஒரு வார்த்தை கேட்கக்கூடாது? கேட்டால்... முத்தா உதிர்ந்துவிடும்? 'சோறாக்கியாச்சா அம்மா?' என்று கேட்டால் என்னவாம்? கிரீடம் இறங்கிப் போகுமாக்கும்?

ஊமைக்கள்ளி. விலாவில் வெடித்தவள். மகா அழுத்தக் காரி – அப்பனைப் போல. அதே அச்சு.

முறைக்கிற அம்மாவின் கண்ணில் உருவமற்ற உஷ்ணம். ஒடுங்கிய பார்வையின் தகிப்பு. கோபத்தின் இறுகலான குரலில் அம்மா.

"சாப்புட்டுட்டு பள்ளிக்கோடம் போவலியா?"

"ஞாயித்துக் கெழமையிலே ஒங்க அம்மாவா பள்ளிக்கோடம் நடத்துவாக?"

குட்டி ராட்சஸி. வாயைப் பிடுங்குகிறாள். வார்த்தை களை வளர்த்து, மனக் கோபத்தை ஆற்றிவிடலாம் என்ற நினைப்பு. கோபத்தீயில் நையாண்டி நீரை ஊற்றுகிற முயற்சி.

விறைக்கிற முகம். முறுக்கேறுகிற உணர்வு.

"வாயை ஒடுக்கிப் பேசுடி. முதுகு வீங்கிப் போகும்..." — சீறிப் பாய்கிற வார்த்தைத் தெறிப்போடு... கொழையை அடித்து உதறிக்கொண்டு போகிற கொதிநிலை அம்மா.

அய்யா வந்தால் இன்னைக்குச் சண்டைக் காடுதான். இடியும் மின்னலுமாய் நாசமழைதான். சனக்காடு பிணக் காடாகிற ராட்சஸ மழையில் வீடே நனைந்து கிழிந்துபோகும்.

ஏறுவெயில். இள மதியம். உச்சிமதியம். இறங்கு பொழுது. அந்தி மயக்கம். கருகருவென்று சூழ்ந்து வருகிற இருள். அணு அணுவாக நகர்கிற பொழுது. அடைக்கோழி யாக 'குர்ர்ர்– குர்ர்ர்' ரென்ங்கிற குமைச்சலோடு அருமைக்கனி.

இன்னும் ஆள் வந்த பாடில்லை.

உலையில் ஏற்றிய பானைத் தண்ணீராக 'ங்ங்ங்ஙீய்' யிடுகிற மனது. கணத்துக்குக் கணம் சூடேறுகிற உணர்வு. கொதிநிலையில் தளதளக்கிற நீருலை. 'தக தக' வென்று ஆவியடிக்கிற மாதிரி... வெக்கையும் வேசடையுமான ஆங்காரப் புலம்பல்கள்.

'நாளைக்கு மதியம் வாரேன்னு சொல்லிட்டுப் போய், நாலு நாளாகியும் ஆளு வரலேன்னா என்ன அருத்தம்? காவி கட்டிட்டுக் திரியத் தகுதியான ஆளுக்குப் பொண்டாட்டி என்னத்துக்கு? புள்ளை என்னத்துக்கு? வரப்பா இருக்க முடியாத மனுசருக்கு வாய்க்கால் எதுக்கு? பாத்தி எதுக்கு? அறுக்கத் தெரியாத ஆளோட இடுப்பைச் கத்தி அறுபத்தெட்டு அருவாள் என்னத்துக்கு?

வரட்டும்... இன்னைக்கு. தீக்கோலைச் சொருகிற மாதிரி, 'நறுக் நறுக்' குன்னு நாலு கேள்வி. அடிவிழுந்து செத்தாலும் சரி... அறிவு வந்து ஆளு திருந்துனாலும் சரி... இன்னைக்கு ரெண்டுலே ஒண்ணு பாத்துர வேண்டியதுதான்.'

வெந்து வெந்து கொதிக்கிற தீ மனதோடு அருமைக்கனி. பசியோடு நாவுகளை நீட்டுகிற நினைவு ஜ்வாலை.

பாடுசோலி முடிந்த நிலையில் உடம்பெல்லாம் வியர்வைக்காடு. உலர்ந்த வியர்வையின் நசநசப்பு. பச்சைத் தண்ணீரில் குளித்தாள்.

தாயைப்போலத் தண்ணீர். திரேகமெல்லாம் பாசத்துடன் வருடும். வருடி வருடி – அழுக்கையும், அலுப்பையும் கழுவும். புடைத்தெடுத்த தான்யம் போல உடம்பில் ஒரு சுகம் தரும்.

குளித்து முடித்து, துணிமணியைக் கட்டிக்கொண்டு, ஈரக் கூந்தலை இறுக்கிப் பிழிந்து, வெள்ளைத் துண்டோடு சேர்த்து முறுக்கி அள்ளி முடிந்துகொண்டு வாசலுக்கு வந்தால்...

திண்ணையில் இவன். நாலு கோட்டை அழுக்கில் வேட்டி, பனியன், துண்டு. ரெண்டு பைகளில் முண்டும் முடிச்சுமாகப் பொருட்கள். குண்டு லைட் வெளிச்சத்தில் களையிழந்த அவன். முகத்தில் முள் முள்ளாக ரோமங்கள்.

ஆழ்ந்த வேதனையோடு நிமிர்ந்து அவளைப் பார்த்தான். பார்வையில் கற்றையான சோகம். உயிர் துவண்ட வாட்டம்.

வழக்கமான வாட்டமல்ல. அதையும்விடக் கூடுதலான வாட்டம். முந்தாநாள் அறுத்தப்போட்ட கொடி, உயிரிழந்து... வாடிச்சுருங்கி... சாம்பல் நிறமாகக் களையற்றுக் கிடக்குமே... அப்படியொரு கொடிய வாட்டம்.

"இதையெல்லாம் எடுத்து வை..." என்று பைகளைக் காட்டினான். மடியிலிருந்து ஆயிரம் ரூபாயை எடுத்து நீட்டினான்.

கையசைவில் தாளமுடியாத அயற்சி. குரலில் உயிர் பதற வைக்கும் சோர்வு.

பேசக்கூடச் சத்தில்லாமல், துவண்ட தலையைத் தோளில் சாய்த்து, சுவரில் சரிந்தான்.

ஆத்ம பங்காளி. உயிரில் கரைந்த உயிர். உயிரை அதிர வைக்கிற உடல் சோர்வு.

பதறிப் பதைத்துப்போன உலுக்கலில் அவள்.

"என்னய்யா...? ஒடம்புக்கு என்ன செய்யுது?"

"ஒண்ணுமில்லே. பதறாதே. பதர்ற மாதிரி ஒண்ணு மில்லே..."

"என்னென்னு சொல்லித் தொலையும்யா..."

"லேசா வயித்தோட்டம். மூணு நாளா பீய்ச்சியடிச்சுருக்சு. கொப்புளைச் சுத்தி கவ்விப் புடிக்கிற மாதிரியான வலி. போன எடத்துலே சோறு தண்ணி ஒத்துக்கலை"

"எத்தனை நாளா...?"

"மூணு நாளா ஒண்ணுமே சாப்புடலே. முடியலே. கடுங்காப்பியும், பச்சைத் தண்ணியும்தான். அலைச்சல் வேற.

ஓடம்பு ரொம்பத் தொவண்டிருச்சு... ஓயாம ஓடைக்கு ஓடுனதுலே உடம்பு தாங்கலே..."

"வீட்டைப் பாத்து வந்துட வேண்டியதுதானே?"

"யாவாரத்துக்குப் போயாச்சு. ஏழெட்டு ஜோடி காளை மாடுக தீர்ற மாதிரி நெலைமை. எப்படித் திரும்புறது?"

"சொவரு இருந்தாத்தானே சித்திரம் வரைய முடியும்? சித்திரமா முக்கியம்? சொவருதானே முக்கியம்?"

"சரி சரி... அதான் வந்தாச்சுல்லே? ஆறுன சோறும், மோரும் இருந்தா போதும்..."

"ஓமத்தை அரைச்சுத் தரட்டா?"

"ம்... சாப்புட்ட பெறகு ஓமக்கரைசல் தா..."

"மொதல்லே அலுப்பு தீர நல்லாக் குளிங்க. அப்புறம் மோரும் சோறும் சாப்புடுங்க..."

"ஆட்டும்..."

"இதெல்லாம் ஏங் கெரகச்சாரம்தானே? கொடலெடுத்த கோழியா வந்து நிக்கீக. உங்க ஓடம்பை நோகடிச்சு... என்னத் துக்கு என்னோட உசுரைப் புடுங்குதீக...?"

"சரி சரி... அழாதே... வந்துட்டேன்லே? என்னத்துக்குக் கண்ணைக் கசக்குதே? பாப்பா எங்க?"

"வீட்டுக்குள்ளே பாடம் படிச்சுக்கிட்டிருக்கா..."

கண்ணீரும் முகவாட்டமுமாக அம்மா. உயிர் துவண்ட அயற்சியில் அய்யா.

இடிமுழக்கத்தை எதிர்பார்த்துப் பயந்து கிடந்த மல்லிகா, இந்தப் பூ வாசத்தைப் பார்த்த மகிழ்வை – புதிரை – மனசுக்குள் மறைத்துக்கொண்டு... அப்பாவிபோல பாடம் படித்தாள்.

*"எழுதும்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்*

*பழி காணேன் கண்ட இடத்து.*

*குறளின் பொருள்: "மை தீட்டும்போது இமைகள் மூடிக் கொள்வது போல... கணவனைக் கண்ட கணத்தில் குற்றத்தைக் காணாமல் விட்டுவிடுகிறேன்."*

இதயம் பேசுகிறது 16, 23-7-2000

# போல் ஆகிவிட்டான்

எல்லோரையும் போலில்லை, இராமலிங்கம். ஈரமாகவே இருந்தான்.

நல்ல ரோடு. டி.வி.எஸ் 50ல் ஒற்றையாக வருகிறார். ரொம்ப நேரமாகக் காத்துக்கிடக்கிற ஒருத்தர்... கையைக் காட்டி "வண்டியிலே வரலாமா?" என்கிறார். "வரலாம்" என்றால் எந்த நட்டமுமில்லை. சேதாரம் சிரமம் எதுவுமில்லை. ஆயினும்,

"வீல்லே காத்து கொறையாயிருக்கு" என்ற பொய்யை காற்றில் விட்டுவிட்டு ஆக்ஸிலேட்டரை ஓர் அமுத்து அமுத்தி 'விர்ர்'ரென்று விரைந்துவிடுகிறார்.

ஊர் உலகம் பூராவும் ஆட்கள் இப்படித்தான், இராமலிங்கம் இப்படியில்லை. அவன் மனசில் ஈகை, இரக்கம், நல்லுணர்வு, பிரபஞ்சக் காற்றாகப் பரவிக் கிடப்பதால், "வாங்க ஏறிக்கங்க" என்பான்.

முன்பெல்லாம்:—

அவன் தினந்தோறும் பத்து கிலோமீட்டர் சைக்கிள் மிதிக்க வேண்டும். போய் வருகிற வேலை பஞ்சுமில் அங்குதான் இருக்கிறது.

*சைக்கிள் மிதித்துச் சீரழிகிற நாளிலேயே பெரும்பாலும் 'டபுள்ஸில்'தான் வருவான்.*

*"வரட்டா" என்கிற ஆள்சுமையை கேரியலில் உட்கார வைத்துக்கொண்டு, சீட்டிலேயே ஆற அமர உட்கார முடியாமல்— எம்பி எம்பிக் குதித்து பெடலை மிதித்து வந்தால்... வியர்வை ஆறாக ஓடும்; உடம்பு புண்ணாக வலிக்கும். ஆயினும், மனசில் ஒரு நிறைவு இருக்கும். இறங்கிப் போன அந்தாள், "நீ நல்லாருப்பே" என்று சொன்ன நன்றியாலும், வாழ்த்தாலும் மனசு கிறங்கிப் போகும்.*

*"சரியான கேணப்பய ராமலிங்கம். போறஎடம், வர்ற எடம் பூராவும் வெட்டிப் பாரமா சொமந்துக்கிட்டுத் திரியுதான். கோட்டிக்காரப்பய"*

*என்று ஏளனமும் இகழ்ச்சியுமாக ஊர்க்காரர்கள் பேசிக் கொள்கிற பேச்சு, அவ்வப்போது காதில் விழத்தான் செய்யும். வந்து ஒட்டிய சேற்றுத் துளியை துடைப்பதுபோல அலட்சியத்தால் வழித்தெறிந்துவிடுவான்.*

*அவன் டி.வி.எஸ் 50 வாங்கவே மறுத்தான்.*

*"நமக்கு சைக்கிளே போதுமய்யா. இதை வச்சு இன்னும் பத்து வருஷத்தை ஓட்டிரலாம். கால் மூளை (வலிமை) அத்துப் போகலை."*

*என்று சவடால்தனமாக மறுத்தான்.*

*வெளிமூலம் வந்துவிட்டது. இரத்தம் இரத்தமாக அறுத்து ஊற்றியது. கருணைக்கிழங்கும், கட்டைக் காலுமாய் (பன்றிக்கறி) சாப்பிட்டுப் பார்த்தான். ப(ரு)ப்பு வேகவில்லை.*

*அப்புறம்தான்—*

*ஹோமியோபதி வைத்தியத்தில் நக்ஸ்வாமிகா 200 ஏக்ஸ் மாத்திரையும், கல்கேரியா உப்பும் ரெண்டு மாசம் சாப்பிட்ட பிறகுதான் மூலநோய் முழுசாய்த் தீர்ந்தது.*

வேறு வழியில்லாமல்—

'நம்மூர் வண்டி'யான டி.வி.எஸ் 50ஐ வாங்கினான்.

பாதங்களைச் சுழற்றாமலேயே வண்டி 'விர்,விர்'ரென்று நழுவிக்கொண்டோடுவது வியப்பாக இருந்தது, இராமலிங்கத்துக்கு.

ஸ்டார்ட் பண்ண உதைப்பது தவிர, உடம்புக்கு ஒரு சோலியுமில்லை, உட்கார்ந்தால், அது பாட்டுக்குப் போகிறது. வேகம் வேகமாகப் போகிறது. காற்று எழும்பி... மாயப் போர்வையாக... மார்பு ரோமங்களைத் தழுவுகிறபோது சுகமாகவே இருக்கிறது.

இரமாலிங்கத்துக்கு ஒற்றையாகப் போவது ரொம்பச் சலிப்பாக இருக்கும். கையும், காலையும் பேசாமல் வைத்திருப்பதே என்னவோ போலிருக்கும். வாய்க்கும் வேலையில்லாமல் போய்விடுவது ஏகச் சலிப்பாகிவிடும்.

போகும்போதே யாராச்சும் நின்றால், ஆக்ஸிலேட்டரை லூஸில் விடுவான். வேகம் குறையும்.

"வாரீகளா?" என்பான். வண்டியில் ஏற்றிக்கொள்வான். வழித்துணை, வாய்த்துணையாகிவிடும், என்னத்தையாவது 'கண்டதையும், கழிந்ததையும்' பேசிக்கொண்டு போனால்... பயணச்சலிப்பு தெரியாது.

"நல்லதாப் போச்சு. கண்ணு மூடி முழிக்குறதுக்குள்ளே கொண்ணாந்து வுட்டுட்டீக. உங்க நல்ல மனசுக்கு, நீங்க நல்லாயிருப்பீக."

பாராட்டும், நன்றியுமாக வாழ்த்துகிற குரலைக் கேட்கிறபோது, அடிமனசு முழுக்க இனிக்கும். உயிர்வரை இனிமைக் கரைசலின் பரவல்.

பெருமிதமாக வண்டியை விடுவான், இராமலிங்கம்.

மில் வேலைக்குப் போகிறபோதும் சரி, வேலை முடிந்து ஊர் திரும்புகிற போதும் சரி... அவள் மட்டும் வண்டியில் வருகிற காட்சியை யாரும் பார்த்திருக்கவே முடியாது.

யாராவது ஒருத்தரை பின்னால் நிச்சயமாக ஏற்றியிருப்பான். சிலசமயம் மூன்றாவதாக ஓர் ஆளைக்கூட ஏற்றிக் கொண்டிருப்பான்.

ரெண்டு பெடலுக்கு நடுவில் கால்மிதி ரப்பர் கிடக்கிற இடத்தில் ஓர் ஆளை வைத்திருப்பான். வண்டியை டிசைன் பண்ணியவர்கூட இதைப் பார்த்தால், ஆச்சரியப்பட்டுப் போவார்.

ஊர்க்காரர்கள் இவன் வண்டிக்குப் பெயரே வைத்து விட்டனர்: 'தர்மக்கப்பல்'. 'ஊர்வாகனம்'.

ஒருநாள்—

மில் வேலைக்குப் போய்க்கொண்டிருந்தான். வேட்டியை தாறுமாறாக மடித்துக் கட்டியிருந்த நடுத்தர வயசுக்காரர், கையைக் காட்டினார். மீசை நிறைய வெத்தலைக் கறை.

ஏறிக்கொள்ள தோரணையாக வண்டியை நிறுத்தினான். ரெண்டு பக்கமும் காலைப் போட்டு உட்கார்ந்த அந்த மீசைக்காரர் இவன் தோள்களில் கையைப் போட்டார். குப்பென்று அடித்த நாற்றம்.

பட்டைச்சாராய நெடி, இராமலிங்கத்துக்கு வயிற்றைக் குமட்டியது. கக்கிவிடுவோமோ என்ற பதற்றம்.

ஆயினும்... தர்மசங்கடமான நிலையோடு வண்டியை நகர்த்த, போதையின் முட்டலில் தலை சாய்ந்த அந்த ஆள். இவன் முதுகில் சாய்ந்து, சரிந்து, ஆடுகிற தலை, சட்டை, பனியன் எல்லாம் நனைத்து, முதுகைத் தொடுகிற — அவர் வடிக்கிற — எச்சில்.

...போதையில் இவர் உருளப்போகிறார். ஓடும் வண்டியிலிருந்து சரிந்து தரையில் உருண்டால்... உடம்பெல்லாம் இரத்தச் சிராய்ப்புகள். கையே முறிந்தாலும் முறியும்...

“இவன்தான் எங்கையை ஒடிச்சான்” என்று கூசாமல் சொல்லப்போகிறார். விபரீதம் நிகழப்போகிற திகிலுணர்வு.

இராமலிங்கத்துக்குள் புளியைக் கரைத்தது. குடல் பதறியது. வம்பில் மாட்டிக் கொண்டோமா? வழியில் போன கரட்டானைப் பிடித்து, செவியில் விட்டுக்கொண்டோமோ?...

இராமலிங்கம் ரொம்பப் பதறினான். படபடப்பாக வந்தது.

நல்லவேளை...

அப்படியொன்றும் விபரீதம் நிகழ்ந்துவிடவில்லை.

மூன்றாம் நாள்—

காலை ஷிப்ட். வெள்ளணத்தில் (வெள்ளை நேரம்) வண்டியை எடுத்தான். விடிந்து வெளுத்திருந்த பொழுது. பங்குனி மாசக் காலைக் கூதல், கதகதப்பாக இருந்தது.

ஊரைக் கடந்து கொஞ்சதூரம் போயிருப்பான். ரோட்டிற்கு கிழக்கில்—

ஒற்றையடிப் பாதையில் ஒரு பெண், தோளில் குழந்தை. பதற்றமும், பதைப்புமாக இவனை அழைக்கிற கையசைப்பு. ஓட்டமும் நடையுமான பரபரப்பு. குழந்தை கிடக்கிற தோளுக்கடியில் — கட்கத்தில் — தொங்குகிற கனத்த பை, பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடி வருகிற பதற்றம்.

ஆக்ஸிலேட்டரை லூஸில் விட்டான். கால்களை ஊன்றி நின்றான். “ட்ட்ட்ர்ர்ரூஊஊ... ட்ட்ட்ர்ர்ர்ர்ஊஊ...” என்று விடாமல் புலம்புகிற என்ஜின்.

மூச்சிரைக்க ஓடிவந்து ரோட்டில் ஏறினாள், அந்த இளம் தாய்.

"என்னம்மா..."

" அண்ணாச்சி... புள்ளைக்கு நோக்காடு. ஆசுபத்திரிக்கு அர்ஜென்டாப் போகனும்?"

"என்னத்துக்கு திரும்பித் திரும்பிப் பார்த்தே?"

"வைத்தியச் செலவுக்கு ரூவா வாங்கிக்கிட்டு இவனோட அய்யாவை வரச்சொல்லியிருந்தேன்... வர்றாரான்னு பாத்தேன்..."

"எம்புட்டு ரூவா?"

"நூறு ரூவா"

"நா... ந் தாரேன். மொதல்லே, புள்ளை உசுரைக் காப்பாத்து."

நூறு ரூபாயை வாங்கிக்கொண்டு வண்டியில் ஏறினாள். வண்டி புயல்வேகத்தில் பறந்தது. ஆக்ஸிலேட்டரை முறுக்கினான்.

மில்லுக்குப் பக்கத்தில் போய்... பஸ்ஸில் அவளை ஏற்றிவைத்த பிறகுதான்... இராமலிங்கத்துக்கு நிம்மதியாயிற்று. முறுக்கேறிப்போயிருந்த மனக்கயிறு உயிர்பெற்று தளர்ந்தது. தன்னிலைக்கு வந்தது.

மறுநாளுக்கு மறுநாள்—

நைட் ஷிப்ட் முடித்து வந்த இவனை நாலுபேர் சுற்றி வளைத்து, 'அப்பு, அப்பு' என்று நாலு வைப்பு அப்பினார்கள். சகட்டுமேனிக்கு அடிகள். தடுமாறி விழுந்த இவன் திரேகமெல்லாம் தாறுமாறான கால்மிதிகள், ஆங்காரமும் ஆவேசமுமான தாக்குதல், மூர்க்கமான அடிகள், புரட்டி யெடுத்துவிட்டனர்.

"ஐயோ... ஐயய்யோ... யம்மா... ஐய்யோ... ஆத்தாடி" என்ற அவனது கதறலும் அலறலும் இருட்டில் இடமற்று அலைந்தது.

கேட்பாரற்று — நாதியற்று — இருட்டுக்குள் கலந்து கரைந்த அவனது பயக்கதறல்கள். வலியின் அலறல்கள்.

உடம்பும் சட்டையும் நார்நாராகக் கிழிந்து புழுதியில் கிடந்தன.

எப்படி வண்டியை நிமிர்த்தி—எப்படி வீடு போய்ச் சேர்ந்தான் என்று இராமலிங்கத்துக்கே தெரியாது. வலிதான் தெரிந்தது, உடம்பிலும், மனசிலும்.

என்னத்துக்கு இந்த அடி உதைகள்? எதற்காக இந்தத் தாக்குதல்?

போட்டுப் புரட்டியெடுக்கிற போது, வன்மத்தில் சிந்திய கங்குச் சொற்கள்.

"மப்பேறிப்போயி... மாப்புள்ளை மாத்துற தேவுடியாச் சிறுக்கிக்கு நீ யென்னடா சப்போட்டு?"

"கட்டுன புருசனை வுட்டுட்டு... தேன்கூடாயிருந்த குடும்பத்தையும் நாசக்காடாக்கிட்டு... ஆசை நாயகனைத் தேடி ஓடுற பொட்டை நாயை... கடத்திவிடுற கொம்பனாடா நீ?"

இராமலிங்கத்திற்குள் வேப்பெண்ணெய் குடித்த மாதிரியான குமட்டல். கசந்து அழூர்கிற மனது. கெட்ட கனா கண்ட ஊமையனைப் போல... வெளியே சொல்ல முடியாத வெட்க உணர்வு.

ஒரு குடும்பம் சீர் குலைந்து சிதைவதற்கு நானும் ஒரு காரணமாகி விட்டேனா? மனம்போன போக்கில் காலும் போய் சீரழியப் போகிற ஒரு பெண்ணின் மாயப்பித்த லாட்டத்தில் ஏமாந்துவிட்டேனா? என்னை ஏமாற்றி, முட்டாளாக்கியிருக்கிறாளா? முட்டாளாகியிருக்கிறாளா?

மனசின் ஆணிவேர்வரை இறங்கிப் பரவுகிற வலி. ரணம்.

ஒரு மாதம் மருத்துவமனையில் இருந்தான். உடம்பு குணமாகி, மில்வேலைக்குப் போகத் துவங்கிவிட்டான்.

போய்க் கொண்டிருக்கிறான்.

கையசைத்து "வரட்டா" என்கிற ஆளைப் பார்த்தும், பார்க்காததுபோல... வலதுபக்கமாகக் கழுத்தைத் திருப்பியவாறே, வேகமாக வண்டியின் ஆக்ஸிலேட்டரை அழுத்துகிற இராமலிங்கம்.

எல்லோரையும் போல் ஆகிவிட்டான், இராமலிங்கம். சூரியத் தகிப்பில் ஈரப் பூமியும் உலர்ந்து, சுடத் துவங்கிவிட்டது.

"மின் அம்பலம்"–இணையம் இதழ்

❄

# ருசி

*நி*னைவு மனசின் வசத்தில் இல்லை. நாதியற்ற நாயாக எங்கோ சுற்றியலைந்து கொண்டிருந்தது.

தேயிலைத் தூளை இடது உள்ளங்கையில் தட்டி, நீர் கொதிக்கும் சட்டிக்குள் போட்டாள் பூவம்மா. இடது உள்ளங்கையில் ஒட்டியிருந்த தேயிலைத் தூசியைத் தட்டியது, வலது கை. விறகைத் தள்ளிவிட்டது.

'ங் ஙீ ய் ய் ங்' கென்ற நீரின் இரைச்சல். சுட வைத்து மூடி வைத்திருந்த பாலைத் திறந்து பார்த்தாள்.

சோற்றுக்கு உலை வைக்க அலுமினியச் சட்டியை எடுத்தாள். அரிசியின் அளவுக்கேற்ப சரி தண்ணீர் வைத்தாள்.

அப்போதும் நினைவு வசத்தில் இல்லை. கால் போன போக்கில் காற்றின் வாலாக எங்கோ திரிந்துகொண்டிருந்த நினைவு.

செயல்களெல்லாம் அனிச்சைத் தனமாக இயங்கிக் கொண்டிருந்தன, சுவிட்சு போட்ட யந்திரம் போல. அடுப்பங்கரை யந்திரம்.

கோழிக்கூடு போன்ற குறுகலான அடுப்பங்கரை. நெரிசலாக அடுக்கப்பட்டிருந்த சட்டி பெட்டிச் சாமான்கள்.

இவள் சற்று கூடுதலாக அசைந்தால், முழங்கை இடித்து தம்ளர்கள் உருளும். 'ணங்' கென்று பானை எச்சரித்து அதிர வைக்கும்.

எதுவும் பேச வேண்டியதில்லை. பேசத் தோன்றவில்லை. பயல் படித்துக்கொண்டிருக்கிறான், பரீட்சைக்கு. மகள் தண்ணீருக்குப் போயிருக்கிறாள், குழாயடி. இளையவள் இன்னும் பள்ளியிலிருந்து வரவில்லை.

கொதித்த டீத் தண்ணீரை இறக்கி வைத்தாள். சற்றே மூடி வைத்தாள். தேயிலை நன்கு வேக வேண்டும். டிகாஷன் இறங்க வேண்டும். அப்போதுதான் ருசி வரும்.

பிள்ளைகள் இருக்கிறார்களே... பூராவும் விலாவில் வெடித்ததுகள். அப்பாவைப் போலவே இதுகளும். முதல் மடக்கிலேயே ருசிக்கு மார்க் போடும்கள்.

"இன்னைக்கு நல்லால்லே" என்று பயல் கூசாமல் பட்டென்று சொல்வான். அடுப்பின் வெக்கை. திரேகப் புழுக்கம். காற்றில்லாத நசநசப்பு. எதையும் மதிக்க மாட்டான். அம்மாவின் அவஸ்தையை பொருட்படுத்தவே மாட்டான்.

முகத்திலடித்த மாதிரி நேர்மையாக உண்மை பேசுவான்.

பூவம்மாவுக்குப் பற்றிக்கொண்டு வரும். 'திகுதிகு' வென்று நெஞ்சு கிடந்து வேகும். மகனை அனல் பறக்கப் பார்ப்பாள்.

அவன் அசரமாட்டான். பயந்து பின்வாங்க மாட்டான்.

"என்னம்மா...? நல்லால்லேன்னா... நல்லால்லேன்னுதான் சொல்லுவேன். பொய்யா சொல்ல முடியும்?"

"ருசியோட வேணும்னா... நீ போட்டுக்கோ. வந்து அடுப்பு வேலை பாரு..."

"ம்... அது எப்படி? ப்ளஸ் டூவுக்கு உங்களை பரீட்சை எழுத விடமாட்டாகள்ல்லே? நாந்தானே படிச்சாகணும்."

"அப்பன்னா... வாயைப் பொத்திக்கிட்டு... 'கம்'முன்னு குடி."

"முடியாதுல்லே?" அவனது கேலிக் குரலுக்குள் ஏதோ ஒரு பொடி. பொடி வைத்துப் பேசுகிறானோ? திகைப்பை மறைத்துக்கொள்வாள்.

"முடியாதா? ஏண்டா?"

"ஆமா... வாயைப் பொத்திக்கிட்டா... காப்பி எப்படிக் குடிக்க முடியும்? மூக்கு வழியாவா?"

பூவம்மாவின் வெக்கை அம்புட்டுத்தான். கோபத்தின் மூச்சு நின்றுபோகும். அவனது லேசான 'கடி'யில், வெடித்துப் பூத்துவிடும், மனசு. உதட்டின் மென்மைக் கனிவில் ஈரச் சிலிர்ப்பாக வந்து மின்னும் அந்த மனப்பூ. தாய்மைப்பூ.

மகனின் சிரிப்பில் பூவம்மா முழுசாகச் சிரித்துவிடுவாள். புண் பட்டுப்போன பாவனையோடு சிணுங்கல் சிரிப்பு.

"ஏலேய்... என்ன...? கேலியா பண்ணுதே?"

சிரிப்பும் கோபமும் முரண்பட்டு அழகாய்ச் சேர்ந்திருக்கும். வெயிலும் மழையும் சேர்ந்த கோடையின் அழகு.

உலை வைத்த சட்டியை அடுப்பில் வைத்தாள். கல் பார்த்து புடைத்த அரிசியை அலசினாள். அளைந்தாள். அள்ளி சட்டிக்குள் போட்டாள். உப்பை அளவு பார்த்து, குத்து மதிப்பாகப் போட்டாள்.

நினைவின் அதிர்வில்லாத பணிகள். யந்திரச் சலனமாய் கதி மாற்றமில்லாத சுழல்வு. பிரக்ஞையற்ற பழக்கத்தின் இயக்கம்.

*சீனியை அள்ளிப் போட்டாள், கரிய திரவத்தில். பாலை ஊற்றினாள். ஆற்றினாள். நுரை நுரையாக வந்தது, அந்தத் தங்க நிறத் திரவத்தில்.*

*"யம்...மா!"*

*பொறுமை சிதைந்த மகனின் அழைப்பு. அழுத்தமான கத்தல்.*

*"என்னடா?"*

*மனசின் வசத்துக்கு வந்தது, நினைவு. சட்டென்று ஒரு தென்றல் வந்து அப்பியது போலிருந்தது, நினைவு வந்த உணர்வு.*

*"காப்பி எப்பத்தான் தருவீக?"*

*"என்ன அவசரமா? நெனைச்சவுடனே வருமா?"*

*"ஆமா... வரணும்லே?"*

*"அப்படியெல்லாம் அதிகாரம் பண்ணாதே. உங்கப்பாவே அதிகாரம் பண்ணமாட்டாரு, தெரியுமா?"*

*"யம்...மா, காப்பி இருக்கா, இல்லியா?"*

*"இந்தா..."*

*"கொண்டாங்க..."*

*"வந்து, கிளாஸை எடுத்துட்டுப் போ."*

*"ச்சேய்! ஒங்களோட ஒரே இம்சை!"*

*கோபத்தில் சிடுசிடுக்கிற மகன். தெறிக்கிற உணர்வுத் தீயாக வார்த்தைகள். விருட்டென்று எழுகிறான். விறைப்பும் தெறிப்புமாக முகக்கோணல். 'தக், தக்' கென்று பாதத்தால் தரையை அறைகிறான். வந்து கிளாஸை எடுத்துக்கொண்டு போய், புத்தகத்தின் முன்பு குத்துக்கால் வைத்து உட்கார்கிறான்.*

மகனின் குதியையும், வெடிப்பையும் பார்த்து ரசிக்கிற பூவம்மா.

உதடுகளுக்குள் முத்தமிடுகிற தம்ளர் விளிம்பு. ஆவி பறக்கிற பொன் திரவம். உறிஞ்சுகிறான். முதல் மடக்கு.

டீயின் ருசியில் முகம் மாறுகிறது. பூவாகி மிருதுவாகிற கன்னம். விழிகளை மட்டும் அசைத்து அம்மாவைப் பார்க்கிறான்.

"என்னடா?"

பிளஸ் டூ ரிசல்ட்டுக்காகக் காத்திருக்கும் மனநிலையில் பூவம்மா. "சூப்பர்ம்மா... டீ!"

"ம்..."

உள்ளுக்குள் பெருமித ஊற்றின் பீறிடல். வெக்கையும், நசநசப்பும், புழுக்கமும் மாயமாயிற்று. பாராட்டுப் பூக்களின் வருடல் சுகத்தில் திளைக்க விரும்புகிற மனத்தாகம்.

"நல்லாருக்கா?"

"படு சூப்பர்ம்மா... இன்னிக்கு டீ படு டக்கர்ம்மா..."

"நெசம்மாவாடா?"

"ஆமம்மா... அற்புத ருசி. வாசமே ஆளைத் தூக்குதும்மா."

"ம்..."

அவளுக்குள் வெற்றி பெற்றுவிட்ட துள்ளல். மனச் சிலிர்ப்பு. மறைத்துக்கொள்ள முடியாத மனமகிழ்ச்சியின் வாசப் பேரொளி. கறுத்த முகம். சற்று அகலித்த மாதிரியான மலர்வு.

"அப்ப... நானும் குடிச்சுப் பாத்துருதேன்."

ஒரு தம்ளரில் ஊற்றிக்கொண்டு உட்கார்ந்தாள். நாசி நுனியில் உரசிச் சென்ற புகைக்கோட்டு நெளிவு.

"ஆத்தாளும் மகனும் ஒரே ஆதாளியாயிருக்கு? டீ நல்லா வந்துருக்கா?"

திடுதிப்பென்று வந்து நுழைந்த அப்பா. செருப்பில்லாத கால். மடித்துக்கட்டிய கைலி. திறந்தமேனியில் ஒரே துண்டு ஓரமாகத் தொங்குகிறது. குலைந்து கிடந்த தலைமுடி. ஏறத் துவங்கியிருக்கிற முன் வழுக்கை.

"எப்பா... அம்மா போட்ட டீ... சூப்பர்ப்பா. மூன்று குணமுள்ள டீ. ருசி, நிறம், திடம் மூன்று குணம்."

"என்னடா... தேயிலை வெளம்பரமா, அம்மா வெளம்பரமா?"

"ரெண்டும்தான்..."

"எனக்கு டீ கெடைக்குமா, இன்னைக்கு?"

பூவம்மா துணுக்குற்றாள். ஆயினும் கேலியும், எகத்தாளமுமாகக் கேட்டாள்.

"வீட்டு டீதான் உங்களுக்காகாதுல்லே? கடை டீதான் வேணும்னு கையை வீசிக்கிட்டுப் போவீகள்ல்லே? இன்னிக்கு என்னாச்சு?"

"ஊர்லே ஒத்தக்கடை. அந்த டீக்கடையும் இன்னைக்குப் பூட்டிக் கெடக்கு... டீ குடு..."

நீர்க்குடம் இடுப்பிலிருக்க வீட்டுக்குள் நுழைந்த மகள்.

"பாப்பா, உங்கப்பாவுக்கு ஒரு கிளாஸ்லே டீ ஊத்திக் குடு."

"யம்...மா..."

மகனின் அழைப்பு, சத்தம் குறைவான கிசுகிசுப்பு. சற்றே கெஞ்சலும், கொஞ்சலுமாய் பூ உரசலான அழைப்பு.

"யம்மா...வ்..."

"என்னடா?"

"டீ நல்லாருக்கும்மா."

"அதான்... கூத்தாடி முடிச்சிட்டேயில்லே?"

"இல்லேம்மா... இன்னுமொரு கிளாஸ் டீ கெடைக்குமா?"

அந்தக் கெஞ்சல் பூவாக அல்ல, மனசுக்குள் தேளாகக் கொட்டியது, பூவம்மாவுக்குள். தீக்கங்கு பட்ட மாதிரி சுரீரென்கிற காந்தல்.

ஏதோ நினைவு மயக்கத்தில் தேயிலைத் தூளைத் தட்டியவள்.

வழக்கத்தைவிடச் சற்றுக் குறைவு. அதுபற்றி அப்போது யோசனையில்லை. சமாளிச்சிடலாம் என்கிற நினைப்புகூட வரவில்லை.

மெய் மறந்த செயல்பாடு. எங்கோ நினைவலைய, அனிச்சைத் தனமாகச் செயல்பட்ட யந்திரத்தனம். இப்போது—

தீக்கங்கு சுடுகின்ற சுரணை, நினைவுக்கு நினைவு வருகிறது. 'அடடா... அசந்துட்டமே...'

'ஒரு நாளுமில்லாத திருநாளா 'இந்த ஆளு' வேறெ வந்து நின்னுக்கிட்டு, 'டீங்குறாரு'. இப்ப, இவன் 'இன்னொரு கிளாஸ்'ங்கான். வர்ற புள்ளைகளுக்கு வேணும். கடைசியா வர்ற ரெண்டு பேருக்கு பத்தாக்கொறை வருமே... என்ன செய்ய?"

புழுக் குடைசலாக உள் நெளிகிற யோசனைகள். தயக்கம். மருகித்தவிக்கிற மனக்கிலேசம். பூவம்மாவுக்குள் வண்டுக் குடைச்சல்.

"என்னம்மா... டீ கெடைக்குமா?"

பாச மகனின் கெஞ்சல், பரிவும், குழைவுமான பூங்குரலின் வருடல்.

"பாராட்டு மாலை போட்ட மவனுக்கு, கூட ஒரு கிளாஸ் தரக் கூடாதா? குடும்மா..." 'இந்த ஆளு' வேறு தாராளமாக சிபாரிசு செய்கிறார்.

பூவம்மாவுக்குள் நெருக்கடி. சிரித்து சமாளிக்க முடியாது. எரிந்து விழுந்து அமுக்க முடியாது. மனசுக்குள் கழுத்தாம்பிடியான திணறல்.

மகனை நங்கூரமிடுகிற பூவம்மாவின் பார்வை. பாஷை பேச முயல்கிற பார்வை. பார்வையின் பாஷைக்கெல்லாம் அசருகிறவனா, அவன்?

"என்னம்மா... டீ குடுங்கம்மா..."

"என்ன... சட்டிக்குள்ளே டீ வெளைஞ்சுக்கிட்டே யிருக்குமா? எதுக்கும் ஓர் அளவு இல்லியா?"

"என்ன அளவு? கூடக் கொஞ்சம் போட வேண்டியது தானே?"

"ஜோசியமா பாத்தோம், கிளாஸ் கிளாஸா கேட்பீகன்னு...?"

"இப்ப... என்ன? இருந்தா குடுங்க, இல்லேன்னா... இல்லேன்னு சொல்லுங்களேன்? என்னத்துக்கு லாபாயிண்ட் விரிக்கீக?"

புண்பட்டுப் போன மகனின் மனத்தெறிப்பு. சிடுசிடுப்பு. அற்பத்தனத்தால் அவமதிக்கப்பட்ட மனச்சீறல்.

தலைவிக்கான சிரமம். பகிர்ந்தளிக்க வேண்டிய பொறுப்பு. அதை நிறைவேற்ற வேண்டிய கடமை உணர்ச்சி, ரத்த அணுக்களில்.

இதில்... தாய்மைத் தத்தளிப்பு வேறு. பாராட்டுப் பூமாலை போட்டுவிட்டு பிள்ளை மனசோடு மனசுக்குள் விழுந்து கெஞ்சுகிற இளவட்டப் பயல்.

'கிரீடமா... கேக்கான்? ஒரு டீத் தண்ணி, அதையும் குடுக்கலேன்னா... எப்படி...? மனசு கிடந்து மருகித் தவிக்குதே...'

மனசின் உளைச்சலை மறைத்துக்கொண்டு சிரித்து மழுப்புகிற பூவம்மா. "சரியப்பா... ரொம்பக் குதிக்காதே... கொண்டா கிளாஸை. இன்னொரு தம்ளரு வாங்கிக்க..."

"ம்... அதானே... புள்ளை கேட்டா... பெத்தவ குடுக்க வேண்டாம்?" 'இந்த ஆளு' தாளிப்பு வேறு. சும்மா... அமுக்குங்க வாயை...

பூவம்மா மகனைப் பார்த்தாள். பார்வையில் ஒரு மனச் சிரமத் தவிப்பு. வெளிப்படுத்த முடியாத ஊமைச் சிறகடிப்பு. 'எப்படிச் சமாளிக்க' என்ற மௌனத் திணறல்.

"பாப்பா... தம்பிக்கு ஒரு தம்ளர் டீ ஊத்தித் தா..."

தம்பியைக் கண்டனமாய்ப் பார்க்கிற அக்கா. "இன்னொரு கிளாஸ் என்று கேட்டு, பிரச்னையையும் மன உளைச்சலையும் உண்டுபண்ணிட்டானே... எதுக்கு ஒரு அளவு வேண்டாமா? நல்லாயிருந்தா... ஏழு கிளாஸா... குடிப்பாக? தங்க ஊசின்னா... கண்ணுலே குத்திக்கணுமா?"

இடுங்கிய கண்களால் வெறுப்பும், மிரட்டலுமான பார்வை.

"என்ன... முழிக்கே?"

கோபமாய்ச் சீறுகிற மகன்.

"தெரியலியா?"

"தெரியுது, தெரியுது... சாமியே வரம் குடுத்துருச்சு. பூசாரிக்கென்ன பொச பொசப்பு? போயேன்..."

சகோதரச் சண்டையின் சகஜ பாவத்தை ரசிக்க முடியவில்லை, பூவம்மாவினால். இனம் புரியாத தர்ம சங்கடம். இருட்டான மருட்டல், மனசுக்குள். உள்ளுக்குள் ஒரு பூவம்மா... திசையறியாமல் புலம்பித் தவித்தாள்.

வருகிற பற்றாக்குறையை என்னன்னு சமாளிக்க? கேட்டு வர்ற எந்தப் புள்ளைக்கு, இல்லேன்னு சொல்ல? எப்படிச் சொல்ல? சொல்ற தைரியம் வருமா, மனசுக்கு?

ஏமாற்றத்தில் முகம் சாம்புகிற 'அந்தப் புள்ளையின்' கண்ணின் பார்வையைத் தாள முடியுமா? தாங்கும் சக்தி தாய்மைக்கு இருக்குமா? மனசுக்குள் தவித்தாள். மருகி மருகி உளைந்தாள். வெட்டுப்பட்ட பல்லி வாலாக துடிக்கிற மனசின் வேதனை கசிகிற பூவம்மா கண்கள்.

கண்ணிலேயே மனசின் ஆழத்தை வாசித்துவிடுகிற தாம்பத்ய அண்மையில் அவர், பூவம்மாவின் மனஉளைச்சலை சிரிப்பின் இணக்கத்தில் வருடுகிறார்.

"என்னத்துக்கு மருகுறே?"

ஆறுதலைச் சொல்கிற குரலின் பரிவு. கேள்வியோடு நிமிர்கிற பூவம்மா.

"இன்னும் ரெண்டு கிளாஸுக்கு கொதிக்க வைச்சிர வேண்டியதுதானே?"

"மாறி மாறிக் கொதிக்க வைச்சா... எப்படி வேலையாகும்? சோறு கொழம்பு பாக்கணும்லே? துணிமணி தொவைக் கணும்லே? பாடு, சோலி கொஞ்சமா கெடக்கு?"

*"சரி... சரி... சீறிப் பேசி ஆகப்போறதென்ன? ஆகுற வேலையைப் பாரு..."*

*துண்டைத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டு வெளியில் புறப்பட்டுவிட்டார். அது ஒரு தீர்வு, வார்த்தைக்கு வார்த்தையாக உரசிக்கொண்டேயிருந்தால், சூடேறிக்கொண்டு போகும். கத்தரிப்புக்கு இது ஒரு வழி.*

*தெருவில் இறங்கிப் போகிற புருஷனின் முதுகையே வெறித்தாள். மனசுக்குள் கொதிபானைச் சோற்றின் தள தளப்பு. கொந்தளிக்கிற உணர்வின் தகிப்பு.*

*டீயைக் குடித்து முடித்துவிட்டு... மிகுந்த மனநிறைவுடன் தம்ளரைக் கீழே வைத்த மகனின் பார்வை, 'என்னாலே தான் பிரச்னையா?' என்று விசாரிப்பதைப் போன்ற பார்வை. நெற்றியின் குறுக்காக விழுகிற கேள்விச் சுருக்கங்கள்.*

*அந்தப் பார்வையின் பாசத் தழுவலில் சட்டென்று அணைந்த மனத்தகிப்பு. ருசியை ரசிக்கிற நாக்கின் 'ட்டாவ்' சத்தத்தில் நிறைகிற தாய் மனசு. பெருமூச்சில் சகல சிரமங்களையும் கரைத்துவிட்டு... மகனுக்குச் சமாதானமாய் ஒரு சிரிப்பூவை உதிர்த்துவிட்டு... அடுப்பங்கரை வெக்கைக்குள் நுழைந்தாள், பூவம்மா.*

*மீண்டும் யந்திரமாக முனைந்தாள். ஆயினும்—*

*முடியவில்லை. இண்டமுள் குத்திக்கொண்ட மாதிரியொரு நச்சரிப்பு, மனசுக்குள். இனம் புரியாத இச்சிலாத்தி. தொல்லை. இன்னும் தீராத பிரச்னை ஏதோ ஒன்று மலையாக மறித்துக்கொண்டு நிற்கிற மாதிரியோர் பிரமை. மயக்க இருட்டு...*

*இனி வரப்போகும் பிள்ளைகள் மட்டும்தானா, பிரச்னை? அதையும் தாண்டி இன்னும் ஏதோ ஒரு பிரச்னை...*

பிள்ளைகளெல்லாம் வந்துவிட்டுப் போய்விட்டன. ஆனாலும்...?

கொதித்து நுரை கக்கும் சோற்றுச் சட்டியின் மூடியைத் திறந்தாள். கையில் வந்து அப்பிய புகைவெக்கை.

கத்தரிக்காய், தக்காளி, மிளகாய் எல்லாம் எடுத்துத் தரையில் வைத்துவிட்டு, அரிவாள்மணையோடு உட்கார்ந்தாள்.

மடித்துப் போட்ட இடதுகால் அரிவாள்மணையை அமுக்கிக் கொள்ள, கத்தரிக்காயை நேரும்கூறுமாய் அறுத்தாள். சின்ன வெங்காயங்களை தோலை உரித்து, நறுக்கினாள்.

ஜாக்கட்டெல்லாம் தொப், தொப்பென்று நனைந்தது. வியர்த்து கொட்டுகிறது. முகமெல்லாம் வியர்வை நசநசப்பு. நாசி நுனியிலும் நீர்த்துளி.

மனசுக்குள் அப்பிக்கொண்ட இண்ட முள். பிடுங்கப் பிடுங்க ஒட்டி நச்சரிக்கிற பூமுள். நறுக் நறுக்கென்று சுரீரிடுகிற முள்.

"எம்... மா..."

கம்மிப் போய், மங்கலாகிவிட்ட வயசாளிக் குரல். உலர்ந்த உதடுகள். காய்ந்த நெஞ்சுக்குழி. கிணற்றின் ஆழத்திலிருந்து கேட்கிற குரல் போன்று, சுரத்தில்லாத குரல். உயிரற்ற குரல்.

அய்யாதான். இண்டமுள். வந்துட்டாரா...?

கழுத்தை எட்டிப் பார்த்தாள்.

அய்யாவேதான். அழுக்குவேட்டி. இதற்குமேல் அழுக்கு ஒட்ட இடமில்லை. தொடை தெரிய உயர்த்தி மடித்துக் கட்டியிருந்தார். பூவம்மாவைப் போலவே கறுப்பு. முதுமையின் சுருக்கங்களில் கருமின்னல். தளர்வு, வாசல்படியில் நின்றார். எண்பதுக்கு மேல் வயசு.

"பூவம்மா..."

"என்னய்யா...?"

"கொஞ்சம் தண்ணி குடு..."

இதுதான் வழக்கம். தண்ணீர் கொடுத்த பூவம்மா, "உக்காருங்க அய்யா" என்பாள்.

"எதுக்கு...? நா...ம் போறேன்" என்பார்.

"அய்யா... இந்தாங்க... காப்பி. குடிச்சிட்டுப் போங்க..."

"ம்... உங்க வீட்டுக் காப்பிதான் ருசியாயிருக்கும்." குடித்து முடித்துவிட்டு, அரவமில்லாமல் போய்விடுவார்.

இப்படித்தான் தினசரி நடக்கும். காப்பி கேட்கமாட்டார். ஆனால், குடித்துவிட்டுத்தான் போவார்.

"என்னய்யா...?"

பூவம்மா விசாரிப்பின் சத்தம் சற்றுக் கூடுதல், இடறல். சற்றே வெப்பம். பூவம்மா தீயம்மாவாளா? அவளாலும் எரிந்து பேச முடியுமா?

"தண்ணி தவிக்கு... சும்மாதா... ஒரு டம்ளர் பச்சைத் தண்ணி கொண்டா."

அய்யாவின் குரல் இன்னும் பம்முகிறது. பயந்து பின் வாங்குகிறது. தன்மான மனிதர். சூடு குறையாத இரத்தம். ரோஷமான வம்சம்.

"இந்தாங்கய்யா..."

பச்சைத் தண்ணீர். குடிக்கிறார். வாய் விளிம்புகளில் வழிகிற நீர்க்கோடு. நெஞ்சில் நீர்க்கோடு இறங்க முடியாமல் தோல் சுருக்கங்கள்.

பூவம்மாவுக்குள் சப்பென்று அறைகிற இண்ட முள். மனசெல்லாம் காந்தலெடுக்கிறது. வெறும் காப்பிச்சட்டி.

காப்பி கொடுத்து பழக்கப்பட்ட மகள் மனசு. "இந்தாங்கய்யா" என்று பாசமும் மரியாதையும் காட்டியே பழகியவள். பெற்ற அய்யா இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி, உடம்பை கடம்பாக்கி வளர்த்த அய்யா.

கல்யாணம், காட்சி என்று கரை சேர்த்த அய்யா.

அவரிடம் பொய்யாகப் பேசவா? அய்யாவிடமே மாய்மாலம் செய்யவா? மனசு தடுமாறித் தத்தளிக்க, உதடு கேட்டுவிட்டது. "ய்யா... காப்பி குடிக்கீகளா...ய்யா?"

கேள்வியின் பொய்மை, அவளுக்குள் ஆணியாகக் குத்தியது.

ரோஷமான வம்சர். இரத்தச் சூடு தணியாத தன்மானம்.

'இந்தாங்கய்யா, குடிச்சிட்டுப் போங்க' என்று சொல்லி வந்த மகள், 'குடிக்கீகளா' என்று கேட்கிறாளே...? குரல் பேதம்... ருசி பேதமாய் மனப்பொய்.

கேள்வியின் வெறுமை—வெம்மை, அவருள் சுட்டது. நிமிர்ந்து மகளைப் பார்த்தார். 'என் இரத்தமா, இப்படிப் பேசுவது?' அவர் கண்ணின் கோபாக்னி.

வலது உள்ளங்கையை உயர்த்தி, தளர்வோடு அசைத்தார், 'வேண்டா'மென்று.

"என்னய்யா...?"

"ஓங்... காப்பியும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம்."

வெறுப்பு உரை போட்ட கோப மறுப்பு. ரெண்டாவது படிக்கு இறங்கிவிட்ட அய்யா, அவரது கரும்பாதம்.

வாசலைக் கடந்து போகிற இன்னொரு முதியவர். சங்கையாச் சின்னையா. இவரைப் பார்த்ததும், சற்றே நிற்கிறார். இவரைப் பார்த்து சிரிக்கிறார், சங்கையாச் சின்னையா.

"என்னண்ணே... மகா வீட்லே?"

"சும்மாதான் நிக்கேன்... நீ எங்க தூரமா?"

"எங்க போக? போக்கிடமில்லாம அலையுதேன். நிக்க நெழலில்லே."

"ஒனக்கென்ன? யோகக்காரன். மூணு ஆம்பளைகளைப் பெத்தவன்."

"அதான்... என்னோட கெட்ட காலம். மூணு பயகளும் வீடு காட்டை, ஆடு மாட்டை புடுங்கிக்கிட்டு... அப்பனை தெருவிலே வுட்டுட்டாக..."

"அப்...பு...டியா?"

"ஓம் பாடு தேவலைண்ணே... மூணு பொண்ணுகளைப் பெத்து, மூணையும் உள்ளூர்லேயே குடுத்துட்டே. மூணு பேரு வாசல்லேயும் போய் நின்னுக்கலாம். வாய்க்கு ருசியா குடுப்பாக. வாங்கிச் சாப்புட்டுக்கலாம். தவிச்ச வாய்க்கு தண்ணி கெடைக்கும். சில சமயத்துலே முட்டை பொறிச்சு, சோறும் போடுவாக... பொண்ணுகளைப் பெத்தவன், பொன் கெடைச்சவன் மாதிரியில்லே?"

"அப்படியா சொல்லுதே... சங்கையா?"

"நா...ஞ் சொல்றது நெசந்தானே...?"

"ம்...ம்... நெசந்...தான்."

அய்யா நடிக்கிறார். பெருமிதப் புன்னகை பொக்கை வாயில் மின்னுகிறது. உள்ளுக்குள் கவிந்திருக்கிற ஏமாற்ற இருட்டை வெளிக்காட்டாமல், முக வெளிச்சம் காட்டுகிற அய்யா.

தன்மான அய்யா. தன் மகள் மானத்தையும் மண்ணில் போட்டு உடைக்காமல், கெத்தாகக் காப்பாற்றுகிற வைராக்ய அய்யா. பூவம்மாவுக்குள் தகிக்கிற குற்ற உணர்வுத் தீ.

சங்கையா நகரவும், அய்யா மூன்றாவது படிக்கு இறங்கினார்.

பூவம்மாவுக்குள் என்னவோ உடைந்து சரிகிற உணர்வு. கதறியழ வேண்டும் போலிருந்த மன அழுக்கு. அற்ப மனச் சுமை. வந்த அழுகையை அடக்கிக் கொண்டாள். ஆனாலும் குரலின் குழைவில், மனசின் கதறல்.

"அய்யா..."

"என்ன பூவம்மா?"

"உள்ள வந்து உக்காருங்கய்யா..."

"என்னம்மா...?"

"சித்த இருங்கய்யா. ரெண்டு கிளாஸ் கொதிக்க வைச்சிருதேன்."

"வேண்டாம்மா... நீ சோலியைப் பாரம்மா."

"குடிக்காம நீங்க போகக்கூடாதுய்யா..."

அவள் குரலின் தொனி. தொனிக்குள் விம்முகிற மகளின் மன உணர்வு. அவளது பாச வைராக்யத்தின் கடினத்தொனி.

அவரது ஆத்மாவுக்குள் கொக்கியைப் போட்டு; இழுத்து, நிறுத்திக்கொள்கிற ஆத்ம தொனி.

அவர் படியேற...

அவள் சட்டியைக் கழுவி, அடுப்பில் வைத்தாள், பாசப் பரபரப்பாய்.

—அமரர் கல்கி நூற்றாண்டு விழா மலர்

❁

# பிணமும், பிண மனசுகளும்...

அருங்கோடை. போன வருஷம் கார்த்திகை மாசம் பெய்த மழைக்குப் பிறகு ஒரு துளிகூட கண்ணில் தட்டவில்லை. மழை என்கிற வாடையேயில்லை. ஆனி மாசம். தீ மழையாகக் காய்கிற கோடை வெயில்.

ஆளோடு ஆளாய் களை வெட்டிக்கொண்டு பவுன்தாய் முன்னேறுகிறாள். பருத்திச் செடிகளுக்குள் களை வெட்டு. செடி மேல் வெட்டு விழாமல், செடிகளுக்குள் களை சுரண்டியைப் போட்டு மண்ணைக் கொத்தியிழுக்க வேண்டும். புல்லும் கோரையும், கீரைக் கொழையும் வேரறுந்து வெட்டுப் புழுதிக்குள் விழ வேண்டும்.

பவுன் தாய்க்கு இடுப்பெல்லாம் காந்தல். குனிந்த தலை நிமிராமல் களைவெட்டு. புஜமிரண்டிலும் உளைச்சல். 'கடு கடு'வென்று குடைகிற வலி. எலும்பே உருவிக்கொண்ட மாதிரி வேதனையும், அயற்சியும். முகம், கழுத்தடியெல்லாம் வேர்வைக் காடு.

பவுன்தாய் நிமிர்ந்து பொழுதைப் பார்க்கிறாள். மணி ரெண்டுக்கு மேலிருக்கும். உச்சியிலிருந்து சரியத் தொடங்கி விட்ட பொழுது. கண்ணைக் கூச வைக்கிற பிரகாசத் தகிப்பு.

‘எப்படா வேலை விடுவார்கள்’ என்று மனசு கிடந்து துவளுகிறது. அல்லாடித் தவிக்கிறது. ஆளைப் பாடாய்ப் படுத்துகிறது.

“என்னடி... விடிய விடிய களை வெட்டவா?”

பவுன்தாய்தான் பூனைக்கு மணியைக் கட்டினாள். புஞ்சைக்காரி பொழியோரம் நிறைபிடித்து வெட்டிக் கொண்டிருந்தாள். வெடுக்கென்று எகிறினாள்.

“ரெண்டு மணி பஸ்ஸு வரணும்லே?”

“பொழுதுக்கால் மாதிரியா, பஸ்ஸு—டயப்படி கரெக்டா வர்றதுக்கு? அது வந்தாலும் வந்துச்சு... வராமப் போனாலும் போச்சு. அதைக் கணக்குப் பண்ண முடியுமா?”

மற்ற கூலிக்காரிகளும், “அதானே... அதானே” என்று பவுன்தாயை ஆமோதித்தனர். எல்லார் குரல்களிலும் வேர்வைப் பிசுக்கு. காய்ந்த உதட்டுப் பிசினில் வழிந்த வேர்வையின் உப்புக் கரிப்பு. உடல் களைப்பு.

வேலை முடிந்து வீடு கிளம்ப மணி மூன்றாகிவிட்டது. பொழுது முகம் நிறம் மாறிவிட்டது. வெள்ளிப் பிரகாசிப்பில் தங்க நிற ரேகை. வெயிலில் மிதக்கிற கானல் அலைவரிகள்.

நடையை எட்டிப் போட்டாள். ஆனி மாசக் காற்று. முகத்து வேர்வையில் அனலாய் வந்து அப்புகிற கோடைக்காற்று.

முகமெல்லாம் உலர்ந்த வேர்வையின் உப்பு வரிகள். கழுத்தடியிலும் வெள்ளைக் கோடுகள். குடங்கையில் ஏந்திய முள் விறகும், வலது கையில் தூக்குச் சட்டியும், சுரண்டியுமாக ‘தக் தக்’கென்று நடக்கிற பவுன்தாய்.

இவளுக்குள் வீடு. குப்பையும் கூளமுமாய் கிடக்கும். கோழிக் குஞ்சுகள் மலம் கழித்திருக்கும். பெருக்கணும். சட்டி

பானை கழுவணும். கடை கண்ணிக்குப் போகணும். தண்ணீரெடுக்கணும். உலை மூட்டணும்.

பள்ளிக்கூடம் போயிருக்கிற பயல் வருவதற்குள் காப்பி போடணும். சோறாக்கணும். குழம்பு வைக்கணும். காட்டில் அலைந்து பாடுபட்டு வருகிற புருஷனைக் கவனிக்கணும்.

ஏகப்பட்ட 'ணும்'கள். எல்லையில்லாமல் காலமாய் நீள்கிற 'ணும்'கள். இடுப்பொடிய களை வெட்டிவிட்டுப் போகிறவளை உஸ்ஸென்று உட்கார்ந்து மூச்சு வாங்கவிடாமல், நச்சரித்து நாசப்படுத்துகிற 'ணும்'கள்.

விறகை வீட்டுத் திண்ணையில் போட்டாள். மகன் வந்திருக்கிறானா, வருகிறானா என்றொரு பருந்துப் பார்வை. பாசப் பார்வை. மனத்தேடல்.

மதியம் சத்துணவு சாப்பிட்ட வட்டிலை, பயல் வெளிப்பானைப் பக்கத்தில் போட்டுவிட்டுப் போயிருக்கிறான். மஞ்சளாகக் காய்ந்து கிடக்கிறது.

வெளிப்பானைப் பக்கத்தில் போய் குனிந்தாள். தண்ணீர் சுட்டது. உள்ளே குளிர்ந்தது. தண்ணீரை அள்ளி முகத்திலும், கழுத்தடியிலும், கட்கத்திலும் அடித்தாள். வேர்வை உப்பின் சொரசொரப்பைக் கழுவினாள். ஈரக்கையால் சுடுகிற தலைமுடியையும் தடவிக் கொண்டாள்.

வெதுவெதுப்பான தண்ணீர் உடம்புக்கு இதமாக இருந்தது. மனசு அதை உணர்ந்து ரசித்தது. முந்திச் சேலையை ஒரு உதறு உதறிவிட்டு... ஈர முகத்தையும் கழுத்தையும் அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

அப்போது—

'வெக் வெக்'கென்று வேக வேகமாக நடந்துவந்த மேலத் தெருக்காரி. நடையில் ஒரு பரபரப்பு. வேகம். தொற்ற வைக்கிற பதற்றம்.

முந்திச் சேலையை ஒழுங்காகப் போட்டுக்கொண்ட பவுன்தாய் அவளைக் கவனித்தாள். பார்வைகளின் உரசலில் நின்ற மேலத் தெருக்காரி.

"என்ன பவுனு... நீ வரல்லியா?"

"எங்க?"

"என்ன இப்படிக் கேட்டுட்டே? அப்ப... ஒனக்குத் தாக்கலே தெரியாதா?"

"என்ன தாக்கலு?"

"எல்லாரும் மூன்றரை வண்டிக்கு ராசபாளையம் போறாக...!"

"என்னத்துக்கு?"

"நம்ம பூவம்மாவோட சித்தி செத்துப் போய்ட்டாளாம். நாள்பட்ட சீவன். கட்டில்லயே கெடந்து மாசக் கணக்குலே சீரழிஞ்ச கட்டை. இன்னிக்குத்தான் உசுரு போச்சாம்..."

"ஐயோ பாதரவே... அந்தச் சின்னம்மையா போய்ட்டாக? தாயில்லாப் புள்ளையா தவிச்சு நின்ன பூவம்மாவை வளர்த்து ஆளாக்கி... தாய்க்குத் தாயாயிருந்து—நகை, நட்டு போட்டுக் கட்டியும் குடுத்தாளே... அந்தச் சின்னம்மையா போய்ட்டாக?"

"ஆமா... நீ வாரீயா?"

"வந்துதானேயாகணும்? காட்டுலே உசுரைக் குடுத்துட்டு இப்பத்தான் வந்து, வீட்லே காலை வைச்சிருக்கேன். தீ மாதிரி ஒரு தாக்கலைச் சொல்லுதே நீ! எதைத் தள்ளுனாலும், எழவைத் தள்ள முடியுமா? எழவைத் தள்ளிட்டா எல்லாமே தள்ளிப் போயிரும்லே? வரத்தானே செய்யணும்?"

பவுன்தாயின் கனிந்து குழைந்த குரலும்... நெகிழ்ந்து கரைந்த மனசின் தழுதழுப்பும்... மேலத் தெருக்காரியை என்னவோ செய்துவிட்டது.

பட்டும் படாமல்... துக்கமில்லாமல்... உலர்ந்த மனசோடு சற்றே எரிச்சல் தொனிக்கத் தான் பேசியதாக உணர்ந்தாள். மேலத் தெருக்காரி மனசின் ஆழத்தில் ஓர் உறுத்தல். குற்ற உணர்வின் நெருடல்.

"இப்பவே பெறப்புட்டுட்டீகளா? எப்பத் திரும்பறது?"

பவுனின் கேள்வியில் இன்னும் அந்தத் துக்க உணர்வு, நெகிழ்ந்த மனசின் ஈரம்.

"ராத்திரி ஒம்பதரை வண்டிக்குத் திரும்பிறணும்..."

"திரும்பிற முடியுமா?"

"எப்படியும் திரும்பித் தானேயாகணும்? இங்கேயும் பாடு சோலி பாக்கணும்லே?"

"ஆமா... மா..."

"போய்... பூவம்மா மொகத்தைப் பாத்துட்டு... நாலு வார்த்தை ஆறுதலா சொல்லிட்டு... சட்டுப் புட்டுன்னு கௌம்புனாத்தான்... திரும்ப முடியும்..."

"சரி... நா... சீலையை மாத்திக்கிட்டு ஓடியாரேன்... பாவம் அந்தச் சின்னம்மை... புண்ணியம் செய்ஞ்ச நல்ல மனுஷி. நல்ல வாழ்க்கையையும் அனுபவிக்கலை. நல்ல சாவும் கெடைக்கலை... ம்ஹூம்... என்ன இருக்கு மனுஷ இருப்புலே?"

வீட்டைத் திறந்தாள். வீடு, வீடாக இல்லை. போட்டது போட்டபடி. எல்லாம் ஒரே அலங்கோலம். 'மகன் வருவானே... அவனுக்குக் காப்பி வேண்டுமே... அந்த ஆளுக்குக் காப்பி இல்லேன்னா தலை வெடிச்சிருமே...'

இதையெல்லாம் நினைத்து மருகினால் காரியம் ஆகாது. நல்லது பொல்லதுக்கு நாமும் போய் நிற்காமல் ஒதுங்கிவிட்டால், நாளைக்கு நம் வீட்டுக்கு யார் வருவார்கள்?

நாலு மனுச மக்கள் சகவாசம் இல்லாமல் மண்ணில் வாழ்ந்துதான், என்ன ஆகப் போகிறது?

உடுத்தியிருந்த சேலையை உருவி, மூலையில் எறிந்தாள். போன வருஷம் பங்குனிப் பொங்கலுக்கு எடுத்த சேலையை உடுத்திக்கொண்டாள். அதோடு சேர்ந்த ஜாக்கெட்டையும் மாற்றிக் கொண்டாள்.

எல்லாம்... நிமிஷத்தில்.

பக்கத்து வீட்டுக் கிழவியிடம் மகனும், புருஷனும் வந்தால் என்ன சொல்ல வேண்டும் என்பதைச் சொல்லிவிட்டு... ஒரு தவிப்போடு இறங்கினாள் பவுன்தாய்.

தெருவில் ஓட்டமாய் நடந்தாள். பஸ் வந்த சத்தம் கேட்ட மாதிரியோர் பிரமை. நடையை எட்டிப் போட்டாள்.

புழுதியைக் கிளப்பிவிட்டுக் கொண்டுவந்து, வட்ட மடித்துத் திரும்பிய வெள்ளை பஸ். இறங்கிய ஆட்கள்.

ஏறுகிற பெண்கள். கிராமத்துப் பெண்கள். அடிக்கடி பஸ் ஏறுகிற பழக்கமில்லாத பவுன்தாய் போன்ற பட்டிக்காட்டுப் பெண்கள்.

"என்ன என்ன...? எங்க... தூரமா? என்ன விஷயம்?" என்று எல்லோரையும் கேட்க வைக்க...

பூவம்மா சித்தி இறந்த செய்தி, வாய்க்கு வாயாக ரெக்கையடித்துப் பரவ...

"ஐயயோ... பூவம்மாவோட சித்தியா? அவுகளா செத்துட்டாக? அடடா...! தங்கமான உசுராச்சே...! நானும் வாரேன்..." என்று பஸ்ஸில் வந்து இறங்கியவர்களில் ஒரு சிலர், மறுபடியும் பஸ்ஸில் ஏறிக்கொள்ள... பஸ் நிறைய ஜனம். பேச்சும் சிரிப்புமாய் ஜனம். இறந்த கிழவியைப் பற்றிய நினைவுகள், பஸ் முழுவதும் உச்சரிக்கப்பட்டது.

பஸ் புறப்பட்டது. பவுன்தாய் டிக்கெட் எடுத்துக் கொண்டாள்... முன் வாசலோரம் இவளுக்குக் கிடைத்த சீட்.

பஸ்ஸின் தகரங்கள் பூராவும் ஜனங்களை மிஞ்சிப் பேசியது. மொத்த பஸ்ஸே தனித்தனித் துண்டங்களாகப் பிரிந்து ஆடிக் குலுங்குவதைப்போல அப்படியோர் நாராசச் சத்தம். பேரீச்சம்பழத்துக்காரர்கூட வாங்க மறுத்துவிடுவார். அம்புட்டு ஓட்டை உடைசல்!

பவுன்தாயைச் சுற்றிலும் பெண்கள் பூவம்மாவின் சித்தியைப் பற்றி கிண்டலும் எகத்தாளமுமாகப் பேசினர். ஈர மில்லாத பேச்சு, தகரக் கிழிசலின் தடதடப்பு மாதிரி உலர்ந்த பேச்சு.

"கெழடி செத்ததெல்லாம் சரிதான். பாடு சோலி இல்லாத நாளாப் பாத்து மண்டையைப் போட்டுருக்கணும்..."

"நாறிக் கிடந்த கெழடி, நேரங்காலம் தெரியாம மண்டையப் போட... பாடு சோலிகளைக் கட்டிக்கிட்டு மாரடிக்கிற நம்ம பொழைப்புதான் நாறிப் போகுது..."

"பொசுக்குன்னு இழவுன்னா... பொறப்புட முடியுதா? காலைச் சுத்திப் பின்னுற சோலிக நூறு. எதை அத்துகிட்டு ஓடியாற முடியுது?"

"அடுப்பு வேலையை விடவா? புள்ளையை விடவா? புருஷனை விடவா? ஆடு குட்டிகளைக் காயப் போடவா?"

"பாடுசோலியை வுட்டு வெலகுன கெழடி போய்ச் சேர்றது ஞாயம்தான். அந்த எழவு, நமக்கு ஒரு பாரமாயிருது..."

"ஆமா... செத்த உசுரை நெனைச்சுத் துக்கப்படுறதுக்குப் பதிலா... அன்றாடச் சோலியை அத்துக்கிட்டுப் போற நம்ம கஷ்டத்தை நெனைச்சுத்தான் நாம துக்கப்பட முடியுது..."

எல்லாம் பவுன்தாய் காதில் விழுகிறது. மனசுக்குள்ளும் இறங்குகிறது. இவளது உள் மனசாகவே அந்தப் பேச்சு நிகழ்வதாக—நீள்வதாகத் தோன்றுகிறது.

அவளுக்குள்ளும் அதே சிரமங்கள். கஷ்டங்கள். வார்த்தைப்படுத்துகிற மன தைர்யமில்லாமல், பல்லைக் கடித்துக்கொண்டு சகித்துக்கொள்கிற பவுன்தாய்.

தைர்யமாய் வார்த்தையாக்குகிற மற்ற பெண்கள். துடிப்பாக மனசை விட்டெறிகிற துணிச்சலான கிராமத்துப் பெண்கள். பாசாங்கு பண்ணத் தெரியாத—படுதா போடாத—மனசின் உள்முகங்களாக வார்த்தைகள்.

இன்னும் பேச்சு நீள்கிறது. பூமிக்குப் பாரமாய்க் கிடக்கக்கூடாது. பிறப்பின் கடமை முடிந்த பின்பும், பிறருக்குச் சுமையான முதுமையில் கிடந்து சீரழியக்கூடாது என்றெல்லாம் நீள்கிற குரல்கள்.

“வந்த சோலி முடிஞ்சாச்சா... வண்டியைக் கௌப் பிறணும். காலாகாலத்துல போய்ச் சேரலேன்னா... மத்தவுக கால்லே போட்ட சங்கிலியாயிரும். ‘ச் சீய்ய்... த்தோய்ய்’ன்னு நாறப் பேச்சா நாலு பேச்சு கேட்ட பெறகா சாகணும்?”

ஆலங்குளம் தாண்டி கீழராஜகுலராமனை நோக்கி நகர்கிற பஸ். அட்டை மில்லைச் சுற்றி மாயாஜால வித்தை மாதிரி எழுந்திருக்கிற நகரம். புதுப்புதுக் கட்டடங்கள். வரிசைக் கடைகள்.

“வெறும் செவக்காட்டுப் பொட்டலா கெடந்த எடம்... அடையாளம் தெரியாம மாறிருச்சே...!”

என்று வியப்பு தாளாமல் முணுமுணுக்கிற பவுன்தாயின் பிரமிப்பு.

*பஞ்சு மில்கள் செய்த மாயத்தில், மாய்ந்து போகிற பவுன்தாய்.*

*சங்கம்பட்டியில் நிற்காமல், சத்திரப்பட்டி நோக்கிப் பாய்கிற பஸ்.*

*அவளுக்குள் பாய்ச்சல் எடுக்கிற நினைவுகள். தாய் மனசின் பாச விரைவு.*

*பைக்கட்டோடு வந்திருப்பான். சாத்திக் கிடக்கிற வீடு.*

*"அம்மா எங்க போய்ட்டா...?"*

*பக்கத்து வீட்டுக் கிழவி சொல்வாள்—அம்மா போன காரியத்தை.*

*அம்மாவிடம் பேச நினைத்த பேச்சுகள். காப்பி கேட்டுச் செய்ய நினைத்த செல்லக் கலகம். எல்லாம் பறிபோன ஏமாற்றம்.*

*"ச்சேய்... இந்த அம்மாவே ரொம்ப மோசம். யாரு எங்க செத்தா இவளுக்கென்ன? இவா போய்... எங்க உசுரை வாங்கணுமா?"*

*என்று சீறிக் குமுறுவான்...*

*குமுறிக் குமைந்து எரிச்சல்படுகிற மகனின் சிடுசிடுப்பான முகம் மனசுக்குள் நிற்கிறது.*

*பசியும் தாகமுமாய் காட்டிலிருந்து வருகிற புருஷன்—தகவல் அறிந்து, ஏமாற்றமாய் வாடி நிற்கிற உழைப்பாளி.*

*நினைக்க நினைக்க மனசு கிடந்து தவிக்கிறது. பஸ் பயணமே பாரமாய்ப் போட்டு அழுத்துகிறது. 'இப்படி ஒரு தாக்கல் வந்து சேர்ந்துச்சே' என்று ஆயாசப்படுகிற மனசு.*

*இவளது மன ஆயாசத்தை அதிகப்படுத்துகிற மாதிரியாகச் சுற்றி நிகழ்கிற பேச்சுகள்.*

சாவுகளைப் பற்றிய பேச்சு. சடங்காகிப் போகிற கிழவியின் பாரம். வாழ்வை அது நசுக்கியழுத்துகிற கோரம்... பாடுசோலிகளைப் போட்டுவிட்டு வருகிற சிரமம்.

பவுன்தாய் உள்ளங்கைகளைப் பார்த்தாள். சுரண்டி பிடித்த கை. பகல் முழுவதும் களை சுரண்டியால் இறுகிக் கிடந்த நிலத்தை 'பர்ர்... பர்ர்'ரென்று இழுத்த இழுப்புகள். கை முழுக்கக் காந்துகிறது. எல்லா எலும்பு மூட்டுகளிலும் கடுகடுவென்று உளைச்சல். குடைச்சலெடுக்கிற வலி. திரேகம் முழுக்க அலுப்பின் ரணாவஸ்தை!

பவுன்தாயின் நெஞ்சுக்குள்ளிருந்து பீறிட்டு வந்த பெருமூச்சு.

சமுசிகாபுரத்தை பஸ் தாண்டுகிறபோது, புழுதிப்புயல் எழுந்தது. செம்மண் புழுதிப் படலத்தால் நிரம்பிய வெளி. பயங்கரக் காற்று. மரங்கள் பேயாடின. செங்கற் சூளைப் புகையின் அடர்த்தியும், கமறலும் நாலா திசையிலும் அலைக்கழிக்கப்பட்டது.

பருவட்டான மழைத்துளிகள் 'சட்டச் சட... சட் டச்சட'வென்று விழுந்தன. ஆனி மாசத்தில் பெய்கிற கோடை மழை. பஸ்ஸுக்குள்ளிருந்து ஜனம் ஆவலும், மகிழ்ச்சியுமாக பரவசப்பட்டனர். காற்றும் மழையும் கூத்தாடியது.

"மழை பேயட்டும்.. காய்ஞ்சு கனல் பறந்து கெடக்குற மண்ணுலே ரெண்டு புல்லு மொளைக்கட்டும்."

"மானாவரியிலே கடலை வெதைக்கலாம்..."

"கட்டை குட்டையாய் முடங்கிக் கெடக்குற கம்மம் பயிருக, கோடை மழைக்குப் பெறகு நல்லா வளரும். கம்பு வெள்ளாமையும் ஒரு போடு போடும்."

பஸ்ஸுக்குள் மகிழ்ச்சியின் கூவல். வெள்ளைச் சட்டைக்காரர்கள் மழைத்துளிக்குப் பயந்து ஒதுங்குகின்றனர்.

நடுங்குகின்றனர். அவர்களை வெளிப்படையாகப் பரிகசிக்கிற கிராமத்தாட்கள்.

“பாவ வெயில்லே காலம் பூராவும் அலைவாக... மழைத் தர்மத்தை மட்டும் தாங்கமாட்டாக. மழையில்லாமத் தண்ணி கெடைக்குமா? சோறுதான் கெடைக்குமா?”

செம்மண்ணில் இரத்தமாய் தண்ணீர்ப் பெருக்கு. ஒரு பாட்டம். முரட்டு மழை. நீர்க்காடு. குழைந்த மண். சகதிக்காடு. பஸ் முழுக்க ஒழுகல். நீர் நசநசப்பு.

பவுன்தாய் தலையிலும் மடியிலும் சொட்டடிக்கிற நீர்த்துளிகள், ஈரத்துளிகள் சுகமாக இருந்தது.

மழை நின்றுவிட்டது. பஸ் ஸ்டாண்டில் பஸ் நின்றது. எல்லோரும் இறங்கினர். அங்கும் லேசாக மழை பெய்திருந்தது. மிருதுவான குளிர்ச்சியில் மண்.

மொதுமொதுவென்று கிராமத்துப் பெண்கள் இறங்கினர். ஒரு சில ஆண்களும். பவுன்தாயும் இறங்கினாள்.

நகரம். அதன் பரபரப்பு. மனித நெரிசல். பட்டும், பதவிசுமாக நகரப் பெண்கள். கழுத்து நகைகள்.

மூச்சுத் திணற வைக்கிற வினோதமாக இருந்தது பவுன்தாய்க்கு. மிட்டாய்க் கடையைப் பார்க்கிற பட்டிக் காட்டுக்காரியின் ஆச்சரியத் திணறல்.

நிஜமாகவே லாலாக்கடை அவர்களைத் திணறடித்தது. கடை முழுக்கக் கண்ணாடி. கண்ணாடிகளிலும், நிஜத்திலுமாக மாயம் காட்டின, வகை வகையான இனிப்புக் கட்டிகள்.

மிட்டாய்க் கடையின் கண்ணாடி மாயம் பற்றிய ‘கச... முசா...’ பேச்சுடன் அந்தக் கிராமத்து ஜனம், இழவு வீட்டை நோக்கிச் சிரிப்பும் கலகலப்புமாகப் போயிற்று.

ரெயில்வே தண்டவாளத்தைத் தாண்டிச் செல்லவேண்டும். சின்னஞ்சிறு தெரு. அதில் சின்னஞ்சிறிய வீடு. பக்கத்து வீட்டார்கள் யந்திர மயமாக, வழக்கமான பணிகளில் இயங்கினர்.

ஒரு வீட்டில் இழவு என்றால்... மொத்தக் கிராமமே வேலைகளை நிறுத்திவிட்டு இழவு வீட்டில் நிற்கிற கிராமத்துப் பண்பாட்டில் ஊறித் திளைத்த பவுன்தாய்க்கு... பாடு சோலிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிற நகர மனிதர்கள் வேற்றுக் கிரக மனிதர்களாகத் தோன்றினர். உலர்ந்த மனசுகள். வாழ்ந்த உயிரின் சாவைக் கண்டுகொள்ளாத யந்திர மனசுகள் யந்திர வாழ்க்கை நகரம்.

'அவுக அவுகளுக்கு வந்த துன்பம், அவுக அவுக ளோடன்னு எல்லாரும் ஒதுங்கி நின்னா... என்ன மனுச ஜென்மம்? ஈகை, இரக்கம் இல்லாம என்ன மனுஷத்தன்மை? காக்கைகளுக்கு இருக்குற ஈகைகூட, மனுசருக்கு வேண்டாமா?'

பவுன்தாயிக்குள் வெறுப்பின் சுழிப்பு. கூடவந்த எல்லாப் பெண்களும் வெளியே நின்றுகொள்ள... ஆண்கள் டீக்கடைகளில் தேங்கி நிற்க...

பொந்து மாதிரியான வீட்டின் இருட்டுக்குள் ஒன்றிரண்டு பெண்களோடு சேர்ந்து பவுன்தாயும் நுழைந்தாள். மர நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டிருந்த சின்னம்மை. நாடிக்கட்டு, வாய்ச் சிவப்பு, சுருக்கம் நிறைந்த நெற்றியில் ஒற்றை ரூபாய். பெட்டித் தான்யத்தில் சொருகப்பட்ட பத்தியின் வாசம். குத்து விளக்கின் சுடர்கள்.

பூவம்மா தலைவிரி கோலமாக உட்கார்ந்திருக்கிறாள். தள்ளி அவளது அண்ணன், மதினி, ஒன்றிரண்டு உறவுக் காரர்கள்.

பூவம்மா பக்கத்தில் போய் உட்கார்ந்த பவுன்தாய்.

மலடி என்பதால் வாழாவெட்டியான சின்னம்மா, செத்துப்போன அக்காவின் பிள்ளைகளை எடுத்து, தாய்க்குத் தாயாக இருந்து வளர்த்து ஆளாக்கியவள். முழு வாழ்க்கையை அர்த்தப்படுத்தி வாழ்ந்து செத்திருப்பவள். வாழ்க்கையை வாழாமலேயே செத்திருப்பதாக எண்ண வைத்திருப்பவள்.

பூவம்மா மூக்கைச் சீறிவிட்டு, மறுபடியும் குரலெடுத்து ஒப்பாரி வைத்தாள். அழுதுஅழுது தொண்டை கட்டி, கம்மிப் போன குரல். பார்த்த மனசுகளை உலுக்குகிற சோக வாட்டத்தில் பூவம்மா.

“மலடியாயிருந்தும் மாதாவாயிருந்தீயே... யம்மா...!

வவுத்துலே சுமந்தவா

அவுத்துப் போட்டுட்டுப் போய்ட்டா...!

மனசுலே சுமந்தீயே...! எங்களை

உசுருலே சுமந்தீயே...!

மண்ணுலே வுடாம எங்களை

நெஞ்சுலே சுமந்தீயே...! யம்மா...

மண்ணாகிப் போயிராம.. எங்க

வாழ்க்கையைச் சுமந்தீயே...!

தாயிருந்து காணாத பாசத்தை...யம்மா...

நீயிருந்து காட்டுனீயே...!

தாயிருந்து செய்யாத செய்முறையெல்லாம்...

தாயாயிருந்து நீ செய்தீயே...!

*எந்தக் குறையும் வைக்காம..யம்மா...*

*எங்களை முழுசாக்கினீயே...!*

*முழுசாக்கி வைச்ச எங்க தெய்வமே... ஒன்னை*

*மூளியாத்தானே அனுப்பி வைக்கோம்... யம்மா...!"*

அவளது நீட்டியிழுத்த சோகக்குரலில் கொப்பளிக்கிற மன ரணம். வரிசையில்லாத ராக இழுப்பில் வரிசை தப்பாமல் வந்து விழுகிற உள்மனசு. கற்றைச் சோகம். நெஞ்சில் அறைகிற துயரம்.

அவள் சொல்லிச் சொல்லியழ... பவுன்தாய்க்குள் அந்தச் சின்னம்மா. நடவுக்குப் போகிற அவள். களை வெட்டப் போகிற அவள். பூவம்மாவுக்குச் சடை பின்னி, பேன் பார்க்கிற அவள். அவள் பிம்பங்கள்... வேறு வேறு நிழலுருவங்கள். பாசப்பிம்பம்...

பவுன்தாயுக்குள் ஆனி மாசக் காற்று. கோடை மழை. காய்ந்து உலர்ந்து கிடந்த மனசுக்குள், நீர்ப் பெருக்கெடுத்து மிருதுவாக்குகிற மனித உணர்வுத் துளிகள்.

கலங்கி உடைந்து நொறுங்கிய, ஈரக்குழைவான மனசின் முகமாக கண்ணோரத் துளிகள். விசும்பல். விம்மிக்கொண்டு வருகிற அழுகை...

களைவெட்டு... அலுப்பு... உடன் புறப்பாடு... பஸ் பயணத் தொல்லை எல்லாவற்றையும் கழுவித் துடைத்துக்கொண்டு போகிற மனித மன அழுகை. மனித நேயக் குழைவு.

நெகிழும் மனசைப் பிளந்துகொண்டு பீறிடுகிற அழுகை.

பஸ்ஸில் பேசிய பெண்களின் பேச்சு... இழவுக்குப் போக வேண்டிய இச்சிலாத்தி பற்றிய எரிச்சல்... செத்த கெழடியை ஏளனப்படுத்திப் பேசிய பேச்சுகள்... துக்கமற்ற நையாண்டிகள்.

*எல்லாவற்றையும் கேட்டும், மனசு ஒப்பியும் மௌன மாயிருந்த அந்நேர மனநிலை. உலர்ந்த மனநிலை. அருங் கோடையான மனநிலை. இழவைப் பாரமாக நினைத்துச் சலித்த மனநிலை.*

*அந்தக் கணத்தின் உணர்வுகளின் உலர்வுக்காக—*

*வெட்கப்பட்டு, தன்னைத்தானே திட்டிக் கொள்கிற பவுன்தாயின் இக்கணத்துப் பார்வை—*

*தன் போக்கில் இயங்கும் நகர மனிதர்களை வெறித்தது.*

—இதயம் பேசுகிறது 2, 9-1-2000

# இருட்டு

*யா*ருமே சொல்லுவார்கள். "சண்முகவேலு நல்லவன், உண்மையானவன்" என்று. யாரும் யாரைப் பற்றியும் நல்லபடியாக நாலு வார்த்தை அவ்வளவு இலேசில் சொல்லி விடமாட்டார்கள், கிராமத்தில்.

"அவனா...? மகா அழுத்தக்காரனாச்சே! வாயிலேயிருந்து ஒரு வார்த்தையைக்கூட பேத்துர (பெயர்த்துவிட) முடியாதே..."

"அந்தப்பய இருக்கானே! அவனை நம்பி ஒரு ரகசியத்தையும் சொல்லிர முடியாதே. ஓட்டை வாயப்பா. உளறித் தொலைச்சிருவான்."

"அவன் இருக்கானே... வெட்டுப்பட்ட வெரலுக்கு தொட்டுப் போட ஒரு பொட்டு சுண்ணாம்பு தரமாட்டான். கஞ்சப்பய."

"அடடே... அவனா? சரியான கேனப்பய. இளிச்ச வாய்த்தனமா இருக்குறதைக் குடுத்துட்டு... தேவைக்குக் கிடைக்காம தெருக்காட்ல தேடிக்கிட்டு திரிவான்."

"அந்தப் பயலா? உப்பைப் போட்டு திங்குறபய மாதிரி இருக்கமாட்டானே! செவிட்டிலே அறைஞ்சிட்டு, கையிலே

குடுத்தோம்னா... சிரிச்சிக்கிட்டே வாங்கித் திம்பானே... கூறுகெட்ட கூகை."

"அவனா? சரியான சிடுமூஞ்சியாச்சே... 'முணுக்'குன்னு ஒரு வார்த்தை சொன்னா... முன்னூறு பேச்சு பேசுவானே! மூக்கு மேல கோபத்தை வைச்சுக்கிட்டு. அடைக்கோழி மாதிரி 'உர்ர்ரு'ன்னு திரிவானப்பா."

எல்லாவற்றையும் குறைப்படுத்தியே சொல்வது பழக்கம். கிராமத்து மக்களிடம் இருக்கிற இந்தச் சுபாவம் குறைதேடும் குதர்க்கச் சிந்தனைபோலத் தோன்றும். ஆனால், மிகப்பெரிய நிபுணத்துவமான சுபாவம் என்பதுதான் நிசம்.

மக்களிடமுள்ள நிறைகள் தண்ணீரில் இலைமாதிரி மிதந்துவிடும். முகம் மாதிரி, முகத்து வியர்வை மாதிரி, மூடி மறைத்துவிட முடியாது. நடவடிக்கைகளில் வெளிச்சமாகி விடும். எல்லாருக்கும் தெரிவதை என்னத்துக்குப் பேசணும்?

குறைகள் இருக்கின்றனவே... தண்ணீரின் ஆழத்தில் படிந்து கிடக்கிற சகதி மாதிரி உள் புதைந்து கிடக்கும். மனம் மாதிரி, மனசின் நினைவு மாதிரி, வெளித் தெரியாது, மனித உள்முகம். தேடணும், தடவிப் பாக்கணும், நடவடிக்கைகளின் உள்பக்கங்களில் துப்பு துலக்கணும். சிக்குகிறபோது சிக் கென்று பிடிக்கணும். அதற்குச் சாமர்த்தியம் வேணும். அனுபவ அறிவு வேணும்.

தேடாமலேயே தெரிகிற நிறைகளைக்கூட எதற்காகக் குறைப்ட!டுத்திச் சொல்ல வேண்டும்? அதிலென்ன உளவியல் நிபுணத்துவம்?

எதிலும் நிறைவடையாத வளர்முகம். எல்லாவற்றிலும் அதிருப்தியடைகிற உயிர்க்குணம். முடிவில்லா இயங்குநிலை: 'இன்னும், இன்னும்' என்று நிறைவில்லா நிறைகள் நோக்கி மனிதனை முன்னகர்த்தித் துரத்துகிற முயற்சி. புதிய புதிய

சாதனைகளையும் கனவுகளையும், இலக்குகளையும் உருவாக்கிக் கொண்டு அதனை நோக்கிய பயணமாக வாழ்க்கையை ஆக்குகிற யத்தனிப்பு. எதையும் குற்றம் சொல்லியே பழக்கப்பட்ட கிராமத்தாட்கள் இவனை – உண்மையானவனை – உண்மையானவன் என்று சொல்வது ஆச்சரியம்தான்.

சண்முகவேலு அரிச்சந்திர மகராஜா கிடையாது. உண்மைகாக்க உள்ளது உரியது எல்லாம் பறிகொடுத்த மகாப்பெரிய தியாகியெல்லாம் கிடையாது.

சாதாரண கிராமத்தான்தான். ஆனால் மனத்தை முகத்தில் வைத்திருப்பான். உணர்வை உதடுகள் பேசும். அவ்வளவுதான்.

அடிமடியில் ஆயிரம் ரூபாயைச் சுருட்டி மடக்கி வைத்திருக்கும்போது, பத்து ரூபாய் கைமாத்துக் கேட்கிற பக்கத்து வீட்டுக்காரனிடம் "அஞ்சு பைசாவுக்குக்கூட வக்கத்துப் போயிருக்கேன். பொடி மட்டை வாங்கவே துட்டில்லாம தட்டழியுதேன்" என்று கூறி, கைவிரித்து விடுகிற கிராமத்து 'ஆழம்' சண்முகவேலுவிடம் இருக்காது.

கொடுத்து வாங்கினால் சிரமமில்லை என்று தோன்றி னால், கொடுத்துவிடுவான்.

ஒன்றும் தெரியாமலேயே ஊர் மடத்தில் உட்கார்ந்து கொண்டு, "எந்த எந்த விடலைப்பயக எந்தெந்தப் பொம்பளைகளை வேலிக் காட்டுக்குள்ளே என்னென்ன செய்றாங்கங்கிறதையெல்லாம் கண்கொண்டு பார்த்துட்டுத் தான் 'கம்'முன்னு உக்காந்திருக்கேன்" என்று அடிக்கிற வெத்துவேட்டு வெடிப்பிலேயே சுற்றியிருப்பவர்களைக் கதிகலங்க அடிக்கிற வெற்றுச்சவடால் தனமெல்லாம் சண்முகவேலிடம் இருக்காது.

தெரியும் என்றால் தெரியும் என்பான். இல்லையென்றால், தெரியாது என்பான். முடியும் என்றால் முடித்துத் தந்துவிடுவான். முடியாத காரியம் என்றால்... வெற்று அலைச்சல் அலைய வைத்து கை விரிக்காமல், முடியாது என்றுவிடுவான்.

கபடமில்லாதவன். வெள்ளையானவன். உள்முகத்திற்குள் உள்முகமாகச் செருகிச் செருகி மறைமுகமாகாத சண்முகவேலு.

சண்முகவேலு விடியற்காலம் புஞ்சைக் காட்டைச் சுற்றிப் பார்க்க சைக்கிளில் போயிருந்தான். மிளகாய்ச் செடிகள் புதுக்கொழுந்து எடுத்து இளம்பச்சையாக ஜொலித்தன. பங்குனி மாசத்தில் தப்பிப் பெய்த ஒரு மழை. தண்ணீர் புரளப் பெய்த ஒரு பாட்டமழை.

பூத்துக் காய்த்துக் கிழடாகிவிட்ட மிளகாய்ச் செடிகளில் புதுத்தளிர். குமரிக்களை. மஞ்சள் பூசிக் களித்த இளம் பெண்ணைப் போன்ற உயிரொளி. புதுப் பூக்கள். இன்னொரு 'மேல் பலன்' பிடிக்கும். இன்னும் ஒரு 'பிடி' பிடிக்கும்.

வாய்க்கால் ஈரத்தில் கால்தடம் பதிய நடந்த சண்முகவேலுவுக்குள் ஒரு திருப்தி. நாலு வருஷமாக ஏமாற்றிக்கொண்டு வந்த மிளகாய் வெள்ளாமை. சாண் ஏற்றி முழம் சறுக்கி கைகொட்டிச் சிரித்த வெள்ளாமை. இந்த வருஷம் பரவாயில்லை. கைகொடுக்கும். கடன் குழியிலிருந்து 'தம்' பிடித்து ஏறுவதற்கு மிளகாய்ப்பழம் கை கொடுக்கும்.

வெள்ளை மூக்குத்திகளை விதைத்த மாதிரி பூக்கள். சடை பின்னி வளர்ந்த பசுங்கிளைகளில் ஒளிப்புள்ளிகளாய் பூக்கள். அம்மா முதுகுக்குள் மறைகிற பிள்ளைகளைப் போல, பசிய இலைகளுக்குள் பதுங்கித் தொங்குகிற மிளகாய்கள். இரத்தச்

சொட்டுகளாய் மின்னுகிற சிவப்புப் பழங்கள். ஆபரண அலங்காரமாய் குலுங்கி நிற்கிற நிறைமாச கர்ப்பிணிகளாகச் செடிகள்.

மூன்று வருடத்திற்கு முன்பு—

சங்கரன்கோவில் கமிஷன் கடைக்கு வற்றல் விற்கப் போயிருந்தான். மிகக் குறைவான விளைச்சல். சண்டும் சருகுமாக இருந்த வற்றல். குவிண்டால் மூவாயிரத்து இருநூறு ரேட்டுக்கு விற்றது. ஒரு கைலி எடுத்தான். கைத்தறிக் கைலி. முறுக்கு நூல். இருபத்தேழு ரூபாய்.

போன வாரம் சங்கரன்கோவில் போயிருந்தான். நல்ல வற்றல். குவித்து வைத்ததால் இரத்தக் குன்றாகத் தோன்றியது. குவிண்டால் இரண்டாயிரத்து எழுநூறு விலை என்று இவன் வற்றல் திகைந்தது. கைலி எடுக்கப் போயிருந்தான். அதே வைரச் சங்கு. முறுக்கு நூல் கைலி. கட்டம் போட்டது. விலை எழுபத்தைந்து ரூபாய்க்கு ஒரு சல்லிகூட குறைக்க மாட்டேன் என்று கறாராகப் பேசினான், ஜவுளிக்கடைக்காரன்.

மடித்துக் கட்டியிருந்த கைலியைக் குனிந்து பார்த்துக் கொண்டான். கசந்த சிரிப்பாகச் சிரித்துக் கொண்டான்.

மூன்று வருஷத்தில் மூன்று மடங்கு விலை உயர்ந்து கொண்ட கைலி. ஐநூறு ரூபாய் குறைந்துகொண்ட வற்றல் விலை. இது என்ன மாயம்? என்ன நியாயம்? யார் செய் கிறார்கள், இந்தக் கூத்தை?

முகம் தெரியாத எதிரிகள் எல்லாரும் சுற்றி நின்று கபடமாகச் சிரிப்பதைப் போலிருக்கிறது, சண்முகவேலுவுக்கு. ஏய்ப்பதில் வெற்றி கண்ட கெக்கலிப்பான கபடச் சிரிப்பு. ஏமாந்தது தெரியாமல் சுற்றி இருப்பவனை ஏமாற்றிக்கொண்டு கெக்கலிக்கிற சம்சாரிகளின் அப்பாவித்தனம்.

அடி வயிற்றிலிருந்து பீறிட்டு வந்த பெருமூச்சு.

"போறாங்க... பாவமும் அக்ரமும் பண்ற ஏமாத்துக்காரப் பாவிப் பயக. அததுக்குரிய பலனை அனுபவிச்சுட்டுப் போறாங்க. நமக்கு மட்டுமா... அநியாயம் நடக்கு. ஊருக்கு உரியது நமக்கும். எல்லாருக்கும் எதுவோ... அது நமக்கும்..." என்று தன்னைத்தானே தேற்றி சமனப்படுத்திக்கொள்கிற சண்முகவேலு.

புஞ்சையின் வடகோடியில் வேப்ப மரம். அஞ்சு வயசு மரம். எத்தனையோ நோய்களுக்கு மருந்தாகிற வேப்ப மரம். இப்போது அதற்கோ நோக்காடு. உச்சிலிருந்து பட்டு வருகிறது. காய்ந்து சருகாகி, செத்து வருகிறது. ஆணிவேரிலேயே ஏதோ புழு அரிப்பு.

'காலத்தின் தலை எழுத்தே கோணல் எழுத்தாகிப்போன அறிகுறிதான்... வேம்புக்கே நோக்காடு... ச்சேய்... இந்த மண்ணுல மனுஷன் வாழ முடியுமா?'

இயற்கையே திரிந்து, கெட்டழிந்து, நாசக்காடாகி வருவதை மறைத்துக்கொண்டு கபடச் சிரிப்பு சிரிப்பது போலத் தோன்றுகிறது, சண்முகவேலுவுக்கு.

பொழுது நிறம் இன்னும் மஞ்சளாகவே இருக்கிறது. வெயில் குளிராக இருக்கிறது. செடிப் பசுமையில் பொன்வெயில் பார்க்க அழகாக இருக்கிறது. வடக்குப் பொழியில் நின்ற சண்முகவேலு, ஆற்றுக்கு வடக்கிலுள்ள பனந்தோப்பைப் பார்த்தான். ஆற்றுக்குள்ளிருந்து லட்சணமாய் மேய்ந்துகொண்டிருந்த ஆண்மயில். அதன் நீள்தோகை மயில் நிறம், எந்த நிறம் என்று சொல்ல முடியாத அழகான நிறம். கண்ணைக் குத்தாத நிறம். மயிலிறகால் வருடுகிற மாதிரி கண்ணுக்கு இதமான நிறம்.

குட்டை வாலுடன் லட்சணமற்று மெதுநடையாக, வேலிமர நிழலுக்குள் நகர்ந்த பெண்மயில். அதன்பின்னால் கதுவாலிப்

பறவைகளைப் போல 'குடுகுடு'வென்று ஓடுகிற மயில் குஞ்சுகளின் கத்தல்.

கபடமற்ற மயில்கள், கபடமான மனிதர்கள் மரங்களையும் தோப்புகளையும் வெட்டி வெட்டி விறகாக்கிவிட... பொட்டலாகும் நிலத்தில் நிற்க இடமில்லாமல் நிழல் தேடிக் கதறியோடுகிற மயில்கள்.

சைக்கிளை எடுத்தான். கிளிப்பைத் தட்டிவிட்டு ஸ்டாண்டை நகர்த்தி, பெடலில் கால் வைத்து...

ப்ரீவீலின் இரைச்சல் சுகமாக இருந்தது. வண்டிப் பாதையில் மழைக்குப் புழுதி அடங்கியிருந்தது. வேகமாகப் பெடலைச் சுழற்றிவிட்டு நிறுத்திவிட்டால்... விரையும் சைக்கிளில் இரையும் ப்ரீவீலின் சங்கீத லயம். மனசுக்குள் ஒன்றி ரசித்தான்.

"யப்பா... யாரது?"

"என்ன மாமா...? நான்தான்."

"அடடே... சம்முகவேலா?"

"ஆமா... மாமா..."

சுமக்கமாட்டாத புல்லுக்கட்டோடு பெரியவர். புல்லுக்கட்டின் கனம் கழுத்து நரம்புகள் விடைத்தன. பாரம் தாங்காமல் உயரம் குறுகியிருந்த கழுத்து. புல்லுக்கட்டு நீளம். அகலம். கனத்த உருட்டு. நாலு வரிசையான கட்டுகள்.

"என்ன மாமா?"

"கட்டைச் சுமக்க முடியலை."

"வீட்லே போட்ரணுமா? கொண்டாங்க. அகலக் கேரியர்தான்."

ஸ்டாண்டு போட்டு நிறுத்தினான். பக்கத்தில் வந்து நின்று, கேரியரைப் பார்த்து நிதானித்த பெரியவர். இவனும் தாங்கிப்

பிடிக்கத் தயாரானான். நகர்த்த முடியாத கனத்த புல் கட்டை கேரியரில் போட்டார். தாங்கிப் பிடித்த சண்முகவேலு இருபக்கமும் சமமான இழுப்போடு சரிபார்த்து வைத்துக்கொண்டு...

கிளிப்பைத் தட்டினான்.

பாரம் சுமந்து வந்த நெஞ்சுத் திணறலில் 'கேஸ்ஸு பூஸ்ஸ்' ஸென்று இளைத்த பெரியவர், ஆசுவாசப் பெருமூச்சு விட்டார். புல் கட்டோடு உருளுகிற சைக்கிளை நிறைவான பாராட்டுணர்வோடு பார்த்தார்.

"இதான்... சம்முகவேலு. மத்த பயலாயிருந்தா— 'பேக் வீல்லே காத்து குறையாயிருக்கு'ன்னு சொல்லிட்டுப் போயிருப்பான். 'இவன் மாடு வளத்து லாபம் பாக்குறதுக்கு நாம எதுக்கு புல்லுக்கட்டு சொமந்து சீரழியணும்'னு கெட்ட நினைப்பு நினைப்பான். சம்முகவேலு நல்ல பய. சொன்னவுடனே... சுமையை ஒத்துக்கிட்டான்."

இந்த நல்ல தன்மையை— வெள்ளந்தித்தனத்தை — காரியார்த்தமாகப் பயன்படுத்திக் கொள்கிற கபடங்களும் உண்டு.

இவனிடம் வற்றல் விற்ற பணம் இருப்பதறிந்து ஒரு மாதத் தவணைக்கு கைமாத்து வாங்கிவிட்டுப் போனார், கோபால். சண்முகவேலுவும் கேட்டவுடன் அட்டியின்றிக் கொடுத்து விட்டான் மூவாயிரம் ரூபாயை. தவணைப்படி திருப்பித் தந்துவிட்டார், கோபால்.

கோபால் ஊர் மடத்தில் உட்கார்ந்து தம்பட்டம் அடித்திருக்கிறார். "கேட்டவுடனே சம்முகவேலு ரூவா தந்துட்டான். நான் அதை மொரட்டு வட்டிக்குக் குடுத்தேன். ரூவா திரும்பி வந்துச்சு. நானும் குடுத்துட்டேன்... சம்முகவேலு புண்ணியத்துலே எனக்கு முன்னூறு ரூவா வட்டி வரவு ஆதாயம்" என்று தற்பெருமையாகப் பேசிச் சிரித்த விஷயமும் சண்முகவேலு காதுக்கு வந்தது.

அவன் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. சின்னப்பிள்ளை மடியில் ஒன்றுக்கிருந்து விட்டால், தண்டிக்கவா போகிறோம்? மன்னித்துவிடுவதில்லையா?

அப்படியே நினைத்துக் கொண்டான்.

"அது அவரோட அற்பக் கொணம். அதுக்காக... நான் மாறணுமா? நம்பினதாலே எனக்கு நட்டமில்லை..." என்று பெருந்தன்மையாகச் சொல்லிவிட்டான்.

இப்படிச் சின்னசின்னக் காயங்கள், சீக்கிரம் ஆறிவிடக் கூடிய சின்னக் காயங்கள். சின்னசின்னக் கபட நிழல்கள் அவன்மீது விழுந்து நகர்ந்தன.

அதையெல்லாம்...வந்து ஒட்டிய தூசியைப் போல வலியில்லாமல்—கசப்பில்லாமல்—தட்டிவிட்டுக் கொண்டான்.

இதுதான் சண்முகவேலு. எப்பவும் இப்படித்தான். சபலமில்லாத சண்முகவேலு. நிறைகுடமாகத் தளும்பாமல் நிலைத்து நின்ற சண்முகவேலு. சூழலின் கபடப் பாம்புகளின் தீண்டல்களால் சீண்டப்படாத சண்முகவேலு. இருட்டுச் சூழலால் இருண்டுபோகாத சண்முகவேலு.

அதுவே அவனை மிகப் பெரிய சிக்கலில் மாட்டிவிடும் என்று அவனுக்கும் தெரியாது; எவருக்குமே தெரியாது.

கோபால் வந்தார்.

"சம்முகம்... உன்னாலே ஒரு காரியம் ஆகணுமே..."

"சொல்லுங்க."

"மெட்ராஸ்லே போய், கடையிலே சம்பளத்துக்கு இருந்தவன், என்னோட மகன். போன வருசம் சொந்தமா கடை வைச்சு நல்லபடியா நடத்துதான்."

"ரொம்பச் சந்தோசம்."

இப்படி தொடங்கிய பேச்சு "அந்தப் பயலுக்கு நல்ல இடத்துலே பொண்ணு பாக்கணும்" என்று தொடர்ந்தது.

"நல்ல காரியம்தானே? என்னால முடிஞ்ச அளவு முயற்சி செய்து பார்ப்போம்."

சற்றி வளைத்து நாலைந்து நாள்களாகப் பேசிய பேச்சுகளில் இவன் சொந்தத்திலேயே ஒரு பெண் இருப்பது தெரிந்தது. போய்ப் பேசினால்... தொட்டதெல்லாம் துலங்கின. சட்சட்டென்று எல்லாம் முடிந்தன. மூடி விழிப்பதற்குள் சம்மதம் கிடைத்தது.

பதினைந்து பவுன் நகை — பதினையாயிரம் ரொக்கம் என்ற விஷயத்தில்தான் பெண் வீட்டில் சிக்கலாயிற்று. இவன் முழுசாகத் தலையிட்டு, பேசி, நாள் கணக்கில் பலதையும் விளக்கி... ஒப்புக்கொள்ள வைப்பதற்குள், 'ஆத்தாடி, அம்மாடி' என்றாகிப் போயிற்று.

மறு மாசமே கல்யாணமாயிற்று கல்யாணம் முடிந்த மூன்றாம் நாள்.

சண்முகவேலு வீட்டில் கோபால்.

பம்மிப் பதுங்கிப் பேசி, குழைந்து நெளிந்து, நைச்சியம் பேசி... இப்படி முடித்தார்.

"வைச்ச கடையிலே தடுமாற்றம். இன்னும் பதினை யாயிரம் இருந்தால்... கடையை நடத்துவான். இல்லேன்னா... கடையை மூடிட்டு ஆந்திராவுக்குப் போயிருவான்."

சண்முகவேலுவுக்குள் அதிர்ச்சி. பொறுப்பேற்று முடித்த கல்யாணம். மறுநாளே இப்படியோ... இடி.

நகைக்கும் ரொக்கத்திற்கும் சம்மதிக்க வைக்கவே அத்தனை சிரமம். மாலை மலர் வாடுவதற்குள் இன்னும் பதினையாயிரமா? கேட்க முடியுமா? கேட்டாலும் நடக்குமா?

தராவிட்டால்? கடனுக்குப் பயந்து மாப்பிள்ளை ஆந்திராவுக்கு ஓடிவிட்டால்?

பொறுப்பேற்று முடித்த நம் தலையல்லவா உருளும்?

'இதென்னடா... பெருஞ்சிக்கலாயிருக்கிறது' என்று மனசுக்குள் மருகினான் சண்முகவேலு.

பணத்தில் குறியாக – உறுதியாக இருந்தார் கோபால்.

அதே சமயம்

அவர் தந்த உறுதி. சத்தியம்.

"பணத்துக்கு நான் முழுப் பொறுப்பு. எந்தலையை அடகு வைச்சாச்சும் வட்டியோட திருப்பி ஒப்படைச்சிருவேன்."

அவரது சத்தியத்தை நம்பி, மனைவி நகையை வங்கியில் அடகு வைத்து... அடுத்தாளுக்குத் தெரியாமல்... அரவமில்லாமல் சண்முகவேலு பணத்தைத் தந்தான், கோபாலிடம்; 'நல்லது செய்தால் துன்பம் வராது' என்ற நம்பிக்கையில்.

ஆறு மாசமாயிற்று. ஒரு வருஷமாயிற்று. வாங்கிய பணத்தையும் நட்டக்குழியில் தொலைத்துவிட்டு– ஆந்திராவுக்கு ஓடிப்போய்விட்டான் மாப்பிள்ளை. கடையும் போயிற்று. மாப்பிள்ளையையும் காணோம்.

ஒரு பெண்ணுக்கு வாழ்வே தள்ளாடுகிற சமயத்தில் இவனது நகையைப் போய் யாரிடம் கேட்பது? பணத்தையும் வட்டியையும் எப்படிக் கேட்பது? என்ன சொல்லிக் கேட்பது?

கெட்ட கனா கண்ட ஊமையன் கதையாயிற்று, இவன் கதி.

நகை கேட்டு வீட்டுக்குள் மனைவி கலகக்கொடி தூக்கினாள். கோபாலிடம் கேட்டால்... "அந்தப்பயதானே பணத்தைத் தொலைச்சான். அவங்கிட்டேயே கேளு" என்று வேதனையும், கோபமுமாய் கோபால் சொல்லிவிட்டார்.

இவன் பாடு, பெரும் பாடாயிற்று. காலடித் தரையே உருவிக்கொண்ட மாதிரியான உள் அதிர்வு. மனப்பகீர். இரவுத் தூக்கம் பறி போயிற்று. வீட்டுக்குள் விடாத நச்சரிப்பு. அடைமழையாய் சண்டைக்காடு. சத்தக்காடு.

நிம்மதி போயிற்று. ஒவ்வொரு நாளும் முள்படுக்கையில் புரள்கிற மாதிரியான நரக வேதனை. உண்ணும் சோறு நெருஞ்சிமுள்ளாயிற்று. வீடு, முள்முனையாயிற்று. எந் நேரமும் குத்துகிறது. குடைகிறது. மனசின் ரத்தம் வழிய வார்த்தைக் கத்திகளின் பாய்ச்சல்.

நாள், நகர மறுக்கிற பாரமாக...

"என் நகை எங்கய்யா? எனக்குப் போட்ட நகை எங்க? வழியிலே போற யாருக்காகவோ எங்கய்யா வியர்வை சிந்திச் சம்பாதிச்ச தங்க நகையை என்னத்துக்குத் தாரை வார்க்கணும்?"

கோபச் சீறலாய் மனைவியின் மாய ஊசிகள்.

அங்கேயும் நகர முடியவில்லை. இங்கேயும் நகர இயலவில்லை. நிற்கும் இடமும் துரத்துகிறது. என்ன செய்ய? சண்முகவேலு தத்தளித்தான்.

மனவேதனையை யாரிடம் சொல்லியழ? ஏமாந்த வெட்கக் கேட்டை எவரிடம் சொல்லியழ முடியும்? ஆத்ம பங்காளியே உலுக்குகிறபோது... யாரிடம் போய்த் தஞ்சம் புகுவது?

நல்ல விஷயத்திற்கு நல்ல மனத்தோடு இறங்கிய நேர்மைக்கு இதுதான் பரிசா? 'எனக்கென்ன' என்று சுயநலமாக இறுகிய மனத்தோடு ஒதுங்காமல்... பொறுப் புணர்வின் அக்கறையோடு செய்த தியாகத்திற்கு இதுதான் பலனா? ஆத்மாவின் ஆணிவேர் வரை அதிர்ந்து குலுங்கிப் போனான் சண்முகவேலு.

இரண்டு வருடமாயிற்று. மூன்று வருடமாயிற்று. கோபாலின் கபடமான மௌனம். பார்க்கும் நேரமெல்லாம் "மகன் போயிட்டானே" என்கிற கபடப் புலம்பல். சோகப் பாவனை.

சௌகரியமாக செய்து தந்த சத்தியத்தை மறந்து போகிற கோபாலின் சாமர்த்தியம். ஞாபகப்படுத்தினாலும் நழுவிக் கொள்கிற சமத்காரம். மனசின் ஆழ்நுனி வரை கசந்துபோகிற சண்முகவேலு.

'நல்லத்துக்கு இதுதான் விலையா? உண்மைக்கு இவ்வளவு பெரிய தண்டனையா?'

நாளாக நாளாக வீட்டுக்குள் சண்டை, சச்சரவுகள். உக்ரமான கோபதாபம். சட்டையைப் பற்றி உலுக்கி, வழி மறிக்கிற கேள்வித்தீ.

"இப்ப நகை வந்து சேரணும். இல்லைன்னா?" மிரட்டலின் உள் முகம் குரூரமாயிருந்தது.

'சண்டை சண்டையாகவே நிற்குமா? வாக்குவாதத்தோட நின்னு போகுமா? அடுத்த கட்டத்துக்குப் போனா...? ஐயய்யோ குடும்பம் நாய்கடிச்ச சர்க்கரைச் சாக்காயிருமே? நார் நாராய்க் கிழிஞ்சு நாசமாயிருமே..'

சண்முகவேலுவுக்குள் இரவும் பகலும் வாட்டி வதைக்கிற மன உளைச்சல்கள். பய பீதியான கற்பனைகள். கிலி உணர்ச்சி.

நிலவரமே கலவரமாகிவிட...

வேறுவழியில்லை. ஊமைக்கனா கண்டாயிற்று. யார் வீட்டுக்கோ வந்த துரதிருஷ்டத்தின் முழுச்சுமையும் இவன் வீட்டில். எங்கோ வந்த இடி, இவன் நெஞ்சில் விழுந்தது.

எப்படியாவது மீண்டாகணுமே... நகையை மீட்டாகணுமே...

மயான காண்டத்து அரிச்சந்திரனாக மன உளைச்சல். எனக்கா இந்தக் கதி? பாவலா, ஏமாத்து இல்லாத நல்லதுக்கா இந்த இடி? நல்ல மனசுக்கும், உண்மைக்கும் இதுதான் விலையா?

கதியற்ற கையறு நிலையில்— வேறு வழியேயில்லாமல்—

தாத்தாவும், அய்யாவும், தலைமுறை தலைமுறையாய் வியர்வை சிந்திப் பாடுபட்ட — ஒன்றைப் போட்டால் நூறைத் தருகிற — தாய்மடி போன்ற பூர்வீகப் புஞ்சையை விலைபேசி... கீரையோ கீரையென்று கூவி விற்ற கேவலமாகி...

ஏறிப்போன வட்டிச்சுமையில் ஏலம்போக இருந்த நகையை மீட்டு... மனைவியின் உள்ளங்கையில் வைத்தபோது —

அட்டெண் 50ம், ரஸ்டிலும் சாப்பிடுகிற நிரந்தரமான ரத்த அழுத்த நோயாளியாக மட்டும் மாறவில்லை, சண்முகவேலு.

இப்போது —

யாருமே சொல்லுவார்கள் கிராமத்தில்.

"சம்முகவேலு முன்ன மாதிரியில்லை. என்ன செய்றான், ஏது செய்றான்னு ஒண்ணுமே தெரியலை. ஒரே மூடுமந்திரம். இருட்டு மாதிரி ஏகக் கபடனாயிட்டானப்பா."

—அமுதசுரபி—ஜூன் 2000

❋

# சாகா வரச் சாபம்

'இதுக்கொரு சாவு வரமாட்டேங்குதே' என்று ஏங்கித் தவிக்கிற எதிரிகள் ஜாஸ்தி இந்த வெள்ளைநாய்க்கு. ஏகப்பட்ட பேர்கள் பகை உணர்ச்சியின் ரகசிய வெக்கையோடு தான் பார்ப்பார்கள். எது எதையோ பறிகொடுத்த இழப்பின் வெக்கை.

'என்னங்க இப்படி வன்மத்தோடு பாக்கணும்? அவுக திங்குற சோத்துலே மண்ணள்ளியா போட்டுட்டேன்? என்று குழம்பித் தவிக்கும்' அந்த நாய். வெள்ளந்தியான வெள்ளை நாய்.

மடத்துத் திண்ணையில் நாய் வீட்டாள். கால்மேல் கால் போட்டு ஆட்டிக் கொண்டிருக்கிறார். அவரோடு பின்பற்றி வந்த நாய், மடத்துத் திண்ணையில், உட்கார்ந்திருக்கிற மற்ற ஆட்களிடம் போய் நிற்கிற நாய். கிட்ட கிட்ட போகிறது.

வஞ்சகமில்லாமல் சிநேகிதமாய்ப் பார்க்கிறது. அவர்கள் பாதங்களை நாவால் வருட ஆசை. முழங்கால் மூட்டுகளில் மூஞ்சியை உரசி மூச்சு விட ஆசை. பின் கழுத்தை அவர்கள் உள்ளங்கையால் வருடமாட்டார்களா என்ற ஆசை. வருடலின் மென்மையில் தோல் புல்லரித்து, கண் சொக்கி நிற்க ஆசை.

ஆனால், எல்லாரும் கடுப்பாகப் பார்க்கிறார்கள். ஆசை ஆசையாக முகம் பார்க்கிற வெள்ளை நாய் வன்மக்

கண்களையே எதிர்கொள்கிறது. வெறுப்பான முகச்சுளிப்பு களிடமே முட்டிக் கொள்கிறது. ரகசியமாய் மட்டியை கடிக்கிற பகை மனசுகள்.

நாயின் மூஞ்சி நெருங்கி வந்தால்... கண்ணின் ஆழத்தில் அச்சத்தின் நடுக்கம். கடிச்சிருமோ என்கிற பதற்றம்.

"ச்ச்சே... டு... ச்சேடு" என்று அசூயையோடு கத்தித் துரத்துகிறார்கள்.

"ஆள்க இருக்கிற எடத்துலே என்ன சோலி, நாய்க் கழுதைக்கு" என்று வெறுப்போடு விரட்டுகிற கிராமத்தாட்கள். "போய்த் தொலையேன்... அங்குட்டு. சனியன்."

அபலைத்தனமாக வீட்டாளைப் பார்க்கிற நாயின் கண்ணில் பரிதாபகரமான புகார்த் தொனி.

'நா எப்படித் தலையிட முடியும்' என்பதைப் போல எங்கோ பார்க்கிற பாவனையோடு தலையைத் திருப்பிக் கொள்கிற வீட்டாள்.

நாய் மூஞ்சியைச் சுற்றிச் சுற்றி வருகிற ஒரு ஈ. சற்று முரட்டு ஈ. பின்னங்காலிலும், முதுகிலும் உட்கார்ந்து பார்த்து சலித்த ஈ, அதன் நாசி நுனியில் வந்து உட்கார்ந்தது.

நாய்க்குக் கூச்சமாக இருந்தது. மூஞ்சியை மூஞ்சியைச் சுழற்றியது. பயத்தில் தடுமாறி அங்கும் இங்குமாகக் குதித்தது.

பயந்து பயந்து நாசியால் செருமிய நாய்.

பறந்த ஈயை வாயால் கவ்வ முனைகிற விளையாட்டில் நாய். அப்படியே நகர்ந்துபோய் வாட்டர்டேங்கின் அடியில், அதுவே காலால் கிளறி மண்ணைத்தோண்டிய சின்னக்குழியில் (அதுக்கு அது கட்டிய வீடு) படுத்துக்கொண்டது. ஒருக்கழித்த படுக்கை. மூடாத கண்ணைச் சுற்றுகிற சின்ன ஈக்கள். மொய்க்கும் ஈக்களுக்குப் பயந்து சின்னக் கண்ணை மூடுகிற நாய். மூடுவதற்கு முன் பார்த்த ஆகாயத் துண்டு. மேக இணுக்கு.

துள்ளல் துடிப்பான மனசின் நினைவெல்லாம் தேய்ந்து... குழம்பி... அடங்கி... உறக்கமடிக்குள் புதைகிற கணம். உறக்க சுகத்தை உணரும் மனசின் மயக்க தருணம்.

நாயின் உள்ளுணர்வில் ஒரு சுரீரிடல், மடத்தில் உட்கார்ந்திருந்த வீட்டாள் எழுந்து போய்விட்டதாக ஒரு மாய உணர்வு. கண்ணைத் திறக்காத நிலையிலேயே உணர முடிகிற வீட்டாள் இல்லாத வெறுமை.

ஈக்கூட்டமாய் மனசுக்குள் மொய்க்கிற பய உணர்ச்சி. வீட்டாள் இல்லையென்றவுடன் ஏற்படுகிற பாதுகாப்பற்ற உணர்வு. 'எந்நேரம் என்ன தாக்குதல் நிகழுமோ' என்ற பயப் படபடப்பு. அனுபவப்பட்ட மனசின் திகில். பீதியில் துடிக்கிற கணம்.

'விர்ர்ர்ர்ர்...' ரென்று வருகிற இரைச்சல். பாய்ந்து பறந்து வருகிற கல்லின் இரைச்சல்.

பகீரிடுகிற மனப்பதற்றம். துடிதுடித்து, தடபுடவென்று எழுவதற்குள் —

இடது வயிற்றில் இடியின் தாக்குதல். 'பொத்'தென்று வந்து கோபமாய் தாக்கிய கல். மின்பாய்வாக வாரிச் சுருட்டுகிற வலி.

"வாள்... வாள்... வாள்" என்று கிலி பிடித்து அலறிக் கொண்டோடுகிற வெள்ளை நாய்.

வீட்டாள் இல்லையென்றவுடன் வெளிப்படத் துவங்கி விட்ட ஊராரின் பகை. கல்லாகப் பாய்ந்து வருகிற வன்மம். எற்ற வருகிற கொலைப்பாதங்கள். வீசியெறியப்படுகிற விறகுக் கட்டைகள்.

ஒரே ஓட்டம், புழுதி கிளப்புகிற உயிரோட்டம். மனசின் துணையில்லாமல் ஓட்டமாய் பறக்கிற கால்கள். 'ஐயோ... ஐயோ...' என்று பதறித் தவிக்கிற மனசின் துடிப்பு.

*சொந்த வீட்டின் தொழுவத்திற்குள் போய் மூச்சு வாங்குகிற நாய். கீழ் பற்களுக்கிடையே வெளியே தொங்குகிற நாவில் வியர்வை, பயப் படபடப்பின் எச்சில். சாவிலிருந்து தப்பிய ஆசுவாசம்.*

*கூளப்படப்பின் நிழலில் படுத்தது. நிம்மதியில்லாத பயச்சுமை. நாலு காலையும் மடக்கிப் போட்டு மேலே படுத்த நாய். தூக்கிய தலை. நாக்கின் துரித ஏற்ற இறக்கத்தில் தெரிகிற களைப்பு. மடங்கிய செவியின் மடலிலும் பயத்தின் சலனம்.*

*'என்னத்துக்கு இப்படி வெரட்டுறாக? கல்லுட்டும், வெறகுட்டும் எறிஞ்சு கொல்லப் பாக்காகளே... அது ஏன்? அண்டவுடாம என்னத்துக்கு அடிச்சுத் துரத்தணும்? அடச்சீ... நாய் பிழைக்குமா... இந்தப் பயந்த பொழப்பு? செத்துப் போறதை விட பயங்கர அவஸ்தை, செத்துப் போவோமேன்னு பயந்து பயந்து வாழ்றது...'*

*நினைவுகளில் கசப்பு. கசப்பின் அழற்சி. சோர்ந்து களைத்து துவள்கிற நினைவுகளின் அயற்சி.*

*மடங்கிய செவிமடல்கள் நாக்கைப்போலத் தொங்கு கின்றன. ஈக்களை விரட்டமட்டும் ஆடுகின்றன. பற்கள் இரண்டும் ஊசிபோல நிற்கின்றன. நீண்டு தொங்கும் சிவந்த நாக்கில் ஒழுகும் நீர்.*

*மற்ற நாய்கள் எதுவும் இதற்குப் பிடிக்காது. பொட்டை நாய் தவிர... வேறு எந்த நாயும் பிடிக்காது.*

*கறுத்த நாய் ரொம்ப மோசம். கோழிக்குஞ்சுகள் இரை பொறுக்குவதைப் பார்த்துக்கொண்டு சும்மாவே நிற்கும். என்னத்துக்கு? காவலுக்கா?*

அப்படியே ஒரு லாவு லாவவேண்டியதுதானே? கோழியை லாவாவிட்டாலும் கூடப் பரவாயில்லை. ஒரு குஞ்சைக் கூடவா லாவக்கூடாது? கூறு கெட்ட நாய்.

உயிரோடு லாவிய குஞ்சின் இளஞ் சூடான ரத்தத்தை ருசி பார்த்திருந்தால்... உயிர்ச் சூடு துடிக்கிற இளஞ்சதையை தின்று பார்த்திருந்தால்...

அடடா... அது எம்புட்டு ருசியாக இருக்கும்!

அனுபவித்திருந்தால்தான், அந்த அருமை புரியும்.

இந்தக் கறுத்த நாய் மட்டுமில்லை, வேறு எந்த நாய்க்கும் அதன் அருமை புரியாது. செத்தகறியை தின்று பழகிய செத்த நாய்கள். கற்பூர வாசமறியாத கழுதைகள் மாதிரி... இதுகள். உயிர்க்கறி ருசியறியாத சவ நாய்கள். ரத்தச்சூடறியாத செத்த பிறவிகள். எல்லாமே வீட்டு நாய்கள். நாயல்லாத நாய்கள்.

பூனையைப் பார்த்தால்கூடப் பாய்வதில்லை. இதுகளெல்லாம் என்னத்துக்குத்தான் நாய் ஜென்மம் எடுத்தது களோ? நாய்க்குணம் இல்லாத நாய்களாக வாழ்வதில் என்ன பிரயோஜனம்? சூடு சுரணை வேண்டாம்? மான ரோஷம் வேண்டாம்? நாய்க்குரிய வீரம் வேண்டாம்? வேட்டைக்குணம் வேண்டாம்?

இதெல்லாமில்லாமல்— போட்ட பழைய சோத்தை லாவித் தின்றுவிட்டு...வாலையாட்டிக்கொண்டு... ஏவுகிறவர்களைக் குரைத்துக்கொண்டு... விசுவாசமாக அடிமை உத்தியோகம் பண்ணுவதில், என்ன பலன்? ச்சேய்...!

விசுவாசமாக அடிமை உத்தியோகம் பார்ப்பதாவது பிறவி லட்சணம், ஒத்துக்கொள்ளலாம். வெந்த சோத்துப் பருக்கையை மட்டும் விழுங்கிவிட்டு... முனை முழுங்கிப் போய் நாய் இருப்பதா? மாமிச வாசமில்லாமல் உயிர் வாழ்வதா?

போட்டதைத் தின்பதில் என்ன பலன் இருக்கிறது? நாமாகப் பாய்ந்து, லாவி... கவ்வி... ஓட்டமாய் ஓடி... உயிரின் கதறலைக் கேட்டுக்கொண்டே பச்சை மாமிசத்தில் உயிர்த் துடிப்பு இருக்க... மென்று தின்கிற சுகம் இருக்கிறதே... அடடா...!

வேட்டையாடித் தின்கிற பரவசமே... தனி.

வெள்ளை நாயின் கண்கள் சொக்கிக்கொண்டு வந்தன. ஈக்கூட்டமாக மொய்க்கிற நினைவுகளின் மயக்கம்.

வெள்ளாட்டுக் குட்டிக் கறிதான் ரொம்ப ருசியாக இருக்கும். செம்மறியாட்டுக் குட்டியின் ரோமங்கள் முள் முள்ளாகக் குத்தும். முரட்டு ரோமம். கறியும்கூட ஒரு கொச்சை வாடை வீசும். வெள்ளாட்டுக் குட்டி என்றால் அப்படியில்லை. மயில் ரெக்கை மாதிரி மெல்லிசாக ரோமம். நைஸான தொலி. இளங்குட்டிக்கறி பூமாதிரி இருக்கும். மெல்ல வேண்டிய தேவையேயிருக்காது. வாயில் வைத்தால்... அப்படியே கரையும்.

அதேபோல கூவாத பருவத்து விடலைச் சேவல், ரொம்ப ருசியாக இருக்கும். அதன் கொண்டைப் பூ கடிக்கக் கடிக்க 'நறுக், நறுக்'கென்று சத்தமே சுகமாக இருக்கும்.

அதைவிட முட்டைக் கோழியிருக்கிறதே... அதை லாவி விட்டால்... ரொம்ப யோகம்தான். நாட்டுக் கோழியாக இருக்கிற முட்டைக் கோழியின் தொடைச் சதை என்றால்... பரவசம்தான். ஜென்மத்துக்கும் அதன் ருசியும், வாசமும் மனசுக்குள் மணக்கும்.

ரோமமும் உயிரும் பதறித் துடிக்க... வாயில் கவ்வப்பட்ட சேவலின் கழுத்திலிருந்து ரத்தத்தை உறிஞ்சிக்கொண்டே ஓடுவது என்பது தனிச் சுகம்தான்.

கோழி, சேவல், குட்டிகளைப் பறிகொடுத்தவர்கள் கொலைவெறியோடு துரத்துவார்கள். கம்பும், துரட்டியுமாக அடிக்க ஓடி வருவார்கள்.

அவர்களிடமிருந்து ஓடி ஒளிவது என்பது ஒரு விளையாட்டு. நாலைந்து நாட்களுக்கு அவர்களிடமிருந்து கண்ணாமூச்சி காட்டி தப்பிவிட்டால்... அப்புறம் பிரச்சனை இல்லை.

சூடு ஆறிப் போவார்கள்.

'நாய்ச் சனியனை விரட்டி விரட்டி... நாயாக ஓடித் திரியுறதா' என்று சமாதானமாகி, சாந்தமாகி விடுவார்கள்.

வீட்டாளிடம் போய் 'காச்சு, மூச்' சென்று கத்துவார்கள். கையை நீட்டி நீட்டி சண்டைக்குப் போவார்கள். தெருச் சண்டை நாறிப்போகும்.

வீட்டாள் ரொம்பச் சாமர்த்தியமாகச் சொல்லிவிடுவார். "செல்லமாய் வளர்த்துட்டோம். பெத்த புள்ளை மாதிரி எங்க நாய்..."

"எங்க ஆட்டுக்குட்டி எங்களுக்குப் புள்ளைமாதிரித் தானே? பணம் பெத்த ஆட்டுக்குட்டி. மூணு மாசம் வளர்த் துட்டு ஆயிரம் ரூவாய்க்கு முதலாக்கிரலாமே.."

"அதுக்கென்ன செய்றது? நாய், வாயில்லா ஜீவன். புத்தி சொல்லித் திருத்த முடியுமா?"

"கொல்லலாம்லே? ஊர்க்காரங்க குட்டி, கோழிகளை கடிச்சுக் குதறித் தூக்கிட்டுப்போற நாயைக் கொல்லணும்லே? மூட்டைப்பூச்சியை நசுக்குற மாதிரி... சாவடிக்கணும்லே?"

"வேண்டாம்னு சொல்லலையே... புள்ளை மாதிரி வளர்த்துட்டு, கொல்ல மனசு வரல்லே. நீங்க சொல்லுங்க. இன்னிக்கே வேணும்னாலும் கொன்னுடுங்க. குறுக்க நா வரல்லே, போதுமா?"

சாமர்த்தியமாகச் சொல்லிவிடுவார். யாரும் கொல்ல மாட்டார்கள். கொல்ல வேண்டும் என்கிற கோபம் குமுறிக்கொண்டிருந்தாலும், கொல்கிற தைரியம் வராது; பயப்படுவார்கள்.

'வாயில்லாச் சீவனை அடிச்சுக் கொன்ன பாவத்தையும் சுமக்கணுமா' என்கிற உயிர்நேயமான உறுத்தல் ஒரு காரணம்.

வீட்டாள் போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்து, கோர்ட்டுக்கும் வாசலுக்குமாய் நடக்கவிட்டு கூத்துப் பார்ப்பாரோ என்ற பயமும் மற்றொரு காரணம்.

நியாயமான பயம்தான்.

அவர் நாய் கடித்ததாக ரெண்டு மூன்று குடும்பங்கள் கலகத்துக்கு வந்து, போலீஸ் கேஸாகிய நாட்களும் உண்டு.

'என் நாயை அடித்துக் கொலை செய்ய முயன்றதாக' இவரும் ரெண்டு மூன்று தடவை போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்து, வழக்காகி... போலீஸ் வந்து விசாரித்து... அதட்டி... ஊரே பரபரப்பாகி... ஒரே பேச்சாகிக் கிடந்த அனுபவமும் உண்டு.

நாயைவிட நாய்க்காரரர் ரொம்ப மோசம் என்று பாதிக்கப்பட்டவர்களெல்லாம் சொல்லிப் புலம்புவார்கள். பரிதவிப்பார்கள். அதற்குமேல் ஒன்றும் செய்ய முடியாது.

என்ன செய்ய? நாய்க்காரரர் கைப்பசை உள்ளவர். நாலு காசு கைப்புழக்கம். நாலா காடுகளும், நாடு கோடுகளும் கண்டவர். 'பொசுக்'கென்றால் போலீஸ் ஸ்டேஷனில் போய் நிற்பார்.

இந்த ஊர் வரலாற்றிலேயே இல்லாத புதிய கொடுமை இது.

எல்லா வீடுகளிலும் நாய்கள் வளர்ப்பது கிராமத்து சகஜம்தான். நாய்க்குக் குணம் மாறி... ரெண்டு மூன்றுபேரைக் கடித்துவிட்டால், ஊர் பூராவும் பேச்சாகிவிடும்.

நாய்க்காரரே நாயை அரவமில்லாமல் கொன்றுவிடுவார். கொன்று, தென்னம்பிள்ளைக்கு உரமாகப் புதைத்துவிடுவது வழக்கம்.

கொல்லும் முறையே தனி.

வீட்டுக்காரர் நாயை அன்றைக்குத்தான் ரொம்ப அன்பாக நடத்தி... குழைவாகப் பேசி... அழைத்து... கழுத்தில் கயிறு போட்டு, சுருக்காம் முடிச்சு போட்டு... மாட்டு வண்டியின் முகக்காலில் கட்டிப் போட்டுவிடுவார்.

நாய் எதிர்பார்க்காத நேரத்தில், வண்டியை வாரி விட்டுவிடுவார். சட்டென்று உயரத்திற்குப் போய்விடுகிற வண்டி முகக்கால். கழுத்தெலும்பு ஒடிகிற சத்தம் மட்டுமே கேட்கும். துள்ளாமல் துடிக்காமல் உயிர் போய்விடும்.

இதுதான் வழக்கம். பரம்பரைப் பழக்கம்.

இவர்மட்டும்தான்—

சாமர்த்தியம் பேசுகிறார். வாய்வித்தை காட்டுகிறார். "முடிந்தால் கொன்றுவிடுங்கள்" என்று கண்ணாமூச்சி காட்டுகிறார்.

என்ன செய்ய? ஏழைபாழைகளுக்கு கோழி இழப்பு, குட்டி இழப்பு என்றால், அதைத் தாங்கும் சக்தி கிடையாது. அதற்காக போலீஸ், கோர்ட் என்று காசு பணம் செலவழித்து, வேலை வெட்டியில்லாமல் ஊர் சுற்றுவதும் கட்டுப்படியாகாது.

இப்படித்தான் கழுத்தாம்பிடிக் கட்டத்தில் ஊர் முழிக்கிறது. நாய்க்கார் இருந்தால்... நாய்க்கு 'ச்சே...டு' என்ற

அதட்டல் மட்டும். இல்லாவிட்டால் நாய்க்கு கல்லெறிதான்; கால்மிதிதான்; விறகுக்கட்டை வீச்சுதான்.

இதிலெல்லாம் ஆத்திரம் தீரவில்லை. நாயைக் கொன்றால்தான் நியாயம் கிடைத்த நிம்மதி.

எப்படிக் கொல்ல? கொன்றால் சும்மா விடுவாரா? கேஸ் கோர்ட் என்று அலைவதா? "நாயை அடிப்பானேன்... பீயைச் சுமப்பானேன்" என்ற சொல்வடை தெரிந்தும், புத்தியைக் கடன் கொடுப்பதா?

அப்படி ஊரே திகைத்துக் கிடந்த நேரத்தில்தான்—

அத்துமீறலாக ஒரு காரியம் செய்துவிட்டது, அந்த வெள்ளை நாய். ஏழு குஞ்சுகளோடு திரிந்த தாய்க் கோழியை பிடித்துத் தின்றுவிட்டது.

கோழி போன கொடுமையைவிட... தாயில்லாமல் "வீயா... வீயா... வீயா... வீயா..." என்று ஏங்கித் தவித்த குஞ்சுகளின் கீச்சுக் குரலின் சோகம்தான், எல்லார் மனசையும் கலங் கடித்தது. "ஐயோ பாதரவே" என்று இரக்கத்தில் புலம்ப வைத்தது.

தெருவெயிலில் தாயைத் தேடி கீச்சிடுகிற அந்தக் குஞ்சுகள். பிஞ்சுக் கழுத்தை நீட்டிக் கத்துகிற அதன் தேடல். வெறுமையான தேடல். சூன்யத்திற்குள் தாயைத் தேடுகிற குழந்தைத் தன்மை. அதன் சோகக்கற்றை, சகலர் நெஞ்சிலும் அறைந்தது.

அன்பில் குழைந்த மனசில் கோபம் கோபமாகக் கொந்தளித்த உணர்வு.

அன்பின் வேரில்தானே ரௌத்ரப்பூ கண் சிவந்து மலரும். செம்மையான கோப மலர். செம்மை செய்கிற தீ மலர்.

'வெள்ளை நாயைக் கொன்றே தீர்வது. என்ன வந்தாலும் சரி... எதையும் தாங்கிக்கிருவோம்' என்ற வைராக்கியத்தில் நாலைந்து இள வட்டங்கள்.

செத்த ஆட்டுக்கறியில் கடுமையான விஷம் தடவி... வெள்ளை நாய் முக்கியமாக உலவுகிற ஏழெட்டு இடங்களில் போட்டுவிட்டனர்.

இரவு முழுக்க ஒரே கமுக்கமான பேச்சு. வெள்ளை நாயின் சாவை எதிர்பார்த்த நம்பிக்கையோடு பம்மித் திரிந்த இளவட்டங்கள்.

மறுநாள்—

ஊரில் திரிந்துகொண்டிருந்த வம்புதும்பு செய்யாத நல்ல நாய்கள்—விசுவாசமான வீட்டு நாய்கள்—யாவும் செத்துக் கிடந்தன—வெள்ளை நாயைத் தவிர.

நிகரில்லாத கர்வத்துடன் ஒற்றையாகத் திரிந்தது அந்த வெள்ளை நாய். 'என்னைக் கொல்ல இங்கு யாருண்டு' என்ற ஆணவச் செருக்கு.

எப்படி....? எப்படி? எப்படி? இதுமட்டும் சாகாமல் தப்பித்தது எப்படி?

ஊர் ஜனத்துக்கு ஒரே குழப்பம். திகைப்பு.

பழைய சோத்தைத் தின்று கிடந்த நாய்களுக்கு செத்த ஆட்டின் கறி அதிசயம். காய்ந்த மாடு கம்மங்கொல்லையில் விழுந்தமாதிரி... குருட்டுத்தன வெறியில் வாய் வைத்து... சாவைத் தின்றன.

உயிர்ச்சூடு நிறைந்த கறி தின்று பழகிய வெள்ளைநாய்— இரத்த வெதுப்பையும் உயிரின் வெப்பத்தையும் ருசித்து ருசித்துப் பழகிய வெள்ளை நாய்—செத்த ஆட்டுக்கறியின்

*வீச்சத்தை நுகருமா? நுகர்ந்த கணத்திலேயே விஷ வாசத்தின் நெருடலை உணர்ந்துவிடாதா?*

*சிநேகிதமான பார்வையோடு ஏதுமறியாத அப்பாவியாக தெருஉலா வருகிற வெள்ளை நாயை வெறிக்கிற இளவட்டங்கள்.*

*மனித முயற்சியை ஏமாற்றிவிட்ட இயற்கையின் சவாலாக—எரிச்சலூட்டுகிற அதர்மமாக—சகிக்க முடியாத அநீதியாக—தங்கள் தீர்ப்புக்குக் கட்டுப்படாத அத்துமீறலாக...*

*“என்னடா... இப்படியாகிப் போச்சு? எமதூதன் போல இது திரியுது?”*

*“நம்ம தீர்ப்பைவிட தர்மத்தின் தீர்ப்பு புத்திசாலித்தனமாக இருக்கும்.”*

*“என்னடா சொல்லுதே?”*

*“பதறப் பதற உயிர்களைக் கவ்வுன இந்த நாயோட உயிருக்கு சட்டுன்னு வர்ற சாவு ஒரு தண்டனையில்லே... விடுதலைதான்.”*

*“ம்... அப்புறம்?”*

*“சாக வேண்டிய வயசுக்குப் பெறகும் சாவே வராம, உயிரைச் சுமந்து கிடந்து, அழுந்திச் சீரழியுறதுதான் அதுக்கான தண்டனை. ‘சாவு வராதா’ன்னு அதை ஏங்க வைக்கிற அவஸ்தைதான்... அதுக்கான தீர்ப்பு.”*

*அந்த வார்த்தைகளின் ஆழமும் அர்த்தமும் மற்ற இளவட்டங்களுக்குப் புரியவில்லை.*

*‘குட்டிகளை... கோழிகளை... எப்படிக் காப்பாத்துறது?’ குழப்பமும் திகைப்புமாகப் பார்த்தனர்.*

*நாலைந்து நாளில் —*

*துரட்டியால் வலதுபின்னங்கால் சீவப்பட்டு... முழக்கம் பால் எறிந்ததில் இடது பின்னங்காலும் ஊனப்பட்டு...*

*வெள்ளை நாய் நடக்கக்கூட முடியாமல்... முழு ஊனமாகி... உயிரே சுமையாகி... சுமையே உயிராகி...*

*சாவின் தூதனாக நினைக்கப்படுகிறது, நாய்.*

*இந்த நாய்க்கு மட்டும் சாவு வந்ததாக ரொம்ப மாதங்களாகத் தகவல் இல்லை.*

—ஓம்சக்தி ஜனவரி 2000

❊

# ஒரு மாலை பூத்து வரும்!

## 1

ஈஸ்வரன் பேயாக... நாயாக ஓடித் திரிகிறான், வடிவழகிக்கு ஒரு மாப்பிள்ளை தேடி. கிடைப்பதாகத் தோன்றவில்லை. விடுவதாகவும் இல்லை இவன்.

"இந்தா பாருங்க தம்பி… கெரகங்கெட்ட இந்தச் சிறுக்கிக்கு மாப்பிள்ளை பாக்க ஒங்களாலேயும் முடியாது… ஒங்களைப் படைச்சவனாலேயும் முடியாது. பேசாம ஆகுற சோலியைப் பாருங்க..." என்று சலிப்பும் எரிச்சலுமாக அலமேலு பொறி தெறிக்கப் பேசினாலும் கூட, இவன் விரக்தியடையவில்லை... தளர்வதாகவும் இல்லை.

கண்ணெல்லாம் கலங்கிப்போய்… அம்மாவின் தீமுகத்தைப் பார்த்த அவமானத் தகிப்பில் வெந்துருகிய சோகப் பதுமையாக குறாவிப்போன வடிவழகியின் முகம். இவனுக்குள் கருணையை ஊற்றெடுக்கச் செய்கிற பரிதாபத் தோற்றம். 'ஐயோ..' என்று மனசைப் பதறடிக்கிற வேதனைத் துடிப்பான கண்களின் ஈரம்.

அலமேலுவைச் சற்றே கண்டிப்பாக நோக்கினான். கெஞ்சலான குரலில் கசிந்தான்.

“அப்படியெல்லாம் அவளைப் பேசி நோகடிக்காதீக. பாவம்... அவள். அவளுக்குன்னு ஒருத்தன் இனிமேலா பொறந்து வரப்போறான்? இருப்பான்லே? தேடிக் கண்டுபுடிக்குற பொறுப்பு நம்மகிட்டதானே இருக்கு?”

ஈஸ்வரனைப் பார்த்தாள் அலமேலு. அவன் வாசலையொட்டிய திண்ணை விளிம்பில் உட்கார்ந்திருக் கிறான். கோதுமை நிற ஒடுங்கிய முகம். இளவட்ட வயசு. இருபத்தேழு இருக்குமா?

ஆனால், முகத்தில் ஒரு பெரிய மனிதத் தோரணை. விடலைத்தனச் சாயல் துளியும் இல்லாத முகபாவம்.

வயசுக்கு மீறிய நிதானம். ஏற்ற பொறுப்பை ஈடேற்ற வேண்டுமே என்கிற அக்கறைத் தீவிரம். மனிதநேயத்தில் வேர் பதித்து வளர்கிற பொறுப்பு உணர்வு.

இந்தப் பட்டிக்காட்டில் ஈஸ்வரன் ஓர் அதிசயப் பிள்ளையாண்டான். எழுபது வயதுக்கிழடுகள் கூட இளசு களைக் கண்ணில் எச்சில் வடிய விரட்டித் திரிகிற காலத்தில்... ஈஸ்வரன் ஓர் அபூர்வம். நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நாலு பெண்கள் பின்னால் திரிவதற்கு நியாயமுள்ள வயது.

ஆனால்... அவன் பெண் வாசமே அறியாதவன். ‘முறைகாரப் பெண்கள்’ கேலி கிண்டல் பண்ணி, வாய் வம்புக்கு இழுத்தால்கூட, அசட்டுச் சிரிப்போடு... கூச்சப் புன்னகையோடு நழுவிச் சென்றுவிடுவான்.

கார்த்திகைத் திருவிழா நாளில் யாரும் யார் தலையிலும் ஒட்டுப் புல்லைத் தேய்க்கலாம். தேய்ப்பார்கள். கிழடு

கட்டைகள்கூட தெருக்காடுகளில் விரட்டி விரட்டி பதிலுக்குத் தேய்ப்பார்கள்.

ஈஸ்வரன் தலையில் மட்டும் யாரும் தேய்க்கமாட்டார்கள். தேய்க்க நினைக்கவும் மாட்டார்கள். மரியாதையான தூரத்தில் இந்த இளவட்டத்தைத் தூக்கி வைத்திருக்கிறது இந்த ஊர்.

இவனது சைக்கிள் கேரியரில் உட்கார்ந்து ஒரு குமரிப்பெண் தைரியமாகப் பயணம் செய்வாள். அவனிடம் கண்ணியக் குறைவு இருக்காது என்று ஊருக்குத் தெரியும். யாரும் தப்பாக நினைத்துவிட மாட்டார்கள்.

''ஈஸ்வரன் சபலப்பட்டான்... சில்மிஷம் செய்தான்... சின்னஞ்சிறுசுகளிடம் கோணச் சேட்டைகள் செய்தான்'' என்று இவனுக்கு ஆகாத எதிரிகூட எண்ணமாட்டான். நாக்கில் பல்லைப் போட்டுப் பேசிவிட மாட்டான்.

காவி கட்டாத சாமியார்தான் ஈஸ்வரன். நிஜச் சாமி யார்தனமுள்ள இளைஞன்.

அவனுக்கும் காடுகரைகள் உண்டு. பருத்தி போடுவான்; மிளகாய் நடுவான்; தண்ணீர் பாய்ச்சுவான்; பாத்தி கட்டுவான்; கம்பங் கதிர்களைக் களத்தில் போட்டு காவலுக்கு இருப்பான்.

காட்டுச் சோலிகள் பூராவும் மூச்சு விடுகிற மாதிரி ரொம்ப இயல்பு. அதோடு ஊர்ச் சோலிகள் நிறையச் செய்வான்.

'ரோடு போடு... பஸ் விடு' என்று மனு தயாரிப்பான். பொதுமக்களிடம் கையெழுத்து வாங்குவான். அதிகாரிகளைப் போய்ப் பார்ப்பான். வாதாடுவான்.

யாருக்காவது பிறப்புச் சான்றிதழ் வேண்டுமா? வருமானச் சான்றிதழ் வேண்டுமா? சாதிச் சான்றிதழ் வேண்டுமா? இவன்மூலமாகத்தான் சகலருக்கும் வந்து சேரும்.

அம்மா அய்யா இல்லை. தூரத்து உறவுப் பெரியம்மாதான் அடுப்பு வேலை. கஞ்சிக்கு உத்தரவாதம். மற்றபடி அவன்... ஒற்றைக்கட்டை. ஒற்றை என்று உணர்ந்ததே இல்லை. ஊரின் உருவம் என்ற உணர்வில் அவன் ததும்பியேயிருப்பான்.

அம்மா தவிர வேறு நாதியில்லாத வடிவழகிக்கு 'இன்னும் கல்யாணம் ஆகவில்லையே' என்ற சுரணை ஏற்பட்டதும், கருணையால் கசிந்துதவும்... மாப்பிள்ளை பார்க்க அலையத் துவங்கியதும் தனீ...க்கதை.

**அ**ன்றைக்கு ஒரு சுபமுகூர்த்த நாள். உள்ளூரிலேயே ஒரு கல்யாணம். பூமாரிக்குக் கல்யாணம். தாலி கட்டி முடிந்து... உற்றார் உறவினர் சுற்றம் சூழ... ஊர்க் கோயில்களுக்கு தேங்காய் உடைத்து சாமி கும்பிட்டு ஆசி பெற... தெருப் புழுதியில் நடைபோட்ட மண ஊர்வலம். இயல்புக்கு மாறான ஒளிமயத்தில் கிராமத்து ஆட்கள், நல்ல நல்ல வேட்டியும் சட்டையுமாக பளிச்சென்ற சேலைகளும் பூ அலங்கரிப்புமாக ஆண்களும் பெண்களும் ஜொலித்தனர். சிரிப்பும் கும்மாளமுமாக—கேலி கிண்டலும், நையாண்டிக் குதூ கலிப்புமாக—ஊர்வல ஜனம். புதுப்பெண்ணைப் பார்க்கிற ஆவலில் சந்துபொந்துகளில் கூடி நின்று பார்க்கிற பிற சாதிப் பெண்கள்.

ஜனத்தோடு ஜனமாக ஈஸ்வரனும், பாலியஸ்டர் வேட்டியின் பளீர் நீலமும், வெள்ளைச் சட்டையின் ஜ்வலிப்புமாக ஜெகஜ்ஜோதியாக இருந்தான். சமவயதிலான நண்பன் மூர்த்தியுடன் சகஜமான சூடான விவாதத்தில் ஈடுபட்டபடி நடந்தான்.

இன்றைக்கு வாழ்க்கைப்பட்ட பூமாரிக்கு வயது பதினைந்துதான். திரேக வளர்ச்சியில்கூட சிறுமிதான். ஒரு குமரிப் பெண்ணுக்குரிய வாளிப்போ... வளைவு நெளிவான செழிப்போ இல்லாத சின்னப்பிள்ளை. பச்சை நிறப்

பட்டுச்சேலையைச் சுற்றி வைத்து... கனத்த பூமாலைகளும் மாட்டி மாப்பிள்ளையோடு பூமாரி சேர்ந்து நடப்பதைப் பார்த்தால்... மரப்பாச்சி பொம்மை நடக்கிறமாதிரிதான் இருக்கிறது.

ஈஸ்வரனுக்குக் கடுப்பாக இருக்கிறது. அந்தச் சிறுமியைப் பார்த்துப் பார்த்து மனம் வெதும்பினான். பரிதாபப்பட்டான். அதுகுறித்த ஆத்திரத்துடன்தான் காரசாரமாகப் பேசினான்.

"இந்தமாதிரி சின்னஞ்சிறு புள்ளைகளுக்கெல்லாம் கல்யாணம் மூய்க்கிறது சட்டப்படி குத்தம். இந்தப் புள்ளைக்கும் இது ஒரு நரகமாகத்தான் அமையும்."

"என்ன செய்ய? சொந்தத்துலே இருக்குற மாப்பிள்ளை நழுவிப் போயிடக்கூடாதேன்னு பதறிப் பதறி அவசரமாகத் தேதி குறிச்சிருக்காங்க."

"அதுக்காக இப்படியா? கொடுமை... தாம்பத்யம்னா என்னன்னே தெரியாத வயசு. கெடந்து மிரளும். அப்பவும் அடுத்த வருஷத்துல கையிலே கொழந்தை இருக்கும். ரெண்டு கொழந்தைங்க பொறந்து... நாலஞ்சு வருஷம் ஆனபிறகு... தாம்பத்யம்னா என்னன்னு புரிஞ்சு... அதுக்கு ஒடம்பும் மனமும் பக்குவப்பட்டு கனியறப்ப... புருஷன் தளர்ந்து போயிருப்பான்."

"அதுவும் நெசந்தான்..."

"பாவம்... அந்தப் பொண்ணு பூமாரி. நரகத்தீயிலே வுழுந்த ஊமைப்பொண்ணா கெடந்து துடிக்கும்..."

"அதுசரி... நாம விசாரப்பட்டு ஆகப்போறதுதான் என்னது? உப்பாகுமா, புளியாகுமா? பெத்தவுகளுக்கு இல்லாத அக்கறையா, நமக்கு?"

"பொண்ணை ஒரு சொமையா மட்டுமே நெனைக்காக. புள்ளையா நெனைக்குறதுல்லே. சொமையை ஆத்திர

அவசரமா எறக்கி வெச்சுட்டு, நிம்மதியை உணர்ற மகாப்பெரிய அறியாமை இது. அக்கறையைவிட, அறியாமைதான் ஜாஸ்தி.”

“சரி... விடு. வந்தமா... உண்டோமா... மொய் செய்ஞ் சோமா... நாலு பேரைப் பாத்தோம்னு நாம போய்க் கிட்டேயிருப்போம். இதையெல்லாம் நாம பேசி என்னாகப் போகுது?” மூர்த்தியின் சமாதானச் சொற்கள், ஈஸ்வரனின் மனவெக்கையைத் தணிக்கவில்லை.

கலகலப்பும் சிரிப்பும் கூத்துமாக ஊர்வலம். ஏறுவெயிலைப் பொருட்படுத்தாத குதூகலப் பெருவெள்ளம். பிள்ளையார் கோயிலில் தேங்காய் உடைத்து, சாமி கும்பிட்டுவிட்டு... தம்பதி மூன்று முறை நெடுஞ்சாண்கிடையாக விழுந்து எழுந்து... திருநீறு வாங்கிப் பூசிக்கொண்டு திரும்ப—

நார்ப்பெட்டியில் வைத்து வெத்தலை பாக்குச் செலவு செய்து வருகிற நடுவயதுக்காரர், தெருவோரம் நிற்கிற பெண்கள், பெரிசுகள், சிறிசுகள் சகலருக்கும் வெத்தலைச் சுருள்.

காரசாரமான உள்மனக் கொதிப்போடு பேசிக்கொண்டு மூர்த்தியுடன் சேர்ந்து வந்த ஈஸ்வரன். சுற்றி நிலவும் சந்தோஷத்துக்குச் சம்பந்தமில்லாத கோபம் கோபமாக... அவன்.

அப்போதுதான்—

அவன் கண்ணில் அது பட்டது.

நண்பனுடன் பேசிக்கொண்டே... இடது பக்கம் தலை நிமிர்ந்து ஏறிட்டுப் பார்த்தபோது—

பார்வையில் பட்ட அந்த உணர்வு.

புதுப்பெண் ஊர்வலத்தை வேடிக்கை பார்க்கிற ஆவல் பெருக்கோடு தெருவில்... சந்துகளில்... வீட்டுக் கூரை நிழல்களில் நின்று பார்க்கிற கிராமத்துப் பெண்கள்...

ஈஸ்வரன் பார்வையில்—

சற்றே ஒதுங்கியிருந்த அந்தக் கூரை வீட்டின் சிறிய சன்னலின் மூலையில்—

ஒற்றை முகம். சன்னலில் பூத்த ஒரு பூவைப் போன்ற முகம். நெற்றியின் ஒளி. பொட்டு. நாசி நுனிக் கூர்மை அடி உதடும் மேல் உதடும் ஆவலில் சற்றே விலகி பளிச்சிடுகிற பல்வெண்மை. அழகின் மின்னல். ஒளியின் துள்ளல். உணர்வின் ஒளிர்வு.

கண்ணில் மட்டும் கனத்து நின்ற வித்தியாசமான சோகம். கீழிமைகளின் மடியில் கனத்து நின்ற நீர்மின்னல். இனம் புரியாத ஏக்கத்தின் நிழல். நாதியற்ற மனசின் வெறுமையைச் சுமந்து நின்ற அந்த நீர்த்துளிகள்.

ஆழ்மனசின் வேரில் பின்னிக்கொண்ட அந்தக் கணம்.

ஈஸ்வரன் பார்வையை நிறுத்தியகணம்... மனசை நிறுத்திய கணம்... நினைவின் சலனத்தையே நிறுத்திய கணம்.

'அது யாரு வீடு? அலமேலு அத்தை வீடு இல்லே? அப்ப... அது வடிவழகியா? அவள் சடங்காகி எத்தனை வருஷமிருக்கும்? பத்து வருஷமிருக்குமா? அவளுக்கு மட்டும் இன்னும் கல்யாணமாகவில்லையே... ஒரு மாலை பூத்து வரலியே... இப்படி போற வர்ற கல்யாண ஊர்வலங்களையே பார்த்துக்கிட்டிருக்கற அவளுக்குள்ளே... எம்புட்டு ஏக்கம் இருக்கும்? அவள் காலடியிலே விளையாடிய சின்னஞ்சிறிசுகளெல்லாம் பட்டுச் சேலை கட்டி, பக்கத்துணையோடு நடக்கறப்ப... அவளுக்குள்ளே என்ன நெனைப்பு வரும்? 'நாதியத்த ஏழைக்கு யாரு இருக்காக'ங்குற வேதனைதானே இருக்கும்...?

ஒரு கணத்தில் உறைந்த மனசுக்குள் நின்று துடித்த நினைவு. இயல்பான மனிதநேய மனசுக்காரனிடம்

ஊற்றெடுத்த கருணைப் பெருக்கு. 'ஐயோ...' என்று கதறிக் கசிகிற நினைவு. மலட்டுக் கருணையாக அல்லாமல், 'ஏதாச்சும் செய்தாகணுமே' என்கிற செயலாக வடிவம் கொள்கிற உயிர்க்கருணை. உயிர்ப்பான கருணை.

சட்டென்று மௌனமாகிவிட்ட இவனது சலனமின் மையால் சலனமுற்ற மூர்த்தி ஏறிட்டுப் பார்க்கிறான். "என்னடா" என்கிறான்.

"ஒண்ணுமில்லே" என்ற முணுமுணுப்போடு பார்வை கலைகிற ஈஸ்வரன். மனசின் கனம் பாரமாகக் கிடந்து அழுத்துகிற நினைவுச்சுமை.

'இந்தச் சோகத்தை இத்தனை காலமாக உணரா மலிருந்துவிட்டோமே' என்கிற சுயவிமரிசனம். திடீரென்று கண்டுணர்ந்து சுரணை பெற்ற மனசு.

சரி... எப்படி உதவலாம்? மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் முடிக்கிறது சாதாரணமா? நம்மாலே முடியுமா? நம்ம வயசு? வீட்லே போய் நின்னு... 'உங்க மகளுக்குப் பொண்ணு பாக்கட்டா'ன்னு ஓர் இளவட்டப்பய சொன்னா... அது பொருத்தமாயிருக்குமா? ஒப்புக்கிருவாகளா? வேறு ஏதாச்சும் தப்பா நெனைச்சுட்டா?

ஈஸ்வரனுக்குள் அங்கிட்டும் இங்கிட்டுமாக ஓடிச் சாடுகிற நினைவுகள்... நிலையற்ற நினைவுப் பாய்ச்சல்... சஞ்சலப்படுகிற மனசு... தடுமாறித் தத்தளிக்கிற நினைவு.

தயக்கமும் பயமுமாக காலைக் கட்டிப் போடுகிற சமூகச் சூழல். அதை மீறிப் போராடத் தூண்டுகிற மனிதநேய உணர்வு.

பத்து நாட்கள் சலனத்திலும் சஞ்சலத்திலுமாக நகர்ந்த நாட்கள். 'என்னானாலும் சரி... நல்லதை நெனைக்குற மனசு. நல்லதை நடத்த நெனைக்குற உணர்வு. எனக்கு எம்மேலே நம்பிக்கையிருக்குறப்ப... யாருக்கு நான் பயப்படணும்?

என்னத்துக்காகத் தயங்கணும்...? நாதியத்தவுகளுக்கு ஆதரவா நிக்குறதுக்கு எதுக்கு நடுங்கணும்?'

## 2

அன்றைக்குச் சாயங்காலம். அந்திவெயில் தங்கநிறமாக மண்சுவர்களில் படர்கிறது. செடிகளில்—செடியின் பூக்களில் தங்க வெயில் உரசுகிறபோது, ஒரு பேரழகு மின்னலாக வெட்டுகிறது.

அலமேலு வீட்டு வாசல்படியில் ஈஸ்வரன்.

"என்ன தம்பி?" என்ற அலமேலு. முந்திச் சேலையை இழுத்து இரு தோள்களையும் போர்த்திக்கொண்ட மரியாதை.

"சும்மாதான்" வாசலை ஒட்டிய திண்ணையின் விளிம்பில் உட்கார்ந்தான்.

"இந்தாங்க தம்பி... மோரு குடிங்க..."

வடிவழகி கொண்டுவந்த டம்ளரை வாங்கி நீட்டிய அலமேலு.

எப்படி ஆரம்பிக்க? எங்கே துவக்க? என்னத்தைச் சொல்ல? ஒரே திகைப்பு. மூச்சு முட்டல்.

'இப்புடி இப்படியெல்லாம் பேசணும்' என்று போட்டு வந்திருந்த கணக்கு எல்லாம் மாயமாயிற்று. வார்த்தைகள் யாவும் தீர்ந்துபோன மாதிரியோர் வெறுமை. நாவில் வார்த்தையேயில்லை. இருந்த எச்சிலும்கூட உலர்ந்து மாய மாயிற்று.

உள்ளறை வாசலில் குறுகுறுத்த ஆவல் பார்வையோடு நிற்கிற வடிவழகி. ஈஸ்வரன் சுவரைப் பார்த்தான். கூரை முகட்டைப் பார்த்தான். நாலா திசைகளையும் பார்த்தான். அலமேலுவை மட்டும் பார்க்கவில்லை. பார்க்கிற மனத்திட மில்லை. திடத்தைத் தின்று தீர்த்திருந்த தயக்கம்.

திண்ணையின் கோடியில் உட்கார்ந்து இருந்த அலமேலு, அலைபாய்கிற மனதோடும் கண்ணோடும் தடுமாறித் தத்தளிக்கிற ஈஸ்வரனைக் கனிவோடு பார்த்தாள்.

"என்ன தம்பி...?"

"இன்னும் கொஞ்சம் தண்ணி குடு வடிவு" என்று வடிவைப் பார்த்தான். மோர் குடித்த வாசம் இன்னும் மறையவில்லை. ஆனால், நா உலர்வு. அவள் கையில் கறுப்பு வளையல். நீட்டுகிற கைப்பெருவிரலில் ஒரு மச்சம்.

ரொம்பக் காலத் தாகம்போல டம்ளரை வாங்கி 'மடக் மடக்'கென்று குடித்தான் தண்ணீரை. அதன் குளிர்ச்சி நெஞ்சுக்குள் பரவிப் படர... அதில் வந்த குருட்டுத் தைரியம்.

"ஒண்ணுமில்லே... வடிவுக்குக் கல்யாணம் கில்யாணம் பண்ணலியா?"

ஹ...ப்பா! எப்படியோ கேட்டுவிட்டான். 'கேட்ட கேள்வி அங்கு என்னவாகிறது' என்பதைக் கவனிப்பவன் போல இருவரையும் பதைப்புடன் பார்த்தான். மனசுக்குள் அச்ச வியர்வை. பயப் படபடப்பு.

வந்து மோதிய கேள்வி. கேட்டவனின் வயது. கேள்வியின் உள்நோக்கம்... எல்லாமே விகாரமாக நினைக்க வைத்தாலும், அலமேலு... சற்றுத் தயங்கினாள்.

.'இவன் அப்படிப்பட்டவன் இல்லையே..., நல்ல பையனாயிற்றே' என்ற மதிப்பீட்டில் எழுந்த தயக்கம்.

கேள்விக்குப் பின்னால் அவன் திட்டம் எதுவாக இருக்கும் என்ற யோசனையோடு அவனை உற்றுப் பார்த்தாள். அவனது கண்ணுக்குள் ஊடுருவி, மனசைத் துழாவுகிற கூரிய பார்வை. முகம் தெரியாத ஆயாசம். காரணமற்ற சலிப்பு. ஒண்ணும் பிடிபடாத திகைப்பு.

"ம்ள்ச்சூ... கல்யாணம் ஒண்ணுதான் பாக்கி. இனிமே அதையும் பண்ணிர வேண்டியதுதான்..."

கோபத்தை உள்ளடக்கிய கொடிய கிண்டலா? சோகத்தை உள்ளடக்கிய விரக்தியா?

அலமேலுவின் விட்டேற்றியான பதில், அவனுள் பரிகாச முட்களைக் குத்தியது. இவனது அக்கறையையோ— வார்த்தை களையோ — ஒரு பொருட்டாகவே மதிக்காத அலட்சியம், சட்டென்று அறைந்தது. இவனுக்குள் 'சுர்ள்'ரென்று வந்தது.

"என்ன அப்படிச் சொல்லிட்டீக?"

"வேற எப்படிச் சொல்ல?"

"இந்த மாதிரி விஷயத்துல தலையிடுறதுக்கு... பேசறதுக்கு... வயசுல மூத்த பெரியாளுகதான் லாயக்கு. ஆனா... பெரியாளுக யாருக்கும் மனசு இல்லே. எனக்கு வயசு பத்தாது. மனசு இருக்கு..."

"என்ன மனசு...?"

"எப்படியாச்சும் வடிவுக்கு ஒரு கல்யாணம் காட்சி ஏற்பாடு செய்யுற காரியத்துல ஒத்தாசையா இருக்கணும்ங்கிற மனசு."

பரவசமும் நன்றிப் பெருக்குமாக மகிழ வேண்டிய அலமேலு முகத்தில், உயிர் வற்றிப்போன வெறுமை இனம் புரிந்த ஏமாற்ற உணர்வு. முகம் தெரிந்த ஆயாசம்.

விரக்தியான பெருமூச்சு.

"எப்படி ஒத்தாசையாயிருப்பீக?"

வேண்டா வெறுப்பான கேள்வி. உயிரற்ற எதிரொலி.

"ஒரு மாப்புள்ளை பாத்துத் தரமுடியும், என்னாலே..."

"இதைச் சொல்லத்தானா, இம்புட்டுத் தூரம் வந்தீக? நல்ல கூத்து!"

பரிகாசமான இந்தச் சொற்களுக்குள் இருந்து காயம்பட்ட மனசின் ரத்தக்கசிவான சோகம்தான் வழிந்தது.

அவளது உயிரற்ற வார்த்தைகளும், சலிப்பும் வேதனை யுமான எதிரொலிப்பும் இவனுக்குப் புரியவே இல்லை. குழப்பமாக இருந்தது. இவனுக்குள் நோகடிக்கப்பட்ட மாதிரியோர் வலி.

'உதவி செய்ய வந்தோமா... உதவி கேட்டு நச்சரிக்கிறோமா...?' நினைவுக்குள் இப்படியொரு திகைப்பு. இந்த மருட்சியோடு பரிதாபகரமாக அபயம் தேடி வடிவழகியைப் பார்த்தான்.

அவளது மெலிதான சிரிப்பு. 'ஐயோ பாவம்' என்று அனுதாபப்படுகிற தொனியிலான சிரிப்பு. அவளது உருண்ட முகம். களையான முகத்தின் அழகு. வடிவழகான திரேக வாளிப்பு.

இவன் ரசிக்கிறானா... மருகித் தவிக்கிறானா?

'நல்ல கூத்து...' அலமேலுவின் விளாசலான வார்த்தை.

ஈஸ்வரனுக்குள் தவிப்பு. ஏதோ ஒரு வம்பான வலைக்குள் வந்து மாட்டிக்கொண்ட அவஸ்தை.

கடினமான கணம். நெருக்கடியான நிமிசம். ஏமாற்றத்தை விழுங்குகிற அலமேலு. சிக்கலின் பிடியில் சிக்கிக்கொண்ட இவனது உளைச்சல்.

மனசைக் கனக்க வைத்த கணம். மீளமுடியாத பாரத்தின் அடியில் அழுத்தப்படுகிற ரணமான கணம்.

ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள், அலமேலு. நினைவு றெக்கையை கழற்றி வைத்துவிட்டு, நிஜத்தரையில் கால் பதிக்கிற ரணத்தைச் சுமந்துவந்த பெருமூச்சு. உண்மையின் கசப்பை ஒப்புக்கொண்ட வேதனை, கண்ணின் துடிப்பில் தெரிந்தது. வேண்டாவெறுப்பான தொனியில் உப்புச்சப்பற்ற குரலில், அலமேலு.

“தம்பி... என்னாலே எம்புள்ளைக்குப் பத்துப் பவுனு நகை போட்டுரலாம். கல்யாணச் செலவுக்கு நாலாயிரம் ரூவா தந்துரலாம். இம்புட்டுத்தான் எங்க சத்து...”

“அப்ப சரி... நா வாரேன். முடிஞ்ச அளவுக்கு மல்லுக் கட்டிப் பாக்குறேன்.”

வீட்டை விட்டு வெளியேறி... முற்றத்தைத் தாண்டி தெருப்புழுதியில் பாதம் பட்டபிறகுதான்... ஈஸ்வரன் இயல்பானான். மூச்சுமுட்டல் தணிந்து... சீராகச் சுவாசிக்க முடிந்தது.

அந்தி வெயிலும் மறைந்து, தவிட்டு நிறத்து வெளிச்சம் மிச்சமாக இருந்தது. சீரான காற்றின் மெல்லிறகுகள் இவனது மனப்புழுக்கத்தை வருடியது. இந்தச் சுகப் புல்லரிப்பே, இந்நேர வரைக்குமான சுமையை உணர்த்தியது.

‘என்னத்துக்காக இம்புட்டு விட்டேத்தியாப் பேசுறாக? வலிய வந்து ஒத்தாசை பண்ண வந்தவனை எதுக்காகப் பரிகாசம் பண்ணணும்?’

அவனுக்குள் மர்மமான திகைப்பு. அலைக்கழிந்து அயர வைக்கிற சோர்வு. அயற்சி. தீராக் குழப்பத் திணறல்.

'ச்சேய்...! யாரு எக்கேடு கெட்டு நாசமாய்ப் போனா... நமக்கென்ன? முத்தம் குடுக்கற உதட்டுலே காறித்துப்புற இவுக, நாதியத்துக் கிடந்தா... எனக்கென்ன? நாறிக் கிடந்தா எனக் கென்ன? நமக்கென்னத்துக்கு இந்த வீண்வம்பான காரியம்? வேண்டாம்... இத்தோட தலை முழுகிட வேண்டியதுதான்'.

சோர்வில் நனைந்து துவண்ட மனசின் சலிப்பான நினைவுகள். வாலைச் சுருட்டி பின்வாங்குகிற கோழை நினைவுகள். சூழலின் வெக்கைக்குப் பயந்து தலையை உள்ளிழுக்கிற ஆமைத்தனம்.

ஈஸ்வரனுக்குள் அந்த ஒற்றை முகம். உருண்ட முகம். ஜன்னலின் மூலையில் பூத்திருந்த பூ முகம். ஏக்கத்தையும் ஈரமின்னலையும் சுமந்திருந்த அந்தக் கண்கள். அதில் புதைந்து கிடந்த கற்றைச் சோகம்.

மனசுக்குள் சிற்பமாகிவிட்ட அந்தக் காட்சி. ஜன்னல் மூலைப் பூவின் நீர்த்துளி.

நினைத்த கணத்தில் நெக்குருகிப் போகிற இவனது உள்மனசு.

வந்து கவிந்த சோர்வை உதறி எறிந்தான். மனசின் ஈரக்கசிவில் மலர்ந்த தைரியம். கருணையின் வீரமுகம். தன்னலமற்ற நல்லுணர்வின் வைராக்கியம்.

தலைநிமிர்ந்து ஈஸ்வரன் தெருவில் நடந்தான், மனஉறுதியோடு. ஒரு போரை எதிர்கொள்கிற ஆன்ம பலத்தோடு.

# 3

சரியாக இன்னும் விடியவில்லை. அவசர அவசரமாக எழுந்தான் ஈஸ்வரன். முகத்தைக் கழுவித் துடைத்துவிட்டு, அரைச்செம்பு தண்ணீரை வெறும் வயிற்றில் குடித்தான்.

டீக்கடை நோக்கி நடந்தான். மனசுக்குள் தொம்பக் குளத்துப் பையன். நல்ல பையன். வடிவழகிக்கு எல்லா வகையிலும் பொருத்தம். தெருவில் நடந்துபோனால், ஜோடிப் பொருத்தம் பார்த்து தெருவே பிரமிக்கும்.

பாதுகாப்பான குடும்பம். காலாகாலத்துக்கும் மதிப்பும் மகிழ்ச்சியும் தரக்கூடிய நல்ல குடும்பம்.

டீக்கடை காலை நேரத்தில் கலகலத்தது. ஏகப்பட்ட ஆட்கள். உட்கார இடம் இல்லாமல், ஒருவருக்கொருவர் சொருகிக் கிடந்தனர்.

“ஒரு டீ போடப்பா” என்று சத்தம் கொடுத்துவிட்டு இவனும் ஒரு மூலையின் இடுக்கில் சொருகிக்கொண்டான்.

கடன் தொல்லை தாளாமல் தற்கொலை செய்துகொண்ட ஆந்திரத்துப் பருத்தி விவசாயிகளைப் பற்றிய நாளிதழ் செய்தியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

கட்டுப்படியாகாமல் போய்க்கொண்டிருக்கிற சம்சாரித் தனம் பற்றிய பேச்சு. ஒரே சத்த இரைச்சல்.

“எங்கேயோ மருந்தைக் குடிச்சுச் செத்த சம்சாரிகளைப் பத்தி பேசுதீக... போனவாரம் நம்ம கூம்பாறையிலே ஒரு இளவட்டப் பையன் மருந்தைக் குடிச்சு மாண்டுட்டான்லே?”

"காதல் 'கசா, மூசா' வா இருக்குமப்பா..."

"இல்லேய்யா. அன்னிக்கு நாம திருவேங்கடத்துலே ஒரு டீ கடையிலே 'பருத்திச் செடிக்கு என்ன மருந்து அடிக்க லாம்'னு விசாரிச்சுக்கிட்டிருந்த பையனை ஓங்கிட்டே காட்டுனேன் இல்லே?"

"ஆமா... 'அய்யாவுக்கு வெள்ளாமை வெளச்சல் எடுக்கத் தெரியாததாலேதான் கடனாய்ப் போச்சு'ன்னு கொறை சொல்லி... வெவசாயப் பொறுப்பை ஏத்துச் செய்ற பையன்னு சொன்னியே..."

"அவனேதான். அவன் செய்ஞ்ச மூணு வருச வெள்ளா மையிலே வெளைஞ்சது பூராவும், கடன்தான். வீராப்புலே பேசுன பையன், அய்யாமுன்னே தோத்துப் போனதை ஒப்புக்கமாட்டாம... பூச்சி மருந்தைக் குடிச்சு, உசுரை மாய்ச்சிக்கிட்டான்..."

"அடப் பாவமே... மண்ணை நம்பிப் பாடு படுறவன் தலையெழுத்து, கோண எழுத்தாகிப் போச்சே..."

"ஆமா... அவன் வாங்கப் போற பண்டமெல்லாம் ஆகாச வெலைவாசி, வெளைய வைக்கிற பண்டமெல்லாம் கால்லே ஒட்டுன தூசி மாதிரி. பெறகு... கோண எழுத்துதான் தலையிலே குடியிருக்கும்."

சுற்றி நடக்கிற உரையாடல்கள், காரசாரமான விவாதப்-பரிவர்த்தனைகள். ஈஸ்வரன் மனசை எதுவும் தீண்டவில்லை. அவன் மனசு பூராவும் ஒரே குறியில் குவிமையமாகி இருந்தது.

தொம்பக்குளத்துப் பையன்.

நாலைந்து நாளாக இதே குறியில்தான் அலைச்சல். பார்க்க வேண்டிய ஆட்களைப் பார்த்து... பேச வேண்டிய

*ஆட்களிடம் பேசி... ஊர் ஊராக அலைந்து... வேட்டை நாயாக ஓடி இளைத்து...*

*மிகப்பெரிய சாதனையை சாதிக்கப் போகிற பெருமிதம். வெற்றி, கைக்கு மிகவும் நெருங்கி வந்துவிட்டது.*

*"ஒரு கல்யாணத்தை ஏற்பாடு பண்ணி நடத்திப் பாக்குறதுன்னா, சும்மாவா? ஒரு சமஸ்தானத்தையே உண்டாக்குற மாதிரியில்லே? அப்பேர்ப்பட்ட காரியத்தை ஒரு வில்லங்கமில்லாம, ஒரு இளவட்டப் பய செய்ஞ்சுட்டான்ங் குறது... நெசமாவே பெரிய விஷயமப்பா..." என்று ஊரின் மிகப் பெரிய மனிதர்கள் ஆச்சரியப் பிரமிப்போடு பேசிக் கொள்கிற மாதிரியோர் மனக்காட்சி அவனுக்குள். நினைக்கும் போதே மனசின் எல்லா நினைவுகளும் காலரைத் தூக்கி விட்டுக் கொள்கின்றன.*

*புஞ்சைக் காட்டைச் சுற்றிப் பார்த்தான், ஈஸ்வரன். கம்பப் பயிர் முழங்கால் உயரத்துக்கு இருந்தது. சாம்பல் நிறப் பசுமையோடு தலையாட்டிய பயிர்கள். வரப்புகளில் கிழடு தட்டிப்போன அகத்திகள்.*

*ஓடைக்குப் போய்விட்டு, காடு கரையைப் பார்த்துவிட்டு, ஊருக்குள் நுழைகிறபோது, ஏறு வெயில் சுள்ளென்று சுட்டது.*

*நேராக வடிவழகி வீட்டுக்குத்தான் போய்ச் சேர்ந்தான். தொழுவத்தில் கிடந்த பசுமாட்டுக்கு புல்லையள்ளிப் போட்டுவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள், வடிவு.*

*அலமேலு களைசுரண்டியும் தூக்குச்சட்டியுமாக காட்டு வேலைக்குப் புறப்படுகிற பரபரப்பில்...*

*இவன் வந்து சேர்ந்தான்.*

*"என்ன தம்பி...?"*

"ஒரு நல்ல இடம் கெடைச்சுருக்கு."

"என்னது... மாப்புள்ளையா? மொதல்லே திண்ணையிலே உக்காருங்க..."

"ஆமா..."

"எந்த ஊரு?"

தூக்குச்சட்டியையும் களைசுரண்டியையும் வாசல்படியில் வைத்துவிட்டு, அவளும் திண்ணையின் மறுகோடியில் உட்கார்ந்தாள். வடிவழகி உள்ளறை வாசலில் நின்றாள். தாயும் மகளும் மௌனமாகப் பார்த்துக் கொண்டனர். அர்த்த அடர்த்திமிக்க பார்வைப் பரிமாற்றம். மௌன மொழி. இவனுக்குப் புரியாத மொழி.

"ம்... சொல்லுங்க தம்பி..."

"தொம்பக்குளம். பக்கத்து ஊருதான்."

"ம்... அப்படியா? நம்ம தொம்பக்குளமா?"

"ம்... பையன் ரொம்ப நல்ல பையன். நல்ல செவப்பு. பத்து வரைக்கும் படிச்சிருக்கான். நல்ல லட்சணமான பையன்..."

மறுபடியும் மகளைப் பார்த்த அலமேலு. பார்வையில் ஏதோ உணர்வுப் பரிமாறல்.

"எங்க நெலவரத்தைச் சொல்லிட்டீங்களா?"

"அதுக்கு அவுக ஒப்புக்கிட்டாக... 'நகை போதும்'னு சொல்லிட்டாக."

"மாப்புள்ளைப் பையன் என்ன செய்றாக?"

"வெவசாயம்தான். நெறையக் காடு கரைக. மாடு கன்னுக. வீடு நெறையச் செழிப்பு. ஒரே பையன்தான்.

நல்ல கொணம். பொறுப்பான பையன். வெவசாயம் பூராவும் அவன் பொறுப்புலேதான் நடக்குது."

அலமேலு விருட்டென்று எழுந்துவிட்டாள். வடிவழகி சட்டென உள்ளே மறைந்துவிட்டாள். ஈஸ்வரன் அதிர்ந்து போனான். நன்றிப் பெருக்கையும் பரவசத்தையும் எதிர் பார்த்து வந்தவனுக்கு, இந்தத் துல்லியமான மறுப்பு... முகத்திலறைந்த மாதிரியிருந்தது. உள்ளுக்குள் பல்லைக் கடித்துச் சமாளித்துக் கொண்டான்.

"என்ன... எந்திச்சிட்டீக?"

அவமதிக்கப்பட்டு, புண்படுத்தப்பட்டவளைப்போல வெறுப்போடு பார்க்கிற அலமேலு.

"எந்திக்காம என்ன செய்ய?" வெடுக்கென்கிற அவள் தெறிப்பு.

"ஏன்?"

"ஏழைதான். நாங்க நாதியத்தவுகதான், ஆதரிக்க ஆளத்தவுகதான்... அதுக்காக எம்மகளை எங்கையாலேயே நரகத்தீயிலே புடிச்சுத் தள்ளிவிட முடியாது."

கொதித்த மனசின் கோபத் தகிப்பு, புலம்பல் வடிவத்தில் வெளிப்படுகிறது. ஈஸ்வரனுக்கு ஒன்றும் புரியாமல் குழம்பித் தவித்தான்.

"என்ன சொல்லுதீக?"

"பஸ் ஸ்டாண்டுலே மூடை தூக்கிப் பொழைக்கிறவனாக் கூட இருந்தால் போதும். ஆனா... எம் மகளை ஒரு சம்சாரி வீட்டுக்கு மட்டும் அனுப்பவே மாட்டேன், தம்பி... சம்சாரி வீடும் நரகமும் ஒண்ணுதான்."

"ஏன் அப்படிச் சொல்லுதீக? நாமளும் காடுகரை இருக்கிற சம்சாரிகதானே? மண்ணை மதிச்சு பாடுபடுற ஆளுகதானே?"

"அதனாலேதான் தெரியுது... 'சம்சாரி பொழைப்பு சாபம் பட்ட பொழைப்பு'ன்னு. மண்ணைக் கட்டி மாரடிச்சு, மாரடிச்சு மாய்ஞ்சது போதாதா? வாக்கப்பட்டுப் போற எடத்துலேயும் இந்த நார்ப்பறிஞ்ச நாறப் பொழப்புதானா?"

"பதறாம... நிதானமா யோசிச்சுப் பாருங்க."

"யோசிச்சுப் பாக்க ஒண்ணுமேயில்லே தம்பி... வெவசாயம் கட்டுபடியாகாத தொழிலு. எம்புட்டுப் பாடுபட்டாலும், கடன் தான் மிஞ்சும். 'வீட்லேயும் பாடு, காட்லேயும் பாடு' ன்னு சீரழிஞ்சதுதான், மிச்சம். அதை வுட்டுட்டு, வேற பேச்சைப் பேசுங்க தம்பி..."

வெலவெலத்துப் போனான் ஈஸ்வரன். இப்படியொரு வெளிப்படையான மறுப்பை அவன் எதிர்பார்க்கவேயில்லை. இது மறுப்பு மட்டுமா? மூர்க்கமான தாக்குதலும்கூட.

அலமேலு முகத்தைப் பார்த்தான், பரிதாபகரமாக.

சிடுசிடுப்பு. புண்படுத்தப்பட்ட மனசின் கொதிப்பு.

"ஏழையைக் கண்டா, மோழையும் (கொம்பில்லாத காளை) பாயும்ங்குறது சரியாய்ப் போச்சே... ஏதுமத்தவுக நாங்கங்குற தாலே... எதுக்கும் உட்படுவோம்னு நீங்களே கேவலமா நெனைச்சிட்டீகளே... தம்பி!"

வேதனைக்குழைவின் நைந்த குரலில் அலமேலு கோபக் கொதிப்பைக் கண்கலங்க வெளியிட்ட போது... ஒரு குற்ற உணர்வுக்கே ஆளாகிவிட்டான், ஈஸ்வரன்.

வெட்கமும் வேதனையுமாகத் தலைகுனிந்தான். அவமதிக்கப்பட்ட ஊமை வலியோடு சத்தமில்லாமல் வெளியேறிய போது —

'மண்ணை நம்பிப் பாடுபடுறவன் பாடு, இம்புட்டுக் கேவலமாகவா போச்சு? அடக்கொடுமையே... வெவசாயியை நம்பி யாருமே பொண்ணுகூடத் தரமாட்டாங்களா? உழுதுண்டு வாழ்றவன் இம்புட்டு இழிவாயிட்டானா?' என்ற வேறொரு சோக உணர்வு, அவனுக்குள் வதைத்துக் கொண்டிருந்தது.

டீக்கடையில் நிகழ்ந்த சர்ச்சைகள்... பத்திரிகைச் செய்தி... தற்கொலைச் செய்திகள்... யோசிப்புகள்...

ஈஸ்வரன் மனசுக்குள் உரசிய நினைவுகள். சிராய்ப்பு வருகிற அளவுக்கு உராய்ந்த அழுத்தம்.

'அலமேலு கொதிப்பு நியாயந்தானோ...' என்ற ரீதியில் ஓடுகிற நினைவு. நட்டத்தையும் துன்பத்தையும் தவிர வேறெதையும் விளைவிக்காத விவசாய நிஜம். இவனுக்குள் வருசா வருசம் அனுபவமாகிற உண்மைகள்.

'உழுதவன் கணக்குப் பார்த்தா... உழக்கு கூட மிஞ்சாது' என்பது பழைய சொலவடை. 'உழுதவன் கணக்குப் பார்த்தால்... நாக்கைப் புடுங்கிச் சாகணும்' என்பது இப்போதைய மண் விளைய வைத்திருக்கும் சொலவடை.

'அலமேலு அத்தை கொந்தளிக்குறதும் ஞாயந்தான். நானும் இதை யோசிச்சுப் பார்க்கலே. மாப்பிள்ளை கிடைத்தால் போதும் என்ற வேகத்தில்... இந்த யோசனை பிடிபடாமப் போயிருச்சு.'

சுயவிமரிசனமான நினைவுகள் அவனுள் அலைய... சமாதானம் அடைந்த மனநிலையில், வீட்டுக்கு நடந்தான்.

பொழுதுக்கால் ஏறிக்கொண்டிருக்க, ஏறுவெயில் சுள்ளென்று தகிக்க ஆரம்பித்துவிட்டது.

# 4

ஈஸ்வரன் மனம் ஒடிந்து போய்விடவுமில்லை. சோர்ந்துவிடவுமில்லை.

சாக்கடை வாய்க்கால் கோரி ஒன்றிய அலுவலகத்துக்குப் போய் பி.டி.ஓ வைச் சந்தித்துப் பேசப் புறப்படுகிறபோதும் மன ஓரத்தில் துடித்துக்கொண்டிருப்பாள், வடிவழகி.

ஏதேதோ பொதுச் சோலியாக — சொந்தச் சோலியாக ஊர்க்காடுகளில் சுற்றுகிற போதெல்லாம் அவன் மனசு தேடிக் கொண்டேயிருக்கும், வடிவழகிக்கான மாப்பிள்ளைகளை. விடாமல், ஓயாமல் அலைந்தான்.

இரண்டு, மூன்று மாப்பிள்ளைகள் வந்தனர். குடும்ப சகிதமாக வந்திருந்தனர். பார்த்தனர். உதட்டைப் பிதுக்கி விட்டுப் போய்விட்டனர். வரிசை வரிசையாகத் தோல்விகள். ஏமாற்றங்கள். வருத்தங்கள்.

எதுவும் தேறவில்லை. அப்பவும் சோர்ந்துபோய்விட வில்லை ஈஸ்வரன்.

அலமேலு அலுத்துப் போய்விட்டாள். வடிவழகி 'யோகங்கெட்டவள்' என்று கரித்துக் கொட்டினாள். 'தொட்டதெல்லாம் துலங்குறவன் கூட — வடிவழகி விஷயத்தில் தொட்டால் எதுவும் துலங்காது' என்றெல்லாம் வசைபாடத் தொடங்கி விட்டாள்.

"மூதேவி... கெரகங்கெட்ட நாயி... ஓம் மூஞ்சியிலே முழிச்சுட்டுப் போனா... ஆகுற காரியமும் ஆகாமப் போயிரும்" என்றெல்லாம் கோபம் கோபமாகச் சீறினாள்.

அரிவாள் வெட்டுக்களாக விழுந்த வார்த்தைகள்... மனசின் உள்நரம்புகளையே அறுத்தெறிகிற கத்திச்சொற்கள்.

வடிவழகி கண் கலங்குவதைப் பார்த்தால்...

ஈஸ்வரனுக்கு மனசு கலங்கிப் போகும். அவள் முகம் வாடி... கறுத்து... ஒளிமங்கி... கண்ணின் ஓரத்தில் நீர்த்துளி திரண்டு சிதறித் தெறிக்கிறபோது...

இவன் மனசே சிதறிப் போகும்.

வந்து வந்து தாக்கிவிட்டுப் போகிற தோல்விகளின் மூர்க்கத்தில்... ஈஸ்வரன் மனம் ஒடிந்துபோகா விட்டாலும், தளரத் துவங்கிவிட்டான்.

'ஆகுற காரியமாய்த் தெரியலியே' என்ற ஆயாசப் பெருமூச்சு, அடிக்கடி வருகிறது.

அறுபட்ட பல்லி வாலாகத் துடிக்கிற வடிவழகியின் கண்ணிமைகளை — உலர்ந்த உதடுகளில் படிந்துகிடந்த சோக உணர்ச்சியை — விசும்பலையும், விம்மல்களையும் அடக்க யத்தனிக்கிறபோது, உடம்பில் ஏற்படுகிற அதிர்வுகளை — நோக்குகிற போது பாவமாக இருக்கும், ஈஸ்வரனுக்கு. மனசு கிடந்து துடிக்கும். பொங்கிப் பிரவகிக்கிற இரக்க உணர்ச்சியில் துவண்ட மனசு நிமிரும்.

'ஏதாச்சும் செய்... விடாமல் மல்லுக்கட்டு... எடுத்த காரியத்தை முடிக்காமல் ஓயாதே' என்று சாட்டைக்குச்சி வைத்து அவனை உசுப்பும். விடாமல் துரத்தும். வைராக்கியம் பெறவைக்கும்.

தொடர்ந்து அவனை இயங்க வைக்கும்.

மூர்த்தியை தேடி அலைந்தான். டீக்கடையில்தான் இருந்தான். "என்ன ஈசு..."

"ஒன்னைத் தேடித்தான் ஊரெல்லாம் சுத்தித் திரியுதேன்."

"என்ன விஷயம்?"

"பருத்தி அடையணும்."

"எத்தனை தாட்டுகள் இருக்கும்?"

"மூணு தாட்டுகள்..."

"சரி... நீ வா..."

ஈஸ்வரன் வீட்டின் உள்ளறைக்குள் நுழைந்தவுடன், கண்ணில் அப்பிய இருட்டு. ஜன்னல் இல்லாத வீடு. கண்ணை மூடி மூடித் திறந்த பிறகு இருட்டு கண்ணுக்குப் பழகியது. பழகப்பழக இருட்டு கொஞ்சம் விலக... பருத்தி அம்பாரத்தின் ஈரவெக்கை நாசிக்குள் துளைத்தது.

மூலையில் சதுரமாகக் கிடந்த பருத்தியம்பாரம், இடுப்பு உயரத்துக்கு இருந்தது, வெள்ளைத் திண்ணை மாதிரி.

"நாம ரெண்டு பேரும் போதுமா? பருத்தியை அடைஞ் சிரலாமா?" என்று கேட்டான் மூர்த்தி.

"போதும்னுதான் நெனைக்கேன்..."

சதுர அகலமாக இருந்த தாட்டை விரித்து... விளிம்பு சுருட்டி... தரையில் படியவைத்து...

ஈஸ்வரன் பருத்தியம்பாரத்திலிருந்து உருவி உருவி தாட்டில் அள்ளிப் போட... தூசியும் வாசமுமாய் ஒரு புழுக்க நெடி.

மூன்று தாட்டு போதவில்லை. மிச்சம் இருந்ததை இரண்டு சாக்குகளில் திணித்து அடைத்தனர். கோணூசியும் சணலுமாக மூட்டித் தைத்து.. சதுர அகல உயரமாகக் கிடந்த பருத்தி மருகைகளில் இவனது பெயரை சுண்ணாம்பால் எழுதி...

உருட்டி வெளியே தள்ளினர்.

டக்கரில் தூக்கிவைக்கப்பட்டன மருகைகள். ஏற்கெனவே பாரமேற்றப்பட்டிருந்த பல வீட்டு மருகைகள். வரிசை வரிசையாக அடுக்கி... பாரக்கயிறு போட்டு ஆளும் பேருமாகக் கட்டி...

டக்கர் புறப்பட்டது. ஒரு தேர் ஆடியசைந்து நகர்வதைப் போலிருந்தது. ஒரு கோபுர நகர்வு.

ஈஸ்வரன் குளித்து முடித்துவிட்டு... துணிமணியை மாற்றிக்கொண்டு பருத்தி மார்க்கெட் பார்க்க ராசபாளையம் புறப்பட்டான்.

ராசபாளையத்தில் பருத்தி மார்க்கெட்டில்... பருத்தியைப் பணமாக்க வந்திருந்தபோதுதான்...

கிடைத்தான், அந்த மாப்பிள்ளை.

ஈஸ்வரனுக்கு ஒரு புதையலே கிடைத்த மாதிரியிருந்தது. மகிழ்ச்சியும் பரவசமுமாகத் திக்குமுக்காடினான்.

பெருமிதப் பூரிப்பில் புளகாங்கிதமடைந்தான்.

ஆசிரியராக வேலை கிடைத்து இரண்டு வருஷமாகிறது, அந்தப் பையனுக்கு. அலையன்ஸ் தேடிக்கொண்டிருந்தான்.

அந்தப் பையன் ரொம்பக் கஷ்டப்பட்ட பையன். வறுமையில் அடிபட்டவன். மாமா... அத்தை... சொந்த பந்தமெல்லாம் கண்டுகொள்ளாமல், புறக்கணித்த

அவமானத்தை உணர்ந்தவன். உறவுகளின் போலித்தனத்தில் அடிபட்டிருந்தான்.

ஆசிரியர் உத்தியோகம் கிடைத்தவுடன், ரொம்பக் காலமாக காணாமல் போயிருந்த மாமாக்கள், அத்தைகள் யாவரும் படையெடுத்து வந்து முற்றுகையிட்டனர். உறவை — உரிமையைச் சொல்லி நச்சரித்தனர்.

அந்தப் பையன் முருகேசனுக்குள் ஒரு முடிவு, வைராக்கியம்.

'கல்யாணம் பண்ணினால், சொந்தத்தில் பெண் எடுக்கவே கூடாது' என்ற தெளிவு.

வறண்ட குளத்தில் எட்டிப்பார்க்காமல், நீரும் மீனும் வந்த பிறகு மொய்க்கிற கொக்குக் கூட்டம். வெள்ளை நிறத்தில் இருண்ட மனக் கூட்டம்.

அவனுடைய அந்த முடிவு, ஈஸ்வரனுக்குப் பற்றிப் பிடித்துக் கவ்வி இழுக்க வசதியாக இருந்தது.

மார்க்கெட் வர இன்னும் கொஞ்சம் நேரமிருந்தது.

"வாங்க... ஒரு டீ சாப்பிட்டு வருவமா?"

"போகலாமே..."

உற்சாகமாகக் கிளம்பினான், முருகேசன். பஞ்சுமார்க்கெட் பரபரப்பாக இருந்தது. சாக்கு தைக்கிற கடைகளும் தாட்டு தைக்கிறவர்களும், லோடுமேன்களும், லாரி டிரைவர்களும் வேர்வைக்கசிவு மினுமினுக்க அலைந்தனர். எல்லோர் திரேகங்களிலும் சணல்தூசிகள் — அப்பியிருந்தன. தலைமுடி தெரியாமல் சணல் தூசிகள் கருந்திரேகங்கள் பூராவும் சணல் ரேகை.

வெள்ளைக் கதர்வேட்டியும் வெள்ளைத் கதர்ச் சட்டையுமாக வியாபாரிகள். செக்கச் செவேலென்று சிவந்த உடம்பு. நிழல் வாட்டம். கனிந்த சிவப்பு. பளிச்சென்ற முகங் களில், திருநீறுக் கீற்றும், குங்குமத் துளியும்...

பருத்தி விதை மூடைகள் எடைபோட்டு, அம்பாரம் போட்டுவிட்டு வந்த லோடுமேன்கள் டீ குடித்துக் கொண்டிருந்தனர். பஞ்சுத்துகள் வெள்ளத்தில் மூழ்கி எழுந்ததைப் போலிருந்தனர்.

" 'அமர்க்களம்' பாத்தீயா...? படம் ரொம்ப 'டாப்பா' இருக்கு."

"அஜீத் பிரமாதமா நடிச்சிருக்கானய்யா. 'கேட்டேன், கேட்டேன்...' பாட்டு அசத்தலாயிருக்கே, ஆமா... நீ 'இரணியன்' பாத்தீயா?"

"அது நம்மளைப் பத்துன படம். ரொம்ப மனசைத் தொடுது. எஸ்.ஸி. ஜனத்தை பாடாய்ப்படுத்தி கொடுமைப் படுத்துறதைப் பத்தி, ரொம்ப தத்ரூபமா எடுத்துருக்காக..."

ஈஸ்வரனும் முருகேசனும் போய்ச் சேர்ந்தனர்.

"ஸ்டிராங்கா ரெண்டு டீ போடுங்க அண்ணாச்சி."

"வடை பஜ்ஜி சாப்புடுறீங்களா? சூடா இருக்கு."

"ரெண்டு பஜ்ஜி குடுங்க."

கையகல இலையில் பஜ்ஜிகள். முறுகலான வேக்காடு. நல்ல புடைப்பு. பொன்னிற மினுமினுப்பு. சட்னியும் ஊற்றிக் கையில் தந்தனர்.

"சாப்புடுங்க முருகேசன்."

"ம்."

முருகேசன் நல்ல கறுப்பு. அடர்கறுப்பு. மினுமினுப்பு இல்லாத மங்கலான கறுப்பு. மேல் உதடு சற்று கிழித்த மாதிரியோர் தோற்றம். இடது கண் மட்டும் சற்றே புடைத்திருப்பது போன்ற வித்தியாசம்.

ஆனால், திரேக அமைப்பு வெகு லட்சணம். படு கச்சிதம். வெள்ளை வேட்டி. நாவில் பட்டால் நனைகிற மென்மை. கண்ணியமான வெள்ளை நிறக் கதர்ச்சட்டை. பார்க்க அழகாகவே இருக்கிறான்.

கையைக் கழுவினர். டீயை வாங்கினர்.

"முருகேசா, ஒரு நல்ல பொண்ணு இருக்கு, பாக்குறீகளா?"

"எங்க?"

"எங்க ஊர்லேதான்."

"படிச்சிருக்கா?"

"நாலாப்போ, ஆறாப்போதான் படிப்பு. பெரிய படிப்பு இல்லே. ஆனா... நல்ல லட்சணம். குத்துவிளக்கு மாதிரி கொணம். வீட்டை வெளிச்சமாக்கும். மங்களகரமாக்கும். ஏழை பட்ட வீடு. ஏழைக்கு யாரு நாதி? சொந்தபந்தம் வத்துன கொளத்தைக் கண்டா... நிக்குமா? அண்டி வருமா? அடிச்சுப் பறந்துராதா?"

"நூத்துலே ஒரு வார்த்தை. நீங்க சொல்றது. மாமன். மச்சினன், சித்தப்பன், பெரியப்பன்ங்குற சொந்தம் இருக்கே... அது இந்த ஆகாயத்தைப் போலத்தான். வெறும் தோற்றம். கண்கட்டு மாயம்."

"அதனாலேதான் அந்தப் பொண்ணுக்குப் பரிதாபப்பட்டு நா அலையுதேன். நல்ல ஒழைப்பாளி. ஒண்ணைப் பத்தாக் குவா. பத்தை நூறாக்குவா..."

“நீங்க சொல்றதைப் பாத்தா... நா மனசுக்குள்ளே போட்டு வெச்சிருக்குற கணக்குப் பொருந்திவரும்னு தோணுது. சீராக வந்தா... முடிச்சிருவோம்...”

முருகேசனின் கறுத்த முகத்தில் புடைத்திருந்த அந்தக் கண்ணில், ஓர் ஒளிக்கீற்று. உயர்ந்த இமை விரிப்பு. சற்றே கிழிந்த உதட்டில் பூத்த நிம்மதிப் புன்னகை, அவனது முகத்துக்கே ஓர் அழகைத் தந்தது. வெள்ளைச் சட்டையின் பளீரிடலில் முகத்தின் கறுப்பு இன்னும் சற்று அடர்த்தியாகி, அதுவே ஒரு கவர்ச்சியாகத் தெரிந்தது.

ஈஸ்வரன் மனசுக்குள் ஒரு காட்சி. முருகேசனும் வடிவழகியும் மாலையும் கழுத்துமாக... பட்டுச்சேலையும் பட்டுவேட்டியுமாக... பிள்ளையார் கோயில் நோக்கி...

அவனுக்குள் பெருமிதத் ததும்பல். எடுத்த காரியத்தில் கொடியை நாட்டிய பூரிப்பு. ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை அமைத்துத் தருகிற கனவு, கைகூடி வந்த மகிழ்ச்சி.

## 5

**ஊ**ர் வந்துசேர்ந்த ஈஸ்வரனுக்கு ஒரு வேலையை ஒப்படைக்கக் காத்திருந்தது ஊர்.

“ஒன்னை ஊர்த்தலைவர் கூப்புடுதாரு” என்ற கட்டளைதான் அவனை மோதியது, ஊர் வந்து சேர்ந்தவுடன்.

“என்னத்துக்கு?”

“போனாத் தெரியும்லே?”

ஊர் மடத்திலேயே இருந்தார் தலைவர். நரைத்த முறுக்கு மீசை. கறுத்த முகத்தில் அனுபவரேகைகளாகச் சுருக்கங்கள். சுருக்கங்களை மறைக்கிற நரை ரோமங்கள்.

“கூப்டீகளாமே?”

“அடடே... ஈஸ்வரனா? வாப்பா... ஒன்னைத்தான் தேடிக்கிட்டிருந்தேன், நேத்திலிருந்தே... எங்க போயிருந்தே?”

“இராசபாளையம் போயிருந்தேன். மூணு தாட்டு பருத்தி வீட்லே கெடந்துச்சு. அதைக் கொண்டுபோய் வித்துட்டு வர்றேன்.”

“அப்புடியா? சரி... காமாட்சியைக் கொண்டுபோய் அவா வாக்கப்பட்ட ஊர்லே வுட்டுட்டு வா...”

“நானா...?”

“ஆமாப்பா... ஊரே கூடி நின்னு ஒரு மனசா எடுத்த முடிவப்பா இது.”

“ஊரு முடிவா...? ஏன்... என்ன வெஷயம்?”

தலையும் புரியாமல், காலும் புரியாமல் தவித்துக் குழம்பிய ஈஸ்வரனைப் பரிவோடு பார்த்துப் புன்னகை செய்த ஊர்த் தலைவர்.

“அடடே... ஒனக்குத்தான் நேத்து நடந்த வெஷயம் தெரியாது இல்லே? இப்புடி உக்காரு... முழு வெவரத்தையும் ஆதியோடந்தமா சொல்லுதேன்...” என்று உட்கார்கிற இடத்தைக் காட்டினார், ஊர்த் தலைவர்.

தலைப்பிரசவத்துக்கு காமாட்சியை அழைக்கிற வைபவத்தில் வந்த வாய்ச்சண்டை, வம்புதும்பு. வீறாப்பு விவகாரம். சம்பந்திகளுக்குள் நிகழ்ந்த காரசாரமான சண்டைச் சச்சரவு.

குழந்தை பிறந்து பத்து மாதமாகியும், வீம்பு வீறாப்பில் அழைக்க வராத புருசன். வாழாவெட்டியாக இருந்த காமாட்சி. பிரச்னையாகி ஊர்ப் பஞ்சாயத்தாகி... நேற்று ஒரே கசமுசா. 'காச்சு மூச்' சென்று ஒரே சண்டைக்காடு. கடைசியில் —

'சண்டை போட்டுட்டு கூட்டிட்டு வந்த மாமாவும் அத்தையும் எங்க வூட்டு வாசப்படியை மிதிக்கக் கூடாது. கோவிச்சுக்கிட்டு வந்த காமாட்சியை நானும் கூட்டிட்டுப் போக மாட்டேன். அவளாகவே வந்தா... வைச்சு வாழச் சம்மதம்' என்று கணவனின் நிபந்தனையுடன் கூடிய சம்மதத்தை ஊர் பெற்றது.

காமாட்சியை யாருடன் அனுப்புவது?

ஊரையே யோசிக்க வைத்த கேள்வி. மண்டை குடைகிற கேள்வி.

ரெண்டு மைல் தூரம் காட்டுப்பாதையில் சைக்கிளில் போகணும். அப்புறம் பஸ் ஏறி... முப்பது மைல் பயணம்.

கைக்குழந்தை. இளவயசுப் பெண். யாரை நம்பி இத்தனை தூரம் அனுப்புவது?

வயசாளிகளே ஜொள்ளுவிட்டு வழிகிற காலம். வயசுப் பையன்களைச் சொல்லவே வேண்டாம். என்ன செய்ய?

ஊரின் தீவிர யோசிப்புக்குப் பிறகு பிடிப்பட்ட ஒரே ஆள்... ஈஸ்வரன். நம்பிக்கையான ஆள். பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பான். பத்தரைமாற்றுத் தங்கமான பையன்.

"ஒனக்கு ஆயிரம் பாடுகள் இருக்கும் பாடுகளோட ஒரு பாடாக இதை நெனைச்சு நீ செய்யணும். ஒரு பொண்ணு வாழ்க்கையிலே குத்துவிளக்கு ஏத்தி வைச்ச புண்ணியம்

கெடைக்கும்" என்று முடித்தார் ஊர்த் தலைவர். கெஞ்சுதலோடு, வேண்டுகிற குரலோடு அவர் சொன்ன விதம்.

இவனுக்குள் விசிலடிக்கிற மனசு. றெக்கையடித்துப் பறக்கிறது. மேகங்களிடையே உல்லாசமாக மிதக்கிறது. கரும்பு தின்னக் கூலியா? விருந்து உண்ண மறுப்பா?

இதென்ன, பாடா? கிரீடம். மரியாதை. 'நம்பகமானவன்' என்று ஊரே நம்புவதற்கான சான்றிதழ். 'பண்பானவன், ஒழுக்கமானவன்' என்று ஊரே வழங்குகிற ஐ.எஸ்.ஐ முத்திரை.

சந்தோஷமாகச் சம்மதித்தான்.

அரிசி, பருப்பு, கருவாடு, இஞ்சி என்று தாய்வீடு பொருள் சேகரிக்க ரெண்டு நாளாயிற்று. அதைக் கொண்டு போய்ச் சேர்க்க ஒரு நாள். மறுநாள்...

இடது கையில் குழந்தையிருக்க... கேரியரில் 'தத்துப்புத்தி' ஏறினாள், காமாட்சி. சைக்கிளைச் சாயவிடாமல் மூச்சு பிடித்து நிறுத்திய ஈஸ்வரன்.

"நல்லா உக்காந்துக்கிட்டீயா...? புள்ளையை நல்ல புடிச்சுக்கோ. ப்ரீவீல்ல சீலை சிக்கிராம... கவனமா பாத்துக்கோ..."

நல்லுணர்வில் பிறந்த அக்கறையான கேள்விகள், பாசப்பதைப்புடன் வெளிப்பட...

பின்கனத்தில் தள்ளாடும் சைக்கிளை மெள்ள உருட்டி,... தடுமாற்றத்துடன் பெடலை மிதித்து... ஏறி... சைக்கிளை சமனப்படுத்தி உருட்டிய பிறகுதான்... அவன் உயிர், அவனிடம் வந்து சேர்ந்தது.

இந்த வேலையில் நான்கு நாட்கள் கரைய... முருகேசன் விவகாரம் கவனிக்க முடியாமல் போயிற்று.

ஆயினும் –

காமாட்சியின் வாழ்க்கையில் படிய இருந்த இருளை அகற்றி– குத்துவிளக்கு சுடரொளியில் அந்தச் சிறு பெண்ணின் முகம் பிரகாசிப்பதைப் பார்த்த நிம்மதியுடன் –

பத்து மாத மழலை தன் பிஞ்சுக் கையை ஆட்டிச் சொன்ன 'டாட்டா' வில் உள்ளமே கரைந்து பரவசப்பட்ட மன நிலையில், ஈஸ்வரன்.

சைக்கிளில் பெடலை பின் பக்கமாகச் சுழற்றினால், ப்ரீவீலின் இரைச்சல் ஒரு சங்கீதம் போல மனசை லயப்படுத்தியது. வேகவேகமாக முன்பக்கமான பெடலை அழுத்திவிட்டு பின்பக்கமாக சுழற்றுகிற சுகமான விளையாட்டில் ஈஸ்வரன்.

சைக்கிள் பறக்கிற வேகத்தில் எழுகிற காற்றின் மோதலில் உப்பிப் புடைக்கிற சட்டையின் முதுகு. வழிகிற கழுத்து வியர்வையில் காற்று பட்டு, சில்லென்று படர்கிற பரவசச் சுக உணர்வு.

ஊரோரத்து ஆலமரத்து நிழலில் எதிர்ப்பட்ட மூர்த்தி.

"என்ன ஈஸ்வரா... இப்பத்தான் வாரீயா?"

"ஆமா... ஏதாச்சும் விசேஷமா?"

"ம்... நீ ஏற்பாடு பண்ணியிருந்த பையன்..."

"யாரு... முருகேசனா?"

"ஆமா... அவன்தான் அம்மாவோட வந்து வடிவழகியைப் பாத்துட்டுப் போயிருக்கான்.

அசிரத்தையாக ஒற்றைக் காலை ஊன்றி நின்று பேசிய ஈஸ்வரன், இத்தகவலால் ஈர்க்கப்பட்டான். ஆவல் பறப்போடு, 'தட புடா' வென்று இறங்கினான். ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி, 'கிளிப்' பைத் தட்டிவிட்டான்.

உற்சாகமும் ஆர்வமும் போட்டி போட மூர்த்தியை நெருங்கிய ஈஸ்வரன்... "ம்... அப்புறம்?" என்றான். ஆலமர இலைகளின் நிழலுருவங்களும், அவற்றை மீறிச் சிந்திச் சிதறியிருந்த வெயில் துணுக்குகளும் மூர்த்தியின் மேல் தீட்டப்பட்ட ஓவியமாகத் தோன்றியதை... ஈஸ்வரனின் உள் மனசில் ஒரு பகுதி ரசித்துக்கொண்டிருந்தது.

"அவனுக்கு பொண்ணு ரொம்பப் புடிச்சு போச்சு. அவனோட அம்மாவுக்கும் புடிச்சு போச்சு. நகைநட்டு விஷயத்துலே ஒண்ணும் அழுத்தலே. 'போட்டதைப் போடுங்க, போதும்'னு பெருந்தன்மையா சொல்லிட்டாக. வடிவழகியோட அம்மாவும் அரை மனசும் கொறை மனசுமா சம்மதிச்சிட்டாக..."

"சபாஷ்... அப்புடிப் போடு..." றெக்கையடித்துப் பறக்கிற மன உற்சாகத்தில் ஈஸ்வரன். வேட்டியின் அடி நுனியால் முகத்து வியர்வையை துடைத்துக்கொண்டான். முகமெல்லாம் பூத்திருந்த சிரிப்பு. கண்ணில் மனசின் சந்தோஷ வாசம். உதட்டுச் சிரிப்பில் ஒரு குழந்தையின் துள்ளல். கனவு கைகூடிவிட்ட ஆனந்தம்.

"பெறகென்ன மூர்த்தி... எல்லா வெஷயங்களும் கூடிச் சேர்ந்துட்டா... மாலை பூத்துரும்லே?"

றெக்கை கட்டிப் பறக்கிற அவனது மனசின் மழலைத் தனத்தைப் பார்த்து வேதனைப்பட்டவனாக முகம் வாடுகிற மூர்த்தி. நிழலாகக் கறுக்கிற முகம்.

"என்ன மூர்த்தி.. ஒரு மாதிரியாயிட்டே?"

"சின்ன புள்ளை மாதிரி நீ குதூகலப்படுதே. யாருக்கு 'மாலை பூக்கணும்' னு நீ நாயா பேயா அலையுறீயோ... அந்த வடிவழகி, இன்னும் வார்த்தை பூக்கலியே...?"

"என்ன சொல்லுதே மூர்த்தி?"

கல்லெறிபட்ட குருவியின் உயிராகத் துடிக்கிற ஈஸ்வரன். உதட்டில் உயிரின் அதிர்வு. அதன் சவச் சாயல். மனமயான மாய் முகம்.

"ஆமா.. ஈஸ்வரன். 'நெனைச்சது கெடைக்காட்டா... செத்தா போவாக? கெடைச்சதை வெச்சு, பொழைச்சுட்டுச் சாக வேண்டியதுதான்' னு பெரு மூச்சோட சம்மதிச்சுட்டாக, வடிவோட அம்மா. ஆனா... வடிவு? வாயே தெறக்கலே. முகத்துலே உசுர் இல்லே. தாயைச் சாகக் குடுத்தவா போல, கொறாவிப் போயிருக்கா..."

"ஏன்? வாத்தியார் உத்தியோகம். கைநெறைய சம்பளம். நல்ல பையன். இவளுக்கு கசக்குதாக்கும்?"

கோபமாகப் பேசினாலும்... குரலில் உயிரில்லை. தோல்வியை முன்னுணர்ந்த மனப் பகீரில் பதட்டமடைந்த சோகத்தில் நனைந்து துவண்ட குரல்.

விளிம்பில் துடித்த மிச்ச உயிரில், துடிக்கும் குரலாகக் கேட்டான்.

"இன்னும் 'வேண்டாம்' னு வாய் தொறந்து சொல்லலே இல்லே? முடிவா ஒண்ணும் வடிவு சொல்லலே, இல்லே?"

"மொசல் கடிக்குற நாய்க்கு முகரை தெரியாது? வாயைத் தெறந்து சொல்லணுமாக்கும்?"

கோபக் கொதிப்பான மூர்த்தியின் சிடுசிடுப்பில் மிச்ச உயிரும் அறுபட்ட பல்லி வாலாகத் துடித்தடங்கியது, ஈஸ்வரனின் நம்பிக்கை.

ஆணிவேரறுந்த உணர்வுகள். நினைவுகளே செத்துப் போன மாதிரியோர் சூன்யம். சலனமற்ற உறைவு.

நம்பிக்கையின் மரணத்தில் வெயிலை வெறித்த ஈஸ்வரன். வெயிலின் வெள்ளையில் கரைகிற கொக்குள். அதன் கால் மஞ்சள். நீளமான வேலி விளாரில் நிற்கிற கரட்டான். விளாரின் ஆட்டத்திற்கேற்ப எச்சரிக்கையாகிற அதன் கண்ணின் தந்திரம். வெட்டுண்டு காய்ந்து உலர்ந்து புதராகக் கிடக்கிற வேலிமுட்கவைகள்.

"சரி... அம்புட்டுத்தானா?" உயிரற்ற அவனது விசாரிப்பின் அர்த்தமின்மை. அர்த்தமின்மையான அசட்டுக் கேள்வியில் அர்த்தமாகிற அவனது மன அயற்சியின் பரிமாணம்.

மூர்த்திக்கே பாவமாக இருந்தது.

"எதுக்கும்... நீ போய் பேசிப் பாரேன். வடிவோட மனசுக்கு வெளங்குகிற மாதிரி, இங்கிதமா எடுத்துச் சொல்லிப் பாரேன்..."

"சொன்னா... காய் பழுக்குமா?"

தாகத் தவிப்பான அவனது கேள்வியின் துடிப்பு. கேள்வி நுனியில் அவனது உயிரின் துடிப்பு.

"ரோமத்தைக் கட்டி மலை இழுக்கிற மாதிரித்தான். வந்தா... மலை. அ(று)ந்தா... ரோமம். காசு பணமா கையை வுட்டுப் போகப் போகுது? முயற்சிதான் பண்ணிப் பாரேன்."

வெயிலின் உக்கிரம். கானல் அலை கக்குகிற தகிப்பு. புழுக்கம். வியர்வை நசநசப்பு. முள்முள்ளான வியர்வை உறுத்தல்கள், மனசுக்குள்.

## 6

**ம**திய நேரம் குளித்தால் சூடு பிடிக்கும். உஷ்ணக்கடுப்பு உயிரைப் பிடுங்கும். வேறு வழியில்லை. பயண நசநசப்பு. சைக்கிள் மிதித்த அயற்சி. அலுப்பு.

வீட்டு சிமிண்டுத் தொட்டியிலேயே நீரை அள்ளி ஊற்றினான் ஈஸ்வரன். ஜில்லென்றிருந்தது. அவசரக்குளிப்பு.

தலையைத் துவட்டிக்கொண்டே மணியைப் பார்த்தான். ரெண்டு பத்து.

மூன்று மணியானால் காட்டு வேலைக்குப் போன அலமேலு வந்துவிடுவாள். அதற்குள் வடிவைப் பார்த்தாக வேண்டும்... பேசிவிட வேண்டும். எப்படியாவது அவளது கோணல் மனசை நேர்ப்படுத்த வேண்டும்.

என்னத்துக்காகக் கோணல்? சம்மதமின்மைக்கு என்ன காரணமாக இருக்க முடியும்?

முருகேசனின் கறுப்பா? புடைத்த கண்விழியா? மேலுதட்டின் இலேசான கிழிவா? அழகை வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறாள்? வாழ்க்கை நடத்த நல்ல குணமுள்ள ஆண்மகன் போதாதா? பண்பு போதாதா? உத்தரவாதமான வருமானம், பாதுகாப்பான இருப்பிடம் போதாதா? நகைநட்டு வேண்டாம் என்கிற பெருந்தன்மை ஒன்று போதாதா?

இப்படி ஒரு பண்பும் வருமான வசதியும் உள்ள மாப்பிள்ளை சீதேவிபோல வலிய வருகிறபோது– 'வேண்டாம்' என்று ஏன் சொல்கிறாள்?

வடிவுக்கு அறிவில்லையா? தான் பட்டபாடெல்லாம் வீணாகிவிடுமா?

கைலியைத் தேடினான். கிடைத்தது. பனியன் கிடைக்க வில்லை. அண்டிராயர் கிடைக்கவில்லை. வீடுமுழுக்கத் தேடி னான். ஆள் அரவமற்ற வீடு.

சூனியத்தால் நிரம்பிய வீடு. உயிரில்லாத — உயிர்களில்லாத வீடு. வெறும் வீடு!

சோறு ஆக்கி வைத்துவிட்டு, அந்தப் பெரியம்மா போயிருப்பார்கள். ஒற்றைக்கட்டை வீடு. வீடு முழுக்க அதன் தாறுமாறுத்தனம். தூசி துப்பட்டை. குப்பைக்கூளம். அழுக்குத் துணிகளின் அலங்கோலம்.

நெஞ்சில் அறைகிற வெறுமை. மனிதத்தனிமை. ஆள் அரவமற்ற வீடு உணர்த்துகிற நாதியற்ற தன்மை. அநாதைமைத் தகிப்பு.

ஈஸ்வரனுக்குள் கற்றையாக முட்டி மோதிப் பீறிட்ட சோகம். மனப் பகீர். அடிவயிற்றில் பக்கென்று ஏற்பட்ட வெறுமை.

அஸ்தமனச் சூரியனையும் கன்றிச் சிவந்த மேகக் குழைவையும் பார்த்துப் பார்த்துக் கும்பிட்டுக் கும்பிட்டுப் புலம்பிய ஒரு டவுசர்நாளில் – உயிர் பிரிந்த அய்யா.

கஞ்சிக்கும் வழியில்லாத வறுமை, வீட்டுக்குள் கால் நீட்டிப் படுத்துக் குறட்டைவிட்ட ஒரு கொடிய பொழுதில்... ‘புள்ளையை விட்டுச் சாகிறோமே’ என்ற புலம்பலும் அழுகையுமாக உயிர் பிரிந்த அம்மா...

அதற்கும் முன்பே விலகிச்சென்று, அடையாளமற்றுப் போய்விட்ட உறவுப்பட்டாளம்... உயிரற்றுப்போன வீடு. நாலு சுவரும் வாசலும், கூரையுமான பொருளான வீடு. வீடாக இல்லாத வீடு. சக உயிர்த்துணையின் அவசியத்தை உணர்த்துகிற விசாலமான வீடு. ஒளித்தேவை உள்ள இருள் வீடு.

அண்டிராயர் கிடைத்தது. பனியன் கிடைக்கவில்லை. தேடித் தேடியலைந்தான். அயற்சி... சோர்வு... அலுப்பு... எரிச்சல்!

நாதியற்றவனுக்குத்தான் நாதியின் அருமை புரியும். உறவுகளைத் தொலைத்தவனுக்குத்தான் உறவின் சேகரம் தெரியும். இரவிலும் பகலிலும் பொழுதுகளின் ஒவ்வொரு

அணு நகர்விலும் மனிதப் பாசமில்லாத பாலைத்தகிப்பைத் தொட்டுத் தொட்டு உணர்ந்து.. துடித்துத் துடித்து ரணப்பட்டு, உறக்கமற்ற மனஉளைச்சலில் உழன்று தவித்த இவனுக்குத்தான் — நாதியற்ற வடிவழகிக்கு இரக்கப்படுவதன் நியாயம் புரியும். தலையிட முடியாத வயதிலும் தலையீடு செய்து, தலைச் சுமையோடு தவிக்கிற அவசியம் புரியும்.

மற்றவர்களுக்கு... ஏன் மூர்த்திக்கேகூட இது வேண்டாத வீண் வேலையாகத்தான் தோன்றும். வழியில் போய்க்கொண் டிருந்த சனியனை தலையில் ஏற்றிச் சுமக்கிற அப்புராணித் தனமாக, அசட்டுத்தனமாகத் தோன்றும்... 'யாரோ... எவரோ வடிவு... அவளைப் பற்றி இவனுக்கென்ன அக்கறை' என்றே எண்ணத் தோன்றும்.

போகட்டும்... அவரவர் நியாயம் அவரவரிடம். யாரும் எனக்குத் தீர்ப்பு சொல்ல வேண்டாம். என் மனசாட்சியின் தீர்ப்பே, என் வழிநடைப்பாதை; காலடி வெளிச்சம்.

வடிவழகியிடம் உடனடியாகப் பேசணும். சம்மதிக்க வைக்கணும். இப்போதே... இந்தக் கணமே...

பனியன் கிடைக்காத நிலையில், சட்டையை மட்டும் எடுத்து மாட்டிக்கொண்டு செருப்பில் நுழைந்த கால்களோடு... கதவைச் சாத்திவிட்டு தெருவில் இறங்கினான்.

தெரு வெயில் நிறம் மாறத் துவங்கியிருந்தது. வெள்ளை வெயில், பொன்னிறமாகிக் கொண்டிருந்தது.

டக்கர் தடதடத்துப் போய்க் கொண்டிருந்தது. டக்கரின் பின்பக்கத்தில் பல்கலப்பை. பல் பல்லாகக் கீழ்நோக்கி இறங்கிய டிரில்லரின் கொழுக்கம்பிகள்.

எருமைகள் மினுமினுப்பாக வந்தன. வாலாட்டிக் கொண்டு சோம்பல் நடைபோட்டன. மேய்ந்துவிட்டு... கல் கிடங்குத் தண்ணீரில் விழுந்து நீந்தி வருகின்றன.

வரமாட்டேன் என்று முன்னங் கால்களைப் பரத்தி அடம்பிடிக்கிற ஆட்டுக்குட்டிகளைக் கழுத்தில் கட்டிய கயிற்றால் இழுத்துச் செல்கிற கிராமத்தாட்கள்.

ஈஸ்வரன் வடிவழகு வீடுநோக்கி நடந்தான். 'இப்படிப் பேசணும், அப்படிப் பேசணும்' என்று மனசுக்குள் போட்டுவைத்த ஒத்திகைகள். அடுக்கு அடுக்காக வரிசைப்படுத்திப் பார்த்த வார்த்தைகள். வாத உத்திகள்...

வீட்டு முற்றத்திலேயே நின்ற வடிவழகி. அம்மாவை எதிர்பார்த்து நின்றிருப்பாளோ... இவனைப் பார்த்ததும் முகமாற்றம். முகத்தில் உணர்வு மாற்றம். முகத்தில் ஒரு விறைப்பு. கண்ணில் ஒரு கோபத்தெறிப்பு. வெறுப்பும் கசப்பு மாக முகத்தை அங்கும் இங்குமாகத் திருப்பிக்கொண்டாள். இருப்புக் கொள்ளாத சகிப்பின்மையில் தத்தளிக்கிற — அலைபாய்கிற — அவளது முக அசைவுகள்.

இவன் கிட்டத்தில் போனான்.

"என்ன வடிவு, ஓங்கிட்டே முக்கியமான வெஷயம் ஒண்ணு பேசணும்..."

"வாங்க... நானும் ஒங்ககிட்டே ஒரு வெஷயம் கட்டண்ரைட்டா பேசணும். வீட்டுக்குள்ளே வாங்க..."

"ஒங்கம்மா இல்லியா?"

"இல்லே... புஞ்சைக்குப் போயிருக்காக..."

"நல்லதாப் போச்சு..."

"என்ன?"

கேள்வியுடன் வாசல்படியில் கால்வைத்தாள். உள்ளே போனாள். இவனும் உள்ளே போனான், ஒரு கேள்வியுடன்!

“ஒன்னைப் பொண்ணுபாக்க வந்துருக்காகளாம்லே?”

இவன் குரலில் மகிழ்ச்சித் துள்ளல்.

“ம்” என்ற இறுகலான குரலில் அவள்.

திண்ணையில் உட்கார்ந்தான் ஈஸ்வரன். உட்காராமல் நின்ற நிலையில் அவள். முகத்தில் அனல்தெறிப்பு. கண்ணில் தீ மின்னல். கோபச் சீறலாய் வார்த்தை வெடிப்புகள். கோடைகால இடிமுழக்கமாய் திடுமென்ற தாக்குதல்.

“ ‘எனக்கு மாப்புள்ளை பாருங்க... கல்யாணம் மூய்ச்சு வையுங்க’னு நாங்க ஒங்ககிட்டே மன்றாடித் தவிச்சமா? கெஞ்சிக் கூத்தாடுனமா?”

“இல்லே...”

“எனக்கு மாப்புள்ளை பாக்க நீங்க யாரு? ஒங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? சொந்தமா, பந்தமா? எங்க வீட்டு வெஷயத்துலே நீங்க எப்படி மூக்கை நொழைக்கலாம்?”

ஆங்காரமும் ஆத்திரமுமாய் அவளது வார்த்தைகள்.

ஈஸ்வரன் வெலவெலத்துப் போனான். எதிர்பார்த்திராத மூர்க்கத் தாக்குதல். அவனது ஆணிவேரையே அறுக்குற அரிவாள் வீச்சு.

இந்த ராட்சத மூர்க்கத்தில் அவன் அதிர்ந்து போனான். உள்ளுக்குள் காலியாகிப் போனான். பேச நா எழாமல் தவித்தான். விரட்டுப்பட்டு மூலையில் சிக்கிக்கொண்ட எலியாக விழித்தான்.

“என்ன... என்ன... சொல்லுதே...?

"ஒங்களுக்கு என்ன தெரியும்? பொம்பளை மனசு தெரியுமா? மனசுலே உள்ள நெனைப்பு தெரியுமா? நெனைப்புலே உள்ள நெளிவுசுளிவு தெரியுமா? ஒரு இழவையும் தெரியாத பாமரமா இருந்துக்கிட்டு... என்னைக் காப்பாத்த வந்துட்டீகளாக்கும்? நல்ல மனசு மட்டும் இருந்தாப் போதுமா? அறிவு வேண்டாமா?"

"இல்லே வடிவு..."

"பேசாதீக... வாயைத் தொறந்து. இதோட மூடிக்கங்க. இனிமே பேசுறதுக்கு ஒண்ணுமில்லே... மட்டுமரியாதையோட விட்டு வெலகிப் போயிருங்க..."

"வடிவு... நீ ஒண்ணு புரிஞ்சுக்க..."

"நா ஒண்ணும் புரியவும் வேண்டாம். எழவு கூட்டவும் வேண்டாம். என்னைக் காப்பாத்துற – ரட்சிக்குற – கடவுள் மாதிரியெல்லாம் நீங்க ஒங்களை நெனைச்சுக்கிட வேண்டாம். நீங்களே நாதியத்த ஆளு. நாதியத்த எனக்கு எரக்கப்பட வந்துட்டீகளாக்கும்?"

அவனது ஆழத்தில் விழுந்த அரிவாள் வெட்டு. 'நீயே நாதியத்த ஆளு'. அவனது உயிரையே அதிரவைக்கிற கேள்வி. ஆத்மாவையே அறுக்கிற அசுரக் கேள்வி. உயிரறுந்து போன வனாக ஈஸ்வரன்.

"எனக்கு மாப்புள்ளை தேடித்தேடி, என்னைக் கேவலப் படுத்துனது போதும்...உசுரைக் கிழிச்சது போதும்...உங்க ஜோலியைப் பாத்துகிட்டு போங்க. மாப்பிள்ளை... 'அது இது'ன்னு சொல்லிக்கிட்டு இந்த வாசப்படியை நீங்க மிதிச்சா... எம் பொணத்தைத்தான் பாப்பீக... போங்க இப்ப..."

ஊர்ச்சபையில் செருப்படி பட்டவனாக உணர்ந்தான். பிடரி பிடித்துத் தள்ளப்பட்டதைப் போல... விரட்டப்பட்டு

வெளியே வந்து விழுந்தான், ஈஸ்வரன். வீசியெறியப்பட்ட குருவிப்பிணமாக அவன் உறைந்து போய்விட்டான். உடைந்து நொறுங்கித் தூளாகி... கண்ணீரில் கலந்து காங்கிரீட்டாகி விட்டான்.

'சொந்தமா, பந்தமா?'

'நாதியற்ற ஆளு நீங்க...'

'எம் பொணத்தைத்தான் பாப்பீக...'

அவனுள் விழுந்த அரிவாள் வெட்டுகள். ஆத்மாவின் ரத்தத்தை வழியச் செய்த மரணவெட்டுகள்.

நடைப்பிரேதமாகத் தெருவில் அவன்...

அவனுக்கு அவனே இழிவாகத் தோன்றினான்.

அவளது மௌனத்துக்குள் இத்தனை வெறுப்பா? வெறும் பார்வையும் வேதனைப் பெருமூச்சுமாய் ஒதுங்கியிருந்த அவளுக்குள்... இத்தனை பெரிய எரிமலையா? கசப்பு உணர்வா?

மலைத்துப்போன மனநிலையில் அவன்.

வீட்டுக்குள் அவள் விசும்புகிற சத்தம்... வெடிக்கிற அழுகையை உள்ளே அமுக்க முனைகிற குரல் குழப்பம்.

இதையெல்லாம் உணரமுடியாத — யோசிக்க முடியாத — மரத்துப்போன மனநிலையில் அவன்!

அவன் அந்த வீட்டைவிட்டு மட்டும் வெளியேறவில்லை. தனிக்கட்டை கட்டையாகிப்போன உயிரற்ற மனம். அவமானமும் இழிவும் தாங்கமுடியாத மனசின் வருத்தம்.

ஊரைவிட்டே வெளியேறிப் போய்விட்டான்.

சகிக்க முடியாத தோல்வி. இழிவு, அவமானம். வடிவழகியின் குத்தீட்டியான பார்வை. இத்தனையை எதிர் கொள்கிற மனத்திராணி இல்லை, அவனிடம்.

அரவமில்லாமல் ஊரைவிட்டு ஓடிப்போய்விட்டான்.

அவனுள் வெடித்துச் சிதறிய அவளது விசும்பலின் உருவமற்ற சத்தம் உலவிக்கொண்டேயிருந்தது.

கோபமும் சிடுசிடுப்புமாய் — வெறுப்பும் வேக்காடுமாய் சீறிச்சினந்த வடிவழகிக்குள்ளிருந்து விசும்பல் ஏன் வந்தது என்ற கேள்வி மனசுக்குள் உறுத்தவில்லை.

## 7

மூன்று வருஷங்களுக்கு மேலாகிட்டது. ஈஸ்வரன் பாண்டிச்சேரி பக்கம் போய்விட்டான். பலசரக்குக் கடை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தவன், ரெண்டே வருஷத்தில் ஒரு சேரியில் சின்னதாக சொந்தக் கடை வைத்துவிட்டான். நாளொன்றுக்கு ரெண்டாயிரத்துக்கு வியாபாரம் நடக்கும்.

கிராமத்துக் காயத்தைத் தொலைதூரத் தலைமறைவு வாழ்க்கை ஆற்றியிருந்தது. புது மனிதனாகி, உற்சாகமாக வியாபாரத்தைக் கவனித்தான்.

சைக்கிளின் கேரியரில் குட்டிச் சாக்குகளை உருட்டிக் கட்டினான். தூக்குப் பைகளை ஹாண்ட்பாரில் தொங்க விட்டான்.

நகரத்தின் வியாபார மையம் நோக்கி சைக்கிளை உருட்டினான். அப்போதுதான் அந்தக் காட்சி...

தெருவோரத்தில், மரத்தடியில் பிச்சைக்காரி போல ஒருத்தி. மடியில் பிள்ளை. சாயம்போன பூப்போட்ட சேலையில் கிழிசல். ஜாக்கெட்டில் ஒட்டுத் தையல். எண்ணெய் காணாத பரட்டைத் தலை. செவிகளை மறைத்துத் தொங்கிய செம்பட்டையான ரோமக் கற்றைகள்.

தரையில் உட்கார்ந்திருந்த அவள் மடியில் இருந்த கைப்பிள்ளை 'வீர் வீர்' என்று அழ... மரத்துப்போன சோக விழியின் வெறிப்பில் அவள்.

'பார்த்த முகமாக இருக்கிறதே' என்ற நமைச்சல் மனசில். பிரேக் பிடித்தான். இடதுகாலைத் தரையில் ஊன்றி நின்று, அவளைக் கூர்ந்து பார்த்தான்.

பார்த்த முகம்... பழகிய முகம்... அடடே... நம்ம ஊர்ப் பெண்.

மரப்பாச்சிக்குப் பட்டுச்சேலை உடுத்தி, மாலையும் கழுத்துமாகத் தெருவில் மணமகளாக நடந்த பூமாரியா...? கால் முளைத்த தேவதைச் சிறுமியாக மணமகனுடன் இணைந்து நடந்த அந்தப் பூமாரியா...?

இவளது கல்யாண ஊர்வலத்தில் நடக்கிறபோதுதான் ஜன்னலோரத்துப் பூவாக... வடிவழகியின் இன்னொரு முகத்தைப் பார்த்தான். அந்தப் பூமாரியா...?

இங்க எப்படி வந்தாள்...? இராசபாளையம் பக்கமில்லே வாக்கப்பட்டிருந்தாள்...?

"ஏம்மா... நீ பூமாரிதானே...?"

இந்தக் கேள்வியில் தாக்குண்டவளைப் போல வெல வெலத்துப் போனாள் அவள்.

"ஆமா... நீங்க... நீங்க...?"

புரியாமையில் திகைத்த அந்தப் பெண்.

பஞ்சம் பிழைக்க கடலூர் பக்கம் கூட்டிக்கொண்டு வந்திருந்த கணவன். வறுமை. வருமானக் குறைவான கூலிப் பிழைப்பு. வெக்கை, வெறுப்பு, கசப்பு, அடிதடி, சண்டை, சச்சரவு, சாபம், வசவுகள்...

எவளுடனோ ஓடிப்போன அவன்.

கிழிந்துபோன காகிதச் சித்திரமாக நைந்துகிடந்தவள், சுத்தமாக நாதியற்றுப்போக... அநாதையாக... கையில் பிள்ளையோடு... கண்ணீரோடு... கதியற்று...

“சரி, வா...”

“எங்க...?”

“என்னோட வூட்டுக்கு...”

“இங்கயா...?”

“இங்கதான். கடை வெச்சிருக்கேன்...”

கண்ணீர்த் துளிகள் கண்ணோரத்தில் முத்தாகத் திரண்டு நிற்க, விம்மிவரும் அழுகையை அடக்குகிற யத்தனிப்பில் அடிஉதட்டைக் கடித்து... அவன் புஜத்தில் முகம் பதிக்கிற அவள்...

அவலமாக நிற்கிற அவமானக் குடைச்சல் அவளுக்குள்.

“சரி... சரி... அழாதே...”

“நாதியத்துப் போயிட்டேனே...”

“மனசுல அன்பு இருந்து, ரெண்டு நாதியத்ததுக ஒருத்தொருக்கொருத்தர் ஒத்தாசையா இருந்துட்டா... நாதியத்த வங்குற வார்த்தையே இல்லாமப்போயிரும். வாம்மா பூமாரி...”

அய்யாவை இழந்தவன். அம்மாவை இழந்தவன். அன்புக்கு ஏங்கியவன், அன்பினால் செய்த உதவிக்காக செருப்படி பட்டவன். அன்பு என்கிற நீர்ச்சுனையைத் தேடித் தேடி, வாழ்க்கைப் பாலையில் தகித்தவன். தாகித்தவன்.

பூமாரியின் பாசத்தில் நனைந்தான். ஊறினான். திளைத்தான்.

இவனது முதல் பிள்ளை, பூமாரியின் ரெண்டாவது பிள்ளையாகப் பிறந்த பிறகு...

தலைப்பிள்ளைக்கு அம்மா சமாதியில் மொட்டை போட ஆசைப்பட்டான் ஈஸ்வரன்.

சொந்த மண்பாசத்துடன் அவனை ஈர்த்தது தாய்மண்.

ஊரைவிட்டுப்போன ஈஸ்வரன், ஆறாவது வருஷம் ஒரு குடும்பமாக வந்திறங்கினான் பஸ்ஸிலிருந்து.

அதே ஊர். அதே மைதானம். கட்டடங்கள் புதிதாகச் சில முளைத்திருந்தன. சின்னச் சின்ன மாற்றம்.

பஸ் ஸ்டாண்டில் இவனை வரவேற்க வந்திருந்தான் மூர்த்தி.

வரவேற்று, ஒரு டீக்கடையை நோக்கி அழைத்துச் சென்றான்.

“மொதல்ல டீ குடிங்க... வீட்டுக்குப் போகலாம்...”

பூமாரியின் பிள்ளையை ஈஸ்வரன் தூக்கி வைத்திருந்தான். பிறந்து ஒரு வருஷமான மகனை பூமாரி வைத்திருந்தாள்.

டீ சாப்பிடுகிறபோது –

கடையில் வடை வாங்கிக்கொண்டு நாலு வயசு சிறுமி, ஒரு பூச்செண்டு போல நடந்தாள். அந்தப் பூச்செண்டைக் காட்டினான் மூர்த்தி.

"இது யாரு... தெரியுதா...?"

"தெரியலியே..."

"தெரியலியா...?"

"ம்ஹூம்... தெரிஞ்சா, ஏன் இல்லேன்னு சொல்லப் போறேன்...?"

"அப்படியா...?"

"யாரது...? யாரோட புள்ளை அது...?"

"வடிவழகியோட மக..."

"வடிவுக்குக் கல்யாணம் மூய்ஞ்சிருச்சா...?"

"கல்யாணம் ஆகாமலா. பொம்பளைப் புள்ளை பொறந்துருக்கும்...?"

அந்த ஹாஸ்யம் எரிச்சலூட்டியது, ஈஸ்வரனுக்கு. பாயசத்தில் உப்பு விழுந்த மாதிரி முகத்தைச் சுளித்தான்.

"அந்தப் பாப்பா பேரு என்ன தெரியுமா...?"

ஆவலாக ஈஸ்வரன் கேட்டான்.

"என்ன பேரு...?"

"ஈஸ்வரி..."

ஈஸ்வரனின் மனப்பிரபஞ்சத்தின் கோளமுகடுகளி லெல்லாம் 'ஈஸ்வரி– ஈஸ்வரி.' என்று அந்தப் பெயர் ஒலித்தது. ஒலித்து– ஓங்காரமாக எழுந்து– ஒலியின் அலைகளாகப் பரவிப் படர்ந்து– அதிர்வுகளோடு விரிந்து விரிந்து, அகன்றுகொண்டே போன அந்தக் குரல்.

'ஈஸ்வரி... ஈஸ்வரி... ஈஸ்வரி... ஈஸ்வரி...'

ஈஸ்வரனின் பெண்பாற் பெயர்.

கோபமும் ஆங்காரமுமாகச் சிடுசிடுத்த அந்த நாளைய வடிவழகி. 'சொந்தமா, பந்தமா...? என்று சீறியவள். 'எனக்கு மாப்புள்ளே பாக்க நீங்க யாரு...?' என்று கனன்றவள்.

அந்தக் கோபத்தின் வேர், எங்கே இருந்தது...? அந்த ஆத்திரம், எந்த உணர்வின் மறுமுகம்...? அவளுக்குள் இன்னொரு முகம் இருந்ததா...?

'ஒங்களுக்கு என்ன தெரியும்...? பொம்பளை மனசு தெரியுமா...? மனசுல உள்ள நெனைப்பு தெரியுமா...? நெனைப்புல உள்ள நெளிவு சுளிவு தெரியுமா...?'

ஆவேசமும் ஆங்காரமுமாக அன்றைக்குச் சிடுசிடுத்த வடிவு. வடிவின் சீறலான சொற்கள்.

அனல் துண்டுகளாகத் தெறித்து விழுந்த அந்த வார்த்தைகளுக்குள், ஒரு புனல் முகம் மறைந்திருந்ததா...? ஒரு நதியையே அடிமடியில் மறைத்து வைத்திருந்த அந்தச் சொற்களின் உள்முகத்தைத் தொட்டுணராமற் போனேனா...? ஒரு பெண்ணின் உள்மனத்தை உற்றறியும் அறிவில்லாமல் போனேனா...?

'நல்ல மனசு மட்டும் இருந்தா போதுமா...? அறிவு வேண்டாமா...? என்று அவள் சீறிச் சினந்து சொன்ன சொல், அத்தனை கூர்மையான விமரிசனத்தைக் கொண்டிருந்ததா...?'

அடடே! நான் எத்தனை கொடிய கேணையன்...? எத்தனை பெரிய முட்டாள்...?

நீரூற்றுவதாக நினைத்துக்கொண்டே, பூச்செடியின் வேரில் அமிலத்தை ஊற்றியிருக்கிறேனா...?

'அவளுக்கு மாலை பூத்துவரச் செய்ய வேண்டுமே...' என்ற பாசப்பதைப்பில் ஓடிஓடித் திரிந்தபோது, அவளுக்குள் பூத்திருந்த ஒரு மாலையை, என்னையறியாமலேயே மிதித்து நாசம் செய்திருக்கிறேனா...?

என்னை நோக்கியே முகம் திருப்பியிருந்த ஒரு பூவை, நானே எரித்துச் சாம்பலாக்கியிருக்கிறேனா...?

ஈரமுள்ளவனா நான்...? ஈரமற்ற ராட்சஸனல்லவா...? ஒரு பெண்ணின் மௌனமான ஆத்மாவையே அணுஅணுவாக நோகடித்துச் சாகடித்த மாபாவியல்லவா...?

அடடா... இந்தப் பாவத்தை எந்தப் புண்ணியத்தால் கழுவப்போகிறேன்...? கழுவமுடியுமா...?

பூட்போட்ட கவுனும் உச்சிச் சடையுமாக நடந்துபோகிற அந்தப் பூச்செண்டையே – அதன் முதுகையே திரும்ப முடியாத பழைய கனவையே வேதனையும் வருத்தமுமாகப் பார்த்துக் கொண்டிருந்த ஈஸ்வரன்.

ஏக்கம் நிறைந்த ஒரு காதல் குயிலின் சோகக் கூவலாக 'ஈஸ்வரி... ஈஸ்வரி... ஈஸ்வரி... ஈஸ்வரி...' என்று கனவுக்குள் கேட்டுக்கொண்டிருந்தது.

"என்னங்க... நம்ம புள்ளைக்கு எப்ப மொட்டை போடப் போறோம்...? எந்நேரத்துக்கு...?

பூமாரியின் குரலழைப்பு. நிஜ உலகின் குரல். இன்றைய உண்மையின் குரல்.

கனவுக்குள்ளிருந்து தன்னைப் பிய்த்துக்கொண்டு 'இங்கு' வந்த ஈஸ்வரன், "ம்..." என்றான்.

"டயமாயிருச்சு. சாப்ட்டுட்டுப் போவம்..." என்று தடுமாற்றமும் தத்தளிப்புமாகச் சொன்னான்.

பூமாரியின் மார்பில் அணைத்திருந்த பிள்ளையைப் பார்த்தான் ஈஸ்வரன்.

நாளைய அறைகூவலாக – இன்றைய உண்மையாக – அவனுக்கு எதை எதையோ உணர்த்திக்கொண்டிருந்தது, அந்த மழலையின் புன்னகை.

ஆனந்தவிகடன்–30-04-2000 to 11-06-2000

卐

கங்கை